# உதயன்

சுடர் 30 | கதிர் 327 | வள்ளுவர் ஆண்டு 2046 | ஐப்பசி 2, திங்கட்கிழமை 19.10.2015

MEGA SALE
MEGA SALE FOR
WALL TILES
metro
TILES · GRANITE · SANITARYWARE
38, Stanley Road, Jaffna

# போர்க்குற்றச் சாட்சிகளாக தமிழ் அரசியல் கைதிகளை பயன்படுத்த அரசு திட்டம்

## இதற்காகவே அவர்கள் விடுவிப்பு என்கிறார் விமல் வீரவன்ச எம்.பி.

கொழும்பு, ஒக்ரோபர் 19
ஜெனிவாத் தீர்மானத்துக்கு அமைய, இலங்கையில் அமைக்கப்படவுள்ள கலப்பு நீதிமன்ற விசாரணையின் போது, இலங்கை இராணுவத்தினருக்கு எதிரான பலமான சாட்சியாக, சிறையிலிருந்து விடுவிக்கப்படவுள்ள முன்னாள் புலி உறுப்பினர்கள் பயன்படுத்தப்படவுள்ளதாக, எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இது குறித்து தனக்கு மிகவும் நம்பகரமான வகையில் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து விமல் வீரவன்ச நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பல்வேறு பாரதூரமான குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிச் சந்தேகநபர்களை விடுதலை செய்வதற்கான சகல ஏற்பாடுகளையும் தற்போதைய அரசு மேற்கொண்டு வருகின்றது. சிறைகளில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட முன்னாள் புலி உறுப்பினர்களை விடுதலை செய்வதாக, ஜனாதிபதி உத்தரவாதம் வழங்கியுள்ளார்.



இவ்வாறு விடுதலை செய்யப்படவுள்ளவர்களில், இலங்கை அரசுக்கும் இந்த நாட்டுக்கும் எதிராக கடந்த 30 வருடங்களில்
பக்.24

## பிரிட்டன் தூதுவராக சித்ராங்கனியின் பெயர் பரிந்துரை

கொழும்பு, ஒக்.19
பிரிட்டனுக்கான இலங்கை தூதுவராக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சித்ராங் கனி வாகீஸ்வராவின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் ரோசி சேனாநாயக்க மற்றும் முன்னாள் இலங்கை கிரிக்கட் அணியின் தலைவர் குமார் சங்கக்கார ஆகிய இருவருக்கும் இந்தப் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு விடுக்கப்பட்ட அழைப்பு நிராகரிக்கப் பட்டதனைத் தொடர்ந்து சித்ராங்கனியின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

சித்ராங்கனி 1981 ஆம் ஆண்டு முதல் இலங்கை வெளிவிவகார சேவையில் கடமையாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. சிங்கப்பூர், கனடா போன்ற நாடுகளில் ஏற்கனவே தூதுவர் பதவிகளை
பக்.24

## சீன கடற்படைக் கப்பல் வருவதற்கு அனுமதி கோரினால் ஆராய்வோம்

*பாதுகாப்புச் செயலர் பீஜிங்கில் தெரிவிப்பு*

பீஜிங், ஒக்.19
சீனக் கடற்படைக் கப்பல்கள் கொழும்புக்கு வருவதற்கு அனுமதி கோரப்படுமானால் அதுபற்றி ஆலோசிக்கப்படும் என்று பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெற்றியாராச்சி தெரிவித்துள்ளார்.

எனினும் சீனாவிடம் இருந்து இன்னமும் அவ்வாறான கோரிக்கைகள் விடுக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்துக்கு பீஜிங்கில் வைத்து அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இவ் வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில்

இலங்கையின் முன்னைய அரசு, சீனாவுடன் நெருக்கமாக இருந்தது குறித்தும் நீர்மூழ்கிகளை கொழும்பில் தரிக்க அனுமதித்தமை குறித்தும் இந்தியா கரிசனை
பக்.24


## அறுபது அரசியல் கைதிகளுக்கு நவ.7க்கு முன் பொதுமன்னிப்பு

### அரசு உறுதிபடத் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.19
நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு தண்டனை அனுபவிக்கும் சுமார் 60 அரசியல் கைதிகள் அடுத்த மாதம் 7 ஆம் திகதிக்கு முன்னர் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு விடுவிக்கப்படுவார்கள் என்று அரசு உத்தரவாதம் வழங்கியுள்ளது.

சிறைகளில் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள 201 தமிழ் அரசியல் கைதிகள், தம்மைப் பொது மன்னிப்பு அளித்து விடுவிக்க வேண்டும் என்று கோரி, கடந்த திங்கட்கிழமையில் இருந்து உணவு தவிர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டு வந்தனர்.

ஆறு நாள்களாக போராட்டம்



நடத்திய அவர்கள் நேற்று முன்தினம் ஜனாதிபதி அளித்த உறுதிமொழியை அடுத்து தமது போராட்டத்தை இடைநிறுத்தியுள்ளனர்.

அடுத்த மாதம் 7ஆம் திகதிக்குள் அரசியல் கைதிகள் விவகாரத்துக்கு தீர்வு காணப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியளித்துள்ளார். அத்துடன் பத்து அரசசட்டத்தரணிகள் கொண்ட ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டு
பக்.24

## 3 ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்கள் நியமனம்

### ஜனாதிபதி வழங்கினார்

கொழும்பு, ஒக்.19
அரசமைப்பு சபையால் தெரிவு செய்யப்பட்ட மூன்று சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அனுமதி வழங்கியுள்ளார்.

லஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு, பொதுச் சேவை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு ஆகியவற்றுக்கான அனுமதியையே ஜனாதிபதி வழங்கியுள்ளார். எனினும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான அனுமதியை ஜனாதிபதி வழங்கவில்லை என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் ஜனாதிபதி செயலகத்திலிருந்து ஆணைக்குழுக்களின் உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதங்கள் கடந்த வெள்ளிக்கிழமை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

லஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவுக்கு தலைவராக, ஓய்வுநிலை உயர் நீதிமன்ற நீதியரசர் ரி.பி. வீரசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.
பக்.24

## முன்னாள் போராளி தமிழினி நேற்று நோயால் சாவடைந்தார்

யாழ்ப்பாணம், ஒக். 19
தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல்துறையின் முன்னாள் பொறுப்பாளரான தமிழினி என்று அழைக்கப்படும் சிவசுப்பிரமணியம் சிவகாமி (வயது-43) நேற்று சாவடைந்துள்ளார். புற்றுநோயால் கடந்த சில மாதங்களாக அவதிப்பட்டு வந்த அவர் மஹரகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று

வந்த நிலையில் நேற்றுக் காலை சாவடைந்தார்.

இவரது உடல் நேற்று மாலை அவரது சொந்த ஊரான பரந்தன், சிவநகருக்கு உற



வினர்களால் எடுத்துவரப் பட்டது.

தமிழினி 1991 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்தில் போராளியாக சேர்ந்தார். பின்னர்
பக்.24

## பாலியல் லஞ்சம் கோரிய விவகாரம் குறித்த விசாரணை அறிக்கை தயார்

### செஞ்சிலுவைச் சங்க உயர்மட்டம் இறுதி முடிவெடுக்க இன்று கூடுகிறது

கொழும்பு, ஒக்.19
முழங்காவில் பகுதியில், இந்திய வீடமைப்புத் திட்ட உதவிக்கு பாலியல் இலஞ்சம் கோரப்பட்டது என்று சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாக இந்தியத் தூதரகமும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து நடத்திய விசாரணைகள் நிறைவடைந்துள்ளன.

இந்த விசாரணை தொடர்பான அறிக்கை குறித்து இன்று கொழும்பில் நடக்கவுள்ள உயர்மட்டக் கூட்டத்தில் ஆராயப்படும் என்று இலங்கை செஞ்சிலுவைச் சங்க மூத்த முகாமையாளர் மகேஸ் ஜொன்னி தெரிவித்துள்ளார்.

முழங்காவில் பகுதியில், இந்திய வீடமைப்புத் திட்ட உதவியைப் பெறுவதற்கு இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பங்காளி அமைப்பான இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் அதிகாரிகள் பாலியல் இலஞ்
பக்.24

## நவம்பரில் யாழ். வருகிறது ஜனாதிபதி ஆணைக்குழு

### காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விசாரணைக்கு

கொழும்பு, ஒக்.19
காணாமற்போகச் செய்யப் பட்டவர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு யாழ்ப்பாணத்தில் அமர்வுகளை நடத்த உள்ளது.

அடுத்த மாதம் இரண்டாம் வாரமளவில் யாழ்ப்பாணத் தில் விசாரணைகளை நடத்தவுள்ளது என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மெக்ஸ்வல் பரணகம தலைமையிலான காணாமற்போனவர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு
பக்.24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒலுவில் பிரதேசத்தில் கடலரிப்பு தீவிரமடைந்து வரும் நிலையில் அதைத் தடுக்கும் நோக்கில் தடுப்பு அணைக்கட்டுகளை அமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கைக்காக தற்போது 150 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் ஐ.எம். ஹனீபா தெரிவித்தார். தடுப்பு அணைகளை அமைப்பதற்கான மொத்தச் செலவாக 450 மில்லியன் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். ஒலுவில் பிரதேசத்திலுள்ள வெளிச்ச வீட்டை அண்மித்த கடற்கரைப் பகுதிகளில் தற்போது பெரும் கற்களால் இந்தத் தடுப்பு அணைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. சில காலங்களுக்கு முன்னர் கடலினுள் இவ்வாறு தடுப்பு அணைகள் நிர்மாணிக்கப்பட்ட போதும் கடலரிப்பைத் தடுக்க முடியவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (ற)

# மணல் அகழ்வின்போது சட்டத்தைப் பின்பற்றுக

## ஜனாதிபதி மைத்திரி கடும் பணிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 19

கல், மண் மற்றும் மணல் அகழ்வது தொடர்பாக சுற்றுலாத்துறை அமைச்சு விடுத்திருக்கும் சுற்றுநிருபத்தைக் கடுமையாகப் பின்பற்ற வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.



அது தொடர்பில் மாவட்டங்களின் அரச அதிபர்கள், மாவட்டங்களின் நிர்வாகச் செயலாளர்களது பொறுப்பு என்றும் தெரிவித்துள்ளார்.

வடக்கில் யாழ்ப்பாணம் மற்றும் ஏனைய மாவட்டங்களிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் சட்டவிரோத மணல் அகழ்வு, கல் அகழ்வு உள்ளிட்ட பல இயற்கை வளங்கள் அகழப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அவை தொடர்பில் சட்ட நடவடிக்கை பயில் நிலையில் உள்ள போதும் அதனையும் மீறி அவை அகழப்படுகின்றன - திருடப்படுகின்றன.

இந்த நிலையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் தெரிவித்துள்ளதாவது:-

மனித நலத்தைக் கருத்தில் கொண்டு காடுகள், வனஜீவராசிகள் மற்றும் இயற்கைச் சூழலைப் பாதுகாக்க வேண்டும். அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவது அரசின் பொறுப்பு. அவற்றைப் பாதுகாப்பது மாவட்டங்களினதும் மாவட்ட நிர்வாக உத்தியோகத்தர்களினதும் பொறுப்பு.

இது பற்றிய புதிய சுற்றுநிருபம் வீடமைப்புத் தேவை உள்ளிட்ட சாதாரண மக்களின் தேவைகள் தொடர்பில் எந்தவித தாக்கத்தையும் கொண்டிருக்காது. இந்த உத்தரவின் முக்கிய நோக்கம் இயற்கைக் கொடைகளைக் கடத்துபவர்களுக்கு எதிராகச் செயற்படுவதற்கானதாகும்.

அரச கண்காணிப்பின் கீழ் விவசாயிகளுக்காகப் பண்ணைகளில் விதைகளை வளர்ப்பது உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் குறித்த அமைச்சுக்களின் பொறுப்பு. அந்தப் பணிகள் உரிய முறையில் இடம்பெறவில்லையாயின், அரசு தேவையானளவு பின்தொடரல் - முன்னேற்ற நடவடிக்கையைத் தொடர வேண்டும் - என்றார். (ற-4)

# தமிழினியின் ஆத்ம சாந்திக்கு ஒரு நிமிடம் பிரார்த்தியுங்கள்

## அமைச்சர் டெனிஸ்வரன் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஒக். 19

தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல் துறை முன்னாள் பொறுப்பாளர் தமிழினியின் ஆத்ம சாந்திக்காக உலகத் தமிழர்களை ஒரு நிமிடம் பிரார்த்தனை செய்யுமாறும், முடியுமானோர் அவரின் இறுதி வணக்க நிகழ்வுகளில் பங்கெடுக்க வேண்டும் என்றும் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல்துறை முன்னாள் பொறுப்பாளர் தமிழினி நேற்றுக் காலை நோய்வாய்ப்பட்டு சாவடைந்தார். அவரது உடல் பரந்தனிலுள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இது தொடர்பில் டெனிஸ்வரன் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில்,

தமிழினியின் உடலை உடனடியாக விடுவித்து கொடுக்க உதவிய வைத்தியசாலை வட்டாரங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் அன்னாரின் பிரிவால் துயரடைந்துள்ள குடும்பத்தார், உறவினர் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து நிற்கின்றேன்.

நாளைய தினம் அவரது இறுதிக் கிரியைகள் நடைபெறவுள்ளது. எனவே அவருக்காக, உலகத் தமிழர்கள் அனைவரும் ஒரு நிமிடம் அக வணக்கம் செலுத்தி - பிரார்த்தனை செய்யுங்கள். முடியுமானோர் அவரது இறுதிக் கிரியையில் கலந்து கொள்ளுங்கள் - என்றுள்ளது. (ற-5)

# பெண் முயற்சியாளருக்கு தொழில் உபகரணங்கள்



யாழ்ப்பாணம், ஒக். 19

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்டுவரும் பெண் முயற்சியாளர் அபிவிருத்தி மற்றும் பால்நிலை சமத்துவம் எனும் திட்டத்தில் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த 21 பெண் முயற்சியாளர்களுக்குத் தொழில் தொடர்பான இயந்திர உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண வர்த்தக தொழில் துறை மன்றம் சர்வதேச தொழிலாளர் அமைப்பினருடன் இணைந்து இந்தப் பொருள்களை வழங்கியுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு அவை வழங்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாண வர்த்தக தொழில் துறை மன்றத்தின் தலைவர் கு.விக்னேஸ் தலைமையில் கிளிநொச்சி மாவட்ட கைத் தொழில் அபிவிருத்திச்சபையின் அலுவலகத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட உதவி அரசாங்க அதிபர் சி.சத்தியசீலன் கலந்து கொண்டார். அத்துடன் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் கிளிநொச்சி மாவட்ட திட்ட அலுவலர் லாபீர் மற்றும் கிளிநொச்சி மாவட்ட கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் உதவிப்பணிப்பாளர் சசிகரனும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் 21 பெண் முயற்சியாளர்களுக்கான பெறுமதிமிக்க தையல் இயந்திரங்கள், தானியங்கள் அரைக்கும் இயந்திரங்கள் என்பன வழங்கப்பட்டன என்று யாழ்ப்பாண வர்த்தக தொழில்துறை மன்றத் தலைவர் தெரிவித்தார். (ற-4)

### வேலணைப் பெண் கடத்தல் சம்பவம்

# சந்தேக நபர்கள் இருவரும் அடையாளம் காணப்பட்டனர்

யாழ்ப்பாணம் ஒக். 19

வேலணையில் நள்ளிரவில் வீடு புகுந்து பெண்ணைக் கடத்தி காட்டுக்குள் வைத்து வன்புணர்ந்தமை மற்றும் கடத்த உதவினர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 2 சந்தேக நபர்களும் நீதிமன்ற அடையாள அணிவகுப்பில் பாதிக்கப்பட்ட பெண்ணால் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வேலணையில் கடந்த மாதம் நள்ளிரவில் ஆயுதங்களுடன் வீடு புகுந்த சந்தேக நபர்கள் 2 பேரும் வீட்டில் கணவனைத் தாக்கிக் காயப்படுத்திவிட்டு அவரின் மனைவியைக் கடத்திச் சென்று காட்டுக்குள் வைத்து வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளனர் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அந்தக் குற்றச்சாட்டிலேயே புங்குடுதீவில் ஒருவர் கைது செய்யப்பட்டதோடு அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் மூலமாகப் பொதுமக்களும் பொலிஸாரும் இணைந்து வேலணைக் காட்டுக்குள் தேடுதல் நடத்திய போது காட்டுக்குள் இருந்து வீடு நோக்கி பெண்ணை இழுத் துச் சென்றுகொண்டிருந்த நிலை யில் மற்றைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

அவர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டனர். அதன்போது பாதிக்கப்பட்ட பெண் சந்தேக நபர்களை அடையாளம் காட்டினார். அதனையடுத்து அவர்கள் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ற-4)

# செஞ்சிலுவைச் சங்க தலைமையகத்துக்கு வீட்டுத் திட்டப் பிரச்சினை குறித்து கடிதம்

## கிளிநொச்சி பங்குத் தந்தை அருட்தந்தை ஆனந்தகுமார் அனுப்பி வைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.19

இந்திய வீடமைப்புத் திட்ட உதவிகளைப் பெறுவதில் பயனாளிகள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் தொடர்பாகவும் அதற்கான தீர்வு குறித்தும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கொழும்பு தலைமை அலுவலகத்துக்கு கிளிநொச்சி பங்குத் தந்தை அருட் தந்தை ஆனந்தகுமார் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

கிளிநொச்சி முழங்காவில் பகுதியில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரால் அமைக்கப்பட்டு வரும் இந்திய வீட்டுத்திட்டத்திற்கான பணம், பொருள்கள் பயனாளிகளுக்கு உரிய காலத்தில் வழங்கப்படுவதில்லை என்பது தொடர்பில் அருட்தந்தைக்கு கிடைத்த முறைப்பாடுகளை அடுத்தே அருட்தந்தையால் இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அருட்தந்தை ஆனந்தகுமாரை தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:-

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தில் உள்ள அதிகாரிகள் கொடுப்பனவை வழங்காமல் வேண்டுமென்றே இழுத்தடிக்கின்றார்கள், சில வேலைத்திட்டங்களை ஆரம்பித்துவிட்டு மீண்டும் அதை குழப்பிவிடுகின்றார்கள் பயனாளிகளை அலைக்கழிக்கின்றார்கள் போன்ற குற்றச்சாட்டுகள் பொது மக்களிடம் இருந்து கிடைத்தன.

இது தொடர்பாக தாம் உயர் அதிகாரிகளின் கவனத்துக்குக் பல முறை கொண்டு சென்ற போதிலும் இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே இவற்றை உள்ளடக்கியும் மேலும் சில தகவல்களை உள்ளடக்கியும் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் கொழும்பு தலைமை அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளேன். - என்றார். (ற-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## களஞ்சியப்படுத்த முடியாத நிலையில் வரணி உரக் களஞ்சியம்

யாழ்ப்பாணம், ஒக்.19

வரணிப் பகுதியில் அமைந்துள்ள அரச உரக் களஞ்சியத்தில் உர வகைகளை களஞ்சியப்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது.

யாழ்ப்பாணம் கமநல அபிவிருத்தித் திணைக்களத்துக்கு தென் பகுதியில் இருந்து எடுத்துவரப்படும் உரவகைகள் தற்சமயம் வரணிப் பகுதியில் அமைந்துள்ள அரச உரக்களஞ்சியம் எடுத்து வரப்படுகின்றன. ஆனால் அங்கு தமது வருகையை பதிவுசெய்த பின்பு உரம் தேவையான கமநல சேவை நிலையங்களுக்கு அவை அனுப்பப்படும் நடைமுறையே பின்பற்றுப்படுகின்றது.

இது தொடர்பில் உரக்கூட்டுத் தாபனத்தின் மாவட்ட சந்தைப்படுத்தல் நிறைவேற்றுப் பணிப்பாளர் கி.விமலைத் தொடர்புகொண்டு கேட்டபோது,

தென்பகுதியில் இருந்து வரும் உரவகைகளை வரணி அரச உரக் களஞ்சியம் களஞ்சியப்படுத்த முடியாத நிலையில் உள்ளது. பல வருடங்களாக பாதுகாப்புத் தரப்பினரின் உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்தது இந்தக் களஞ்சியம். தற்போது களஞ்சியம் விடுவிக்கப்பட்ட நிலையில் அது முழுமையாக புனரமைக்கப்படவில்லை. பெருமளவிலான உரவகைகளை அங்கு களஞ்சியப்படுத்த முடியாத நிலை உள்ளது. தற்போது உரவகைகளை ஏற்றிவரும் நிலையில் அந்தப் பார ஊர்திகள் அங்கு தரித்து நின்று தமது பதிவை மேற்கொண்டு விட்டு உர வகைகள் தேவையான கமநல சேவை நிலையங்களுக்கு நேரடியாகக் கொண்டு சென்று விநியோகிக்கின்றன. புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் ஜனவரி மாதம் அவை நிறைவுறும். ஜனவரி முதல் உரத்தை வரணி அரச உரக் களஞ் சியத்தில் களஞ்சியப்படுத்தலாம். - என்றார். (10,122)

## விபத்தில் 12 கடற்படையினர் உட்பட 13 பேர் காயம்

திருகோணமலை, ஒக்.19

திருகோணமலையில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் 12 கடற்படையினர் உட்பட 13 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடற்படை பஸ்ஸும் லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

திருகோணமலை புத்தளம் வீதியின் திரியாய் சந்தியில் காலை இடம்பெற்ற இந்த விபத் தில் 12 கடற்படையினர் காயம டைந்த அதேவேளை பொது மகன் ஒருவரும் காயமடைந்துள்ளார்.

விபத்தைத் தொடர்ந்து மீட்கப்பட்டவர்கள் உடனடியாக மஹதிவுல் வெவ கிராமிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுப் பின்னர், திருகோணமலை போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ற)

# 133,867 வெடிபொருள்கள் வடக்கில் அகற்றம்



ஜப்பான், ஆஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் நிதியுதவியுடன் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மூன்று மாவட்டங்களிலும் பொதுமக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டதி லிருந்து இதுவரை 70 இலட்சத்து 94 ஆயிரத்து 42சதுர மீற்றர் நிலப்பரப்பளவில் ஒரு இலட்சத்து 33ஆயிரத்து 867 வெடி பொருள்கள் அகற்றப்பட்டுள்ளன என்று கண்ணி வெடி அகற்றல் பணியில் ஈடுபட்டுள்ள டாஸ் நிறுவன புள்ளி விவரத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

70 இலட்சத்து 94 ஆயிரத்து 42 சதுரமீற்றர் நிலப்பரப்பளவில் 43 ஆயிரத்து 201 நிலக்கண்ணி வெடிகளும், 43 வாகன எதிர்ப்பு நிலக்கண்ணி வெடிகளும், 14 ஆயிரத்து 229 வெடிக்காத வெடி பொருள்களும், 76 ஆயிரத்து 394 சிறியரக வெடிபொருள்களும் அகற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அந்த நிறுவனத்தின் புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

டாஸ் நிறுவனத்தின் கண்ணிவெடி அகற்றல் வேலைத்திட்டங்களில் முன்னாள் போராளிகள் மற்றும் குடும்பத்தலைவர்களை இழந்த குடும்பப்பெண்கள் உட்பட இளைஞர், யுவதிகள் என 500 இற்கு மேற்பட்ட பணியாளர்கள் நிலக் கண்ணி வெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் மூலமாக 70 இலட்சத்து 94 ஆயிரத்து 42 சதுர மீற்றர் நிலப்பரப்பில் நிலக்கண்ணி வெடிப் பொருட்கள் அகற்றப்பட்டுள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தில் இது வரை மேற்படி நிறுவனத்தினால் 37 இலட்சத்து 63 ஆயிரத்து 277 சதுரமீற்றர் பரப்பளவில் நிலக் கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலப்பரப்பில் புதைக்கப்பட்டிருந்த 4 ஆயிரத்து 378 மிதி வெடிகளும், 2 ஆயிரத்து 138 வெடிக்காத வெடிபொருள்களும், ஆபத்தான நிலையில் காணப்பட்ட 22 ஆயிரத்து 480 சிறியரக வெடிபொருள்களும், நான்கு வாகன எதிர்ப்பு வெடி பொருள்களுமாக மொத்தம் 29 ஆயிரத்துக்கு மேற்பட்ட வெடிபொருள்கள் அகற்றப்பட்டுள்ளன. - என்று தெரிவிக்குப்பட்டுள்ளது. (ற)

# வாக்காளர் பட்டியல் டிசெ.15 வெளியாகும்

இந்த ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் டிசெம்பர் 15 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது. அதற்குரிய வகையில் தற்போது 'ஏ', 'பி' படிவங்கள் கிராம சேவையாளர் அலுவலகங்கள் - பிரதேச சபைகள் என்பவற்றில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் பணி கடந்த மே மாதம் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த மாதம் 31 ஆம் திகதி புதிய வாக்காளர் பெயர்ப் பட்டியலை வெளியிடுவதற்குரிய வகையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. பின்னர் நாடாளுமன்றத் தேர்தல் காரணமாக புதிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் வெளியீடு நவம்பர் 30 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. தற்போது அது டிசெம்பர் 15 ஆம் திகதி வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 15 ஆம் திகதி முதல், நடப்பு வாக்காளர் பெயர்ப் பட்டியலில் புதிதாகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் நீக்கப்பட்டோர் விவரங்கள் கிராம சேவையாளர் அலுவலகங்கள் மற்றும் பிரதேச சபைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இது தொடர்பில் ஆட்சேபனை தெரிவிப்போர் இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல்கள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். உரிமைக் கோரிக்கை படிவத்தை சமர்ப்பிப்பவர்களும் இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும் என்று தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

நவம்பர் மாதம் 12 ஆம் திகதியிலிருந்து நவம்பர் மாதம் 30 ஆம் திகதி வரையில் உரிமைக் கோரிக்கை படிவங்கள் சமர்ப்பித்தவர்கள், ஆட்சேபனைகள் மீதான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

# நிறுத்தாது சென்ற வாகனம் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம்

## மரக்குற்றிகளுடன் வாகனத்தை கைவிட்டு சாரதி தப்பியோட்டம்: வடமராட்சியில் சம்பவம்

நெல்லியடி, ஒக்.19

வடமராட்சி பருத்தித்துறை வல்லிபுரக்குறிச்சி பகுதியில் பொலிஸாரின் கட்டளையை மீறி முதிரை மரக்குற்றிகளுடன் அதிவேகமாக சென்ற வாகனம் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். துப்பாக்கிச்சூட்டை அடுத்து சாரதி வாகனத்தில் இருந்து குதித்து தப்பிச் சென்றுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை நடந்துள்ளது.

தப்பிச் சென்ற சாரதியைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றுபருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர் வாகனத்தை மறித்த போது அது நிற்காது சென்றது. அதையடுத்து வாகனத்தின் ரயர் பகுதியை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வாகனம் தற்போது பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-109)

# வீதி அபிவிருத்திக்காகப் பணம் பெறப்பட்டிருந்தால் விசாரணை

## ஆவணங்களைச் சமர்ப்பிக்கக் கோருகிறார் யாழ்.அரச அதிபர்

யாழ்.குடாநாட்டில் முன்னெடுக்கப்பட்ட, முன்னெடுக்கப்பட்டு வரும் கிராமத்துக்கு ஒரு மில்லியன் அபிவிருத்தித் திட்டத்தின் கீழான வீதி அபிவிருத்திகளில் பிரதேச செயலகம் அல்லது எந்த அதிகாரிகளாவது பணம் பெற்றிருந்தால் அது தொடர்பான ஆவணங்களை - கடிதங்களை அனுப்பி வைக்குமாறு யாழ்.அரச அதிபர் கோரியுள்ளார்.

குற்றச் சாட்டுத் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என்றும் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் பணம் பெற்றவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கரவெட்டி பிரதேச செயலகத்தினரால் முன்னெடுக்கப்பட்ட வீதி புனரமைப்பு வேலைத் திட்டத்தின் போது மக்களிடம் பணம் பெறப்பட்டுள்ளது என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. பிரதேச செயலக அதிகாரிகள் [illegible] வாறான செயற்பாட்டில் [illegible] ளனர் என்றும் கூறப்படுகின்றது. பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் பிரதேச செயலக அதிகாரி ஒருவர் கட்டாயப்படுத்திப் பணம் பெறுமாறு அழுத்தம் கொடுத்துள்ளார் என்றும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. அதிகாரிகளது அழுத்தம் காரணமாக பொருளாதார உத்தியோகத்தர்கள் பணம் சேர்க்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டவர்களுள் உள்ளடங்குகின்றனர். தவிர கிராமத்திலிருந்து தலா ஒவ்வொருவரையும் பணம் சேர்க்கும் பணிக்கு ஈடுபடுத்தியுள்ளனர்.

முன்னர் 100 நாள் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட சில வீதி அபிவிருத்திப் பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வந்தன. அதன் பின்னர் கிராமத்துக்கு ஒரு மில்லியன் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. அத்தகைய திட்டங்களுக்குப் பொதுமக்களிடமிருந்து ஆளணி, பொருள் உதவி பெறலாமே தவிர பணம் பெறக்கூடாது என்று சுற்றுநிருபம் [illegible] எனினும் அந்தச் சுற்று நிருபங்களையும் மீறியே பிரதச செயலக அதிகாரி ஒருவரின் தலைமையில் பணம் பெறப்பட்டுள்ளது. அதற்குப் பிரதச செயலகத்தைச் சேர்ந்தவர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் அவ்வாறு பெற்ற பணம் எங்கே? என்றும் அது பற்றி விசாரிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பணம் பெற்றமைக்கான ஆதாரங்கள் உள்ளன என்றும் கூறப்படுகின்றது.

இது தொடர்பில் யாழ்.அரச அதிபர் நா.வேதநாயகனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது குறித்த திட்டங்களுக்கு பணம் பெறமுடியாது என்று தெரிவித்தார்.

அவ்வாறு பணம் பெற்றவர்கள் தெடர்பில் எமக்குக் கடிதம் அனுப்ப முடியும். அவை தொடர்பான ஆவணங்களையும் சமர்ப்பித்தால் விசாரணைக்கு உதவியாக இருக்கும். விசாரணையில் குற்றம் நிரூபிக்கப்பட்டால் பணம் பெற்றவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.- என்றும் அவர் கூறினார்.(ற-4)

## சுனாமி ஒத்திகை

யாழ்ப்பாணம், ஒக். 19

யாழ்.மாவட்ட இடர்முகாமைத்துவ அலகும் மண்டைதீவு மகா வித்தியாலயமும் இணைந்து பொதுமக்கள் மற்றும் மாணவர்களுக்கான சுனாமி முன்னெச்சரிக்கை ஒத்திகை நிகழ்வை, இன்று காலை 11 மணிக்கு மண்டைதீவு கிராம சேவையாளர் பிரிவில் நடத்தவுள்ளன. இது ஒத்திகை நிகழ்வு என்பதால், பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை என்று யாழ். மாவட்ட அரச அதிபர் அறிவித்துள்ளார். (ற-5)

## விபத்தில் இளைஞன் சாவு

திருகோணமலை, ஒக்.19

மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தோப்பூர்-மனைச்சேனை பிரதேசத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் படுகாயங்களுக்குள்ளாகி கண்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மூதூர் கங்குவேலி பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயது இளைஞன் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்துள்ளார். வீதியின் குறுக்கே நாய் ஒன்று சென்றதால் மோட்டார் சைக்கிளை மறு திசைக்கு திருப்ப முற்பட்ட போது மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி மின் கம்பத்துடன் மோதி விபத்து ஏற்பட்டிருந்தது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கைக்குப் போர் விமானம் விற்பதற்கு இந்தியா பிரயத்தனம்

## பாகிஸ்தான் விமானத்தை வாங்க விமானப்படை ஆர்வம்

கொழும்பு, ஒக்.19

இலங்கைக்குப் போர் விமானங்களை விற்பனை செய்வதற்கான போட்டியில், இந்தியாவும் இணைந்து கொண்டிருப்பதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை விமானப்படைத் தளபதி எயர்வைஸ் மார்ஷல் ககன் புலத்சிங்கள பாகிஸ்தானுக்கு இந்த வாரம் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்தப் பயணத்தின் போது, அவர், சீனாவுடன் இணைந்து பாகிஸ்தான் தயாரித்த, ஜே.எவ்-17 போர் விமானங்களை இலங்கை விமானப்படைக்குக் கொள்வனவு செய்வது குறித்த உடன்பாட்டில் கையெழுத்திடுவார் என்று கடந்த வாரம் பாகிஸ்தான் ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது. எனினும் இலங்கை விமானப்படை இதனை நிராகரித்திருந்தது.

பாகிஸ்தான் பயணத்தின் போது, இலங்கை விமானப்படைத் தளபதி இந்த விமானங்களைப் பார்வையிடுவார் என்றும், ஆனால் அதனை வாங்குவது குறித்து முடிவு செய்யப்படவில்லை என்றும் இலங்கை விமானப்படை அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

இந்தநிலையில், பாகிஸ்தான் விமானங்களை இலங்கை விமானப்படை கொள்வனவு செய்வது குறித்து ஆராயவுள்ளதாகத் தகவல்கள் வெளியானதையடுத்து, இலங்கை விமானப்படைக்கான விமானங்களை வழங்கத் தயாராக இருப்பதாக, கொழும்பிடம் புதுடெல்லி அணுகியுள்ளதாக விமானப்படையின் உயர்மட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும், இந்தியா எத்தகைய போர் விமானங்களை இலங்கை விமானப்படைக்கு விற்க முன்வந்துள்ளது என்ற தகவலை விமானப்படை அதிகாரிகள் வெளியிடவில்லை.

இலங்கை விமானப்படை தன்னிடமுள்ள, பழைமையான இஸ்ரேலியத் தயாரிப்பு கிபிர் போர் விமானங்கள் மற்றும் சீனத் தயாரிப்பு எவ்-7 போர் விமானங்களுக்குப் பதிலாக புதிய போர் விமானங்களைக் கொள்வனவு செய்யத் திட்டமிட்டுள்ளது.

இதுகுறித்துக் கருத்து வெளியிட்டுள்ள இலங்கை விமானப்படை வட்டாரங்கள், மிகச் சிறந்த போர் விமானங்களை வாங்குவதற்காக நாம் சுற்றியுள்ள எல்லாவற்றையும் பார்க்கிறோம் -என்று தெரிவித்துள்ளன.

இதேவேளை, சீனாவினால் வடிவமைக்கப்பட்டு, பாகிஸ்தானில் தயாரிக்கப்பட்ட புதிய தலைமுறைப் போர் விமானமான, ஜேஎவ்-17 போர் விமானம், கொடுக்கும் பணத்துக்குப் பெறுமதி வாய்ந்தது என்றும், இலங்கை விமானப்படை அதிகாரிகள் ஒப்புக் கொண்டுள்ளனர் என அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-வ)

## நிதி மோசடிக் குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் டலஸ்

கொழும்பு, ஒக்.19

முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெருமவிடம் பொலிஸ் நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவினர் விசாரணை நடத்த உள்ளனர் எனக் கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து பொதுமக்கள் பணத்தைக் கொண்டு பரப்புரையில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பெருந்தொகையான பணத்தைச் செலவிட்டு 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து அமைச்சர், மாத்தறை மாவட்டத்தில் தொழிற் பயிற்சி அமைச்சின் ஊடாக பரப்புரையில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தேசிய தொழிற்பயிலுனர் அபிவிருத்தி அதிகாரசபை, அந்தந்தப் பிரதேசங்களில் நடைமுறைப் பரீட்சை நடத்தி சான்றிதழ் வழங்குவது வழமை என்ற போதிலும், அமைச்சின் உத்தரவுக்கு அமைய அனைத்து விண்ணப்பதாரிகளும் மாத்தறைக்கு அழைக்கப்பட்டு உணவு தங்குமிட வசதிகளை வழங்கி, பரீட்சை நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பெரியளவில் செலவு ஏற்பட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. டலஸ் அழகப்பெரும, முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் நெருங்கிய சகா என்பது குறிப்பிடத்தக்கது. (ற-வ)

## ஆளும்கட்சி எம்.பிக்களுக்கு பிரதமர் ரணில் மீது அதிருப்தி!

### அவர் விதிக்கும் கடும் கட்டுப்பாடுகளால்

கொழும்பு, ஒக்.19

ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் பிரதமரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க மீது அதிருப்தியுடன் உள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கட்சித் தலைவர் என்ற வகையில் தங்கள் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விதித்துள்ள கட்டுப்பாடுகளும், சர்வாதிகாரப் போக்குமே இதற்கான காரணம் என்றும் அறியக்கிடைத்துள்ளது.



ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்கள் மற்றும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்ற அமர்வுகளில் கண்டிப்பாகக் கலந்துகொள்ள வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடுமையான உத்தரவு பிறப்பித்துள்ளார். அவ்வாறு கலந்துகொள்ளாத உறுப்பினர்களுக்குப் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு கிடைக்காது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தங்களது சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதாக ஐக்கிய தேசி யக் கட்சியின் உறுப்பினர்கள் அங்கலாய்க்கின்றனர். இந்தக் கட்டுப்பாடுகள் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் புகைச்சலை ஏற்படுத்தியுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (ற)



## இந்திய மீனவரை விடுவிக்க தி.மு.க. நடவடிக்கை எடுக்கும்

### மு.க.ஸ்டாலின் கூறுகின்றார்

சென்னை, ஒக்.19

இலங்கை சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுவிக்க திராவிட முன்னேற்றக்கழகம் தொடர்ந்தும் நடவடிக்கை எடுத்து வரும என்று அதன் நிதிச்செயலாளர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2016ஆம் ஆண்டுக்கான சட்டப்பேரவை தேர்தல் குறித்த கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்பகுதியில் இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்படும் நடவடிக்கை தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றது என்று தெரிவித்த அவர், இதற்கு இரு நாட்டு அரசுகளும் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

குறிப்பாக நாகப்பட்டிணத்தை சேர்ந்த மீனவர்கள் மாத்திரம் 31பேர் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில், தொடர்ந்து நீடிக்கும் மீனவர் பிரச்சினையை தீர்க்க தமது கட்சி மத்திய அரசை வலியுறுத்தி வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார். (ற)

## விரைவில் ஓய்வு பெறுகிறார் மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ்

கொழும்பு, ஒக்.19

இறுதிக்கட்டப் போரில் போர்க்குற்றங்களை இழைத்தவர் என்று சர்வதேச மட்டத்தில் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் உள்ளிட்ட இலங்கை இராணுவத்தின் மூன்று முக்கிய அதிகாரிகள் ஓய்வு பெறவுள்ளனர்.

இராணுவத் தலைமை அதிகாரியாகப் பணியாற்றும் மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ், தொண்டர் படைகளின் தளபதியான மேஜர் ஜெனரல் லலித் தவுலகல, மற்றும் ஆட்டிலறிப் படைப்பிரிவின் தளபதியாக உள்ள மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க ஆகியோரே விரைவில் ஓய்வுபெறவுள்ளதாக, கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இவர்களில், மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ், இறுதிக்கட்டப் போரில், 57 ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரியாகப் பணியாற்றியிருந்தார். இவரது படைப்பிரிவு, வன்னியில், பொதுமக்கள் குடியிருப்புகள், மருத்துவமனைகள், பாதுகாப்பு வலயங்கள் மீதான பீரங்கித் தாக்குதல் உள்ளிட்ட போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாகவும், அதற்கு இவர் பொறுப்பாக இருந்தவர் என்றும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

சுவிற்சர்லாந்துக்குள் இவர் நுழைந்தால், போர்க்குற்ற வழக்குத் தாக்கல் செய்ய முடியும் என்று, அந்த நாட்டின் நீதிமன்றம் ஏற்கனவே அறிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை இராணுவத் தலைமை அதிகாரியாக அண்மையில் இவர் நியமிக்கப்பட்ட போது, அதற்கு சர்வதேச மட்டத்தில் கடும் எதிர்ப்புக்களைத் தற்போதைய அரசு எதிர்கொண்டிருந்தது.

போர்க்குற்றம் சாட்டப்பட்ட ஒருவருக்கு இராணுவத்தில் உயர் பதவி அளிக்கப்பட்டது குறித்து சர்வதேச மனித உரிமை அமைப்புகளும், இராஜதந்திர மட்டங்களும், கடுமையான விமர்சனங்களை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது என அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது. (ற-வ)

## புதிய அரசமைப்பு வந்தால் 13க்கு அப்பால் தீர்வு தேவை

### ஜயம்பதி விக்ரமரத்ன தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.19

புதிய அரசமைப்பு ஒன்று கொண்டு வரப்படுமானால் 13ஆம் திருத்தச் சட்டத்துக்கு அப்பால் சென்று தீர்வு ஒன்று முன்வைக்கப்பட வேண்டும் என இலங்கை சமசமாஜக் கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் போர் நிறைவடைந்துள்ள போதும், பிரச்சினைகள் தீரவில்லை. நீண்ட காலமாகக் காணப்படும் இந்த பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும். 2009ஆம் ஆண்டு இதற்கான பொன்னான வாய்ப்புக் கிடைத்தது. ஆனால் ராஜபக்சவினர் இதனைத் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. வெறும் வெற்றிக் கொண்டாட்டங்களை மாத்திரம் நடத்தி இந்த வாய்ப்பை தவற விட்டு விட்டனர். - என்று தெரிவித்துள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரத்தை தவறாக பயன்படுத்தக் கூடாது

## அரசியல்வாதிகளுக்கு ஜனாதிபதி மைத்திரி அறிவுரை

கொழும்பு, ஒக்.19

அரசியல்வாதிகள் தாம் அதிகாரத்துக்கு வருவதற்காக மக்களின் வறுமையைத் தவறாகப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும் என்று தெரிவித்தார் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன.

பொலனறுவை இரகாந்தகற்றுவெவ வித்தியாலயத்தின் புதிய தொழில்நுட்பக் கூடத்தைத் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மக்களின் வறுமையை அரசியல்வாதிகள் தாம் அதிகாரத்துக்கு வருவதற்குப் பயன்படுத்துகின்றனர். தேர்தல் வரும்போது அதிகாரத்தில் உள்ள அரசியல்வாதிகள் எவராக இருந்தாலும் அரச நிதி வளங்களைப் பயன்படுத்துகின்றனர். குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு கூடுதல் வரப்பிரசாதங்களை வழங்குகின்றனர் என்றும் அவர் சுட்டிக்காடியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் பிரச்சினை மற்றும் அபிவிருத்திக்கு இவ்வாறான விடயங்கள் ஒருபோதும் தீர்வாக அமையாது. இவை தற்காலிக அரசியல் நோக்கங்களுக்காகவே செயற்படுத்தப்படுகின்றன. இவற்றை தவிர்த்து நாட்டின் நீண்டகால அபிவிருத்தி உள்ளிட்ட செயற்பாடுகளில் கவனம்செலுத்த வேண்டும் - என்றார். (ற)



## வரவு-செலவுத் திட்டத்தில் பல அபிவிருத்தி திட்டங்கள்

### இராஜாங்க அமைச்சர் நிரோஷன் பெரேரா தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.19

அடுத்த வரவு-செலவுத் திட்டத்தின் மூலமாக நாட்டுக்கு நல்ல அபிவிருத்தி திட்டங்களை முன்வைக்கவுள்ளோம் என தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் நிரோஷன் பெரேரா தெரிவித்துள்ளார்.

புத்தளம் மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான நிரோஷன் பெரேராவை வரவேற்கும் வைபவம்கடந்த சனிக்கிழமை மாலை இடம்பெற்றது.

புத்தளம் மாவட்டத்தின் பல பிரதேசங்களில் இடம்பெற்ற வரவேற்பு வைபவங்களில் கலந்து கொண்டு அங்கு நடைபெற்ற கூட்டங்களில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரதமரின் அமைச்சான பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சைப் பொறுப்பேற்றுயுள்ளேன். எதிர்காலத்தில் அதன் ஊடாக சிறந்த பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும் என எதிர்பார்க்கின்றோம்.

எங்களால் செய்யப்பட வேண்டிய அபிவிருத்திக்கான தடைகளை தாண்டி உங்களுக்கான அபிவிருத்திகளைச் செய்வதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். - என்றார். (ற)

## அரசியல் கைதிகள் விடயத்தில் நயவஞ்சகப் போக்குடன் அரசு

### சாடுகின்றது ஜே.வி.பி.

தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் அரசு நயவஞ்சகப் போக்கைக் கைக்கொண்டு வருகின்றது என்று- மக்கள் விடுதலை முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது.

தற்பொழுது சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் உரிய முறையில் சட்டத்தை நிலைநாட்ட அரசு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகள் 223 பேர் கடந்த 6 நாள்களாக உணவு தவிர்ப்புப் போராட்டம் நடத்தினர். இவர்களுக்கு எதிர்வரும் 7 ஆம் திகதிக்குள் தீர்வு பெற்றுக்கொடுக்க அரசு தீர்மானித்துள்ளது. இருப்பினும், இவர்கள் என்ன அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது தொடர்பில் இதுவரை ஒரு அறிக்கைகூட வெளியிடப்படவில்லை என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)



பெருந்தோட்ட கைத்தொழில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் கே.வேலாயுதத்தின் பூதவுடல் பதுளை மாவட்டத்தில் பசறைப் பிரதேச சபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் தகனம் செய்யப்பட்டது. கே. வேலாயுதம் சென்னையிலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை இயற்கை எய்தினார். அவரது பூதவுடல் பதுளையில் உள்ள அவரது வீட்டில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. பூதவுடலுக்கு அரசியல் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலதரப்பினரும் அஞ்சலி செலுத்தினர். (ற)

## லஞ்சம் பெறுவோர் மீது கடும் சட்ட நடவடிக்கை

### லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் திட்டவட்டம்

கொழும்பு, ஒக்.19

லஞ்ச ஊழல் குறித்து குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் மீது தராதரம் பாராது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தில்ருக்ஸி டயஸ் தெரிவித்துள்ளார்.

அண்மையில் 125 லட்சம் ரூபாவை சுங்க அதிகாரிகள் மூவர் இலஞ்சமாக பெற்றமை குறித்து அவர் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொகை பெரிதாக உள்ளதாலும் அவர்கள் சுங்க அதிகாரிகள் என்பதாலும் விசாரணைகளில் எவ்வித மாற்றங்களும் இடம்பெறாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தில் மாத்திரம் இதுவரை 3 ஆயிரத்து 95 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று தெரிவித்துள்ள ஆணையாளர் உயர் நீதிமன்றில் 66 வழக்குகளும், நீதிவான் நீதிமன்றில் 24 வழக்குகளும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன என்றும் குறிப்பிட்டுள்ளார்.



இதேவேளை புதிய ஆணைக்குழு முழுமையாக செயற்பட ஆரம்பித்த பின்னர் அதிகாரிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** நம்பிக்கையுடன் புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். தொழில் மற்றும் வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனம் கடைப்பிடிகவும். போக்குவரத்தில் கவனம் தேவை.

**இடபம்:** உங்கள் நலன் விரும்புவோரின் ஆலோசனையை ஏற்பீர்கள். தொழில் மறறும் வியாபாரத்தில் வளர்ச்சியுடன் கூடிய ஆதாயம் கிடைக்கும். பெண்கள் மனம் போல், ஆடை, ஆபரணம் வாங்குவீர்கள்.

**மிதுனம்:** மனதில் தன்னம்பிக்கை மேலோங்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் புதிய சாதனை படைப்பீர்கள். இலாபம் உயரும். வீடு, வாகன வகையில் செலவு உண்டாகும். பெண்கள், குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.

**கடகம்:** மனக் குழப்பம் நீங்கி, தெளிவுடன் செயற்படுவீர்கள். தொழில் மற்றும் வியாபாரத்தில் இலாபம் பன்மடங்கு உயரும். புதிதாக வீடு, வாகனம் வாங்கும் வாய்ப்புண்டாகும். குடும்பத்துடன் விருந்து, விழாவில் பங்கேற்பீர்கள்.

**சிங்கம்:** உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். தொழில் மற்றும் வியாபாரத்தில் இருந்த மந்தநிலை மாற்றமடைந்து இலாபம் அதிகரிக்கும். பெண்கள், பிள்ளைகளின் நலனுக்காகப் பாடுபடுவர். வாகனப் பயணத்தில், மித வேகம் பின்பற்றுவது நல்லது.

**கன்னி:** குடும்ப விடயம் பற்றி பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில், முயற்சிக்கேற்ப முன்னேற்றம் உண்டாகும். பெண்கள் ஆடம்பர விடயத்தில் நாட்டம் கொள்வர்கள். மாணவர்கள், படிப்பில் மட்டும் கவனம் செலுத்தவும்.

**துலாம்:** எண்ணம், பேச்சில், புத்துணர்வு வெளிப்படும். கடினமான பணியையும், எளிதாகச் செய்து முடிப்பீர்கள். தொழில் மற்றும் வியாபாரத்தில் இருந்த தடைகள் விலகி இலாபம் உயரும். அரசியல்வாதிகளுக்கு, அரசியல் விவகாரத்தில் அனுகூலத் தீர்வு கிடைக்கும்.

**விருச்சிகம்:** திட்டமிட்ட செயலில், குளறுபடி ஏற்படலாம். தொழில் மற்றும் வியாபாரத்தில் போட்டி அதிகரித்து இலாபம் உயரும். உடல் நலனில், அக்கறை காட்டுவது நல்லது. மாணவர்கள், படிப்பில் மட்டும் கவனம் செலுத்தவும்.

**தனுசு:** உறவினர் வருகையால் மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். இலாபம் உயரும். பெண்கள், வீட்டுக்குத் தேவையான பொருள்கலள வாங்குவர்.

**மகரம்:** பிறரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட வேண்டாம். தொழில் மற்றும் வியாபாரத்தில் பொறுப்பு அதிகரித்து இலாபம் உயரும். பணியாளர்கள் எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். மாணவர்கள், நண்பர்களுடன் சேர்ந்து படிப்பர்.

**கும்பம்:** எதிரியும் வலிய வந்து உங்களிடம் அன்பு பாராட்டுவார். தொழில் மற்றும் வியாபாரத்தில், வருமானத்திற்கான புதிய வாய்ப்பு உண்டாகும். மனைவி விரும்பிக் கேட்ட பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். பிள்ளைகள் வழியில், சுபச் செலவு உண்டு.

**மீனம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். தொழில் மற்றும் வியாபாரத்தில் வருமானம் பன்மடங்காகும். பெற்றோரின் தேவை அறிந்து நிறைவேற்றுவீர்கள். உறவினர் வருலகயால், வீட்டுச் செலவுகள் அதிகரிக்கும்.

# திரையுலகில் விக்ரமும் 25 வருடமும்



தமிழ்த் திரையுலகில் மட்டுமல்லாது தெலுங்கு, மலையாளம், இந்தி என்று பல மொழிகளிலும் தனது வித்தியாசமான நடிப்புத்திறனால் அறியப்பட்ட விக்ரம் (சியான், கென்னி) திரையுலகுக்கு வந்து 25 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளார்.

என் காதல் கண்மணி படம் மூலம் நாயகனாக அறி முகமானவர் விக்ரம். இந்தப்படம் 1990ஆம் ஆண்டு ஒக்ரோபர் 17ஆம் திகதி வெளியானது. தொடர்ந்து தமிழில் சில படங்களில் நாயகனாக நடித்திருந்தார். தெலுங்கு, மலையாளம் என மற்ற மொழிகளில் சிறிய கதாபாத்திரங்களில் நடித்தார். இருந்தாலும் விக்ரம் முன்னணி நாயகனாக வர முடியாத நிலையிலேயே இருந்தார்.

1999ஆம் ஆண்டு பாலா இயக்கத்தில் வெளி வந்தசேது திரைப்படம் விக்ரமின் திரையுலக வாழ்க்கை யில் மிகப் பெரிய திருப்புமுனையாக அமைந்தது. இந்தப் படத்தைத் தொடர்ந்து, விண்ணுக்கும் மண்ணுக்கும், தில், காசி, ஜெமினி, தூள், சாமி, பிதாமகன், அந்நியன், கந்தசாமி, ராவணன், தெய்வத் திருமகள், தாண்டவம், ஐ என்று பல வித்தியாசமான படங்களிலும் மாறுபட்ட கதாபாத்திரங்களிலும் நடித்து தமிழ்த் திரையுலகில் தனக்கெனத் தனி இடத்தைப் பிடித்தார். இப்படங்களில் விக்ரமின் நடிப்பு அனைவரும் பாராட்டும் விதமாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.


ஆறு பிலிம்பேர் விருதுகள், சிறந்த நடிகருக்கான ஒரு தேசிய விருது மற்றும் தமிழ் நாடு மாநில விருது களும் பெற்றுள்ள விக்ரமுக்கு மிலான் பல்கலைக் கழகம் 2011ஆம் ஆண்டு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கியது. பிதாமகன் படத்தில் சிறப்பாக நடித்த தற்காகச் சிறந்த நடிகருக்கான தேசிய விருதையும் பெற்றார். நடிப்புக்காக எதையும் செய்யத் தயங்காதவர் எனப் பெயரெடுத்த விக்ரமைப் போல ஒரு நடிகரைத் திரையுலகத்தில் பார்ப்பது அரிது என அவரை வைத்து இயக்கிய இயக்குனர்கள் மனதாரப் பாராட்டி இருக்கிறார்கள்.

இவர் நடிப்புத்துறையில் மட்டமன்றி பல சமயங்களில் அப்பாஸ், பிரபுதேவா உள்ளிட்ட பல நடிகர்ளுக்கு பின்னணி குரல் கொடுத்தும், தொலைக்காட்சி நிகழ்சிகள், விளம்பரங்கள் மற்றும் பாடகராகவும் திரை யுலகத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்.

மேலும் ஐக்கிய நாடுகளின் குடிசார் அமைப்பின் தூதர். சஞ்சீவனி அறக்கட்டளையின் தூதுவராகவும் வித்யா சுதா, என்னும் மாற்றுத் திறன் பள்ளியின் தூதுவராகவும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பேஸ் புக்கில் பிடித்தவை...




## டுவிட் செய்யும் கோழி

ஆஸ்திரேலியாவில் உள்ள உணவகம் ஒன்று கோழிக்கு டுவிட் செய்வதற்குக் கற்றுக் கொடுத்துவருகிறது. ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த சிக்கன் ட்ரீட் என்ற உணவகத்தினர், கோழி ஒன்றுக்கு கணினி, இணைய இணைப்பு போன்ற வசதிகளை செய்து, டுவிட்டரில் கணக்கும் ஆரம்பித்துக் கொடுத்துள்ளனர். தனியாக ஒரு கூண்டில் இருக்கும் இந்தக் கோழி பெட்டி என்று அழைக்கப்படுகிறது. பெட்டி கீபோட்டில் ஏறி நின்று பொத்தானை அழுத்துகிறது. உடனே டுவிட்டரில் டுவிட்கள் தோன்றுகின்றன. தற்போது பெட்டி ஏதேதோ பொத்தான்களை அழுத்தி வருகிறது. பெட்டி ஐந்து ஆங்கில எழுத்துகள் கொண்ட வார்த்தையை டுவிட் செய்யும் வரை அதை டுவிட் செய்ய வைக்க உள்ளனராம்.


பழகப் பழக பெட்டியால் ஆங்கில வார்த்தையைத் தட்டேற்றம் செய்ய முடியும் என்று நம்பப்படுகிறது. கின்னஸ் சாதனை படைக்கவே கோழியை டுவிட் செய்ய வைத்துள்ளனராம். தற்போது பெட்டிக்கு கீ போட் என்பது என்ன என்று தெரியாமல் அதை அசுத்தம் செய்து வருகிறது. அது என்ன செய்தாலும் இணையத்தைப் பயன்படத்தி உலகில் டுவிட் செய்யும் முதல் கோழி பெட்டி என்பது குறிப்பிடத்தக்கது.





இது தான் உலக மகா நடிப்பு



## இன்றைய மனிதர்கள்...!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை பாராட்டுச் சிறப்பிதழ் - 2015

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**செல்வி காரை.எம்.பி.அருளானந்தன் - கலாநிதி**

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில் கல்வி கற்று 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் தேர்வில் 167புள்ளிகளைப் பெற்று பாடசாலைக்கும், கல்விச்சமூகத்திற்கும், எங்களுக்கும் பெருமைகளைத் தேடித் தந்த கலாநிதி இன்னும் பல சிறப்புக்கள் சேர்த்துஉயர எங்கள் குலதெய்வம் கும்பநாயகியைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறோம்.

*"அப்பாவைப் போல் தலைமைகள் சேர்த்து எப்போதும் அவனியில் உயரவேண்டும் பிள்ளை"*

**புலமைத் தேர்வில் வெற்றி பெற்ற கலாநிதியை வாழ்த்துவோர்**

திருமதி யோகமலர் பாலசிங்கம்(அப்பம்மா)
திரு திருமதி தனபாலசிங்கம் - ராதாமணிமேகலை குடும்பம் (மாமா, அத்தை)
திரு திருமதி நிர்பானந்தம் - சங்கீதா குடும்பம் (சித்தா, சித்தி)
திரு திருமதி ஸ்ரீதரன் - ராதிகா குடும்பம் (மாமா, அத்தை)
திரு திருமதி கிருபானந்தன் - சுஜாதா குடும்பம்(சித்தா, சித்தி)
திரு திருமதி தவபாலன் - கிருசாந்தினி குடும்பம் (மாமா, அத்தை)
திரு திருமதி பிரபாகரன் - ரஜினி குடும்பம்(மாமா, அத்தை)
திரு திருமதி திருமுருகதாஸ் - யசோதா (மாமா, அத்தை)

## பாராட்டும் வாழ்த்தும் நன்றியும்

**யா/ இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம் வரணி**

**2015 தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை சாதனையாளர்கள்**



நஜேந்திரன் சபிசன்
164 புள்ளிகள்



கிருஸ்ணமோகன் கர்சனா
163 புள்ளிகள்



பாஸ்கரன் வினேயா
155 புள்ளிகள்



நித்தியானந்தன் மிதுசகன்
153 புள்ளிகள்



அதிபர்
சு. கோடீஸ்வரன்

100 புள்ளிகளுக்கு.மேல் பெற்றவர்கள்
வி.ரந்தரா - 148, சி.நிருசன் - 145, யோ. அபிராமி - 135, ர.பதுமியா - 135, பொ.கிரிசாந் - 122, வி.பானுசன் - 117, அ.லாவண்யா - 116, வி.பானுகா - 109

78 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள்
கி.லதுசன் - 97, பா.கம்சிகா -97, ப.ஷசிக்ஷா - 80, ஆ.சாமந்தி - 78



வகுப்பாசிரியர்
திருமதி கி.இன்பரதி

சாதனையாளர்களைப் பாராட்டுவதோடு மேலும் உயர்வுகள் பெற வாழ்த்துகின்றோம் இவர்களை வழிகாட்டிய அதிபர், கற்பித்த ஆசிரியர், ஏனைய ஆரம்பக்கல்வி ஆசிரியர்களையும் பாராட்டி எமது நன்றிகளையும் தெரிவிக்கின்றோம்.

**பெற்றோர்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**யா/ உடுத்துறை இந்து ஆரம்பப் பாடசாலையிலிருந்து**

2015 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்த

| | | | |
|---|---|---|---|
| பே. சதுஷன் | - 179 | ச.அபிஷா | -163 |
| பா.டிஷான் | - 179 | தி.திஷானி | -157 |
| உ.புகழ்நிலா | - 170 | ஸ்ரீ. நிருஷா | -156 |

ஆகிய மாணவர்களையும்
அதிபர் சி.ஜெயந்திரன்,
வகுப்பாசிரியர் க. தயாபரன்
மற்றும் ஏனைய ஆசிரியர்களையும்
பாராட்டிவாழ்த்துகின்றோம்

**பெற்றோர்**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்





செல்வன் சுதேஸ்கரன் சியானிஷன்

2015 ஆம்ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 153 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த செல்வன் சுதேஸ்கரன் சியானிஷன் அவர்களையும் இவருடன் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களான சு.சௌமியா-123,பா.கேதுஷா- 120, சி.திவியன்-119, பி.லதுர்சன்-113 இவர்களுடன் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் அனைவரையும் பல்கலைகளும்,பட்டங்களும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்கவென வாழ்த்துவதோடு ஊக்கமளித்த பெற்றோரையும் பாராட்டுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
**யா/ அளவெட்டி வடக்கு அ.மி.த.க. பாடசாலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை பாராட்டுச் சிறப்பிதழ்- 2015



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2015 ஆம் ஆண்டுக்கான தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 170 புள்ளிகளைப் பெற்று புனித பத்திரிசியார் கல்லூரியில் 4ஆம் இடத்தைப் பெற்ற மாணவன் யோன்சன் விவின்ஸ்ரன்ஸ் என்பவரை மனமார்ந்து பாராட்டி நீடூழி வாழ்கவென்று வாழ்த்துகின்றோம். அவரது கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்ற அதிபர், ஆசிரியர் ரஜித்தா சுரேஸ் அகஸ்டீன் மற்றும் பாடசாலை சமூகத்தினரையும் இவ்வேளையில் வாழ்க வாழ்க என பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் கல்வியில் முன்னேற்றம் அடைந்து பல பட்டங்களை பெற வேண்டும் என வாழ்த்தி மகிழ்கின்றோம்.

74/3, காரைநகர் வீதி, கொட்டடி.

வாழ்த்துவோர்: தோட்டப்பா - ஸ்ரீபன், தோட்டம்மா - நிலா மற்றும் குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/புனித ஜோன் போஸ்கோ வித்தியாலயத்தில் கல்வி பயிலும்
செல்வன் சிபாஸ்கரன் புருஷோத்
அவர்கள் 2015 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் தேர்வில் 175 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம். வாழ்வில் மேலும் பல சித்திகளைப் பெற்று வாழ வாழ்த்துவதுடன் இவரின் வெற்றிக்கு துணை நின்ற ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
அப்பம்மா, பெரியப்பா (ஸ்ரீ),
பெரியம்மா(சசி)சோபிதன்,
ஷகானா,வவி அத்தை, லக்ஷி

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

தென்மராட்சி மண்ணின் பிரபல்யமான புலமைப் பரிசில் ஆசான் K.சுதா (Sir) இன் வழிகாட்டலில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற எமது மாணவ செல்வங்களான,

1. பி.கீர்த்திகன் - 183 (யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம், தென்மராட்சி வலயம் - 2 ஆம் இடம்)
2. க.கீர்த்திகா - 175 (யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம்)
3. ந.கஜீவன் - 167 (யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம்)
4. சி.சுவிக்ஷன் - 166 (யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம்)
5. செ.திருசன் - 164 (யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம்)
6. செ.அனோஜிகா - 163 (யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம்)
7. உ.தஜிந்தினி - 161 (யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம்)
8. கு.சுவேதன் - 153 (யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம்)
9. சு.சிபானி - 163 (யா/சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயம்)
10. சு.ஆர்த்திகா - 161 (யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை)
11. ஜெ.ஜோரோந்தனா - 156 (யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை)
12. வி.திதோஜனன் - 161 (யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை)

மேலும் 100இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற ஏனைய 24 மாணவர்களையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Note:- தாய், தந்தையரை இழந்த பிள்ளைகளும் இலவசமாகக் கல்வி கற்க முடியும்.

தட்டான்குளம் வீதி, மீசாலை வடக்கு,கொடிகாமம். (60634)(11,15,16)

சேவதா கல்வி நிலையம்
நிர்வாக இயக்குநர் (சுதா Sir)
077 433 9047

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2015 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 159 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த
செல்வி கேசவன் கஸ்தூரி
அவர்களை வாழ்த்துவதோடு அவரை வழிப்படுத்திய வகுப்பாசிரியர்



சு.ஜெனட் ரவீந்திரன்
அவர்களையும் ஏனைய ஆசிரியர்களையும்
100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

1. சுறைஞ்சன் செந்தூரன் - 148
2. காந்தராசா மதுஷா - 146
3. முத்துக்குமாரலிங்கம் விதுஷன் - 136
4. பிலோகராசா மணிவண்ணன் -135
5. கவீந்திரன் வருண் - 130
6. சுப்பிரமணியம் பிருத்திகா - 128
7. நகுலேஸ்வரன் விதுஷன் - 121
8. தங்கராசா பவிதாஸ் - 117
9. வாகீசன் சாருஜா - 117
10. பூபாலசிங்கம் பவித்திரன் - 115
11. ஸ்ரீஸ்கந்தராசா டினேஸ் - 105
12. ஸ்ரீஸ்கந்தராசா யர்மினி - 105
13. செல்வராசா திவானி - 105
14. கண்ணன் தவரூபன் - 103

பாடசாலைச் சமூகம்
யா/ கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம் கைதடி

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/யோன் பொஸ்கோ வித்தியாலய மாணவனும்
திரு திருமதி ராஜ்குமார் தயானுஷா தம்பதிகளின்
செல்வப் புதல்வனுமாகிய
செல்வன் ரா.ருபிதன்
2015ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 157 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்காக இவரை வழிநடத்திய பாடசாலை அதிபர் மற்றும் கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டி நன்றி தெரிவிக்கின்றோம்.

Best wishes

"கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பார்"

வாழ்த்துவோர்:
இந்திரதாஸ் சுரேஷ்குமார்
பெரியப்பா (கட்டார்) (65594)(11,1516,)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

புலமைப்பரிசில் பரீட்சை 2015
மன்/தேவன்பிட்டி ஆரம்பப் பாடசாலை



எமது பாடசாலையில் 2015 தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில்
செல்வன் அ.ரஜீவன் வாசரஸ் 157 புள்ளிகளைப் பெற்று எமது பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார்.



அத்தோடு பின்வரும் மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்று எமது பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

1. செல்வி ஜெ.ஜெனுசியா - 127
2. செல்வி பு.தமிழினி - 123
3. செல்வன் கி.எமில்டிலைக்ஷன் - 107
4. செல்வன் அ.அக்சன் - 105
5. செல்வன் கி.கிளின்ரன் - 102
6. செல்வன் யூ.அனற்லீன்சன் - 102

இம் மாணவர்களையும், அதிபர் ப.யூட்டஸ், தரம்5 வகுப்பாசிரியர் இ.டெனிஸ்ரன், பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: T. தனராசா (T.O)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கிளி/ மாசார் அ.த.க பாடசாலை
2015 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்



Congratulations



செல்வன் ச.விதுர்சன் — 166 புள்ளிகள் செல்வன் கு.நிஜானன் — 152 புள்ளிகள்

100 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள்

தி. தேனுஜன் — 141 சு.பஸ்மிதா — 112

பாடசாலை வரலாற்றில் 60 வருடங்களில் இரண்டு மாணவர்கள் சித்தியடைந்தது இதுவே முதற்தடவையாகும். இம் மாணவர்களின் வெற்றிக்குப் பாடுபட்ட அதிபர் திருமதி த.கணேசலிங்கம், வகுப்பாசிரியர் திருமதி ஜ.துஷிகாந்தன் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(62171) (14,16,17) பாடசாலைச் சமூகம்.

யா/அனலைதீவு தெற்கு அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயம்
2015 தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களைப்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன் ர.மதுர்ஷன்
161 புள்ளிகள்



செல்வன் ச. மேனஹன்
160 புள்ளிகள்

எமது மாணவச் செல்வங்களை வழிப்படுத்தி அவர்களின் வெற்றிக்கு வித்திட்ட அதிபர் ச.விக்கினேஸ்வரி அவர்களையும் ஆசிரியர் வை. துஸ்யந்தி அவர்களையும்,மாணவச் செல்வங்களையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

100 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றவர்கள்
★ ரி.அரிஷன் - 146, ★செ.விவேதினி - 142 ★கே.ராஜுசா - 118 ★ந.நிதுஷன் - 113

வாழ்த்துவோர்:
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
யா/அனலைதீவு தெற்கு.அ.த.க. வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை பாராட்டுச் சிறப்பிதழ்- 2015

## உளநல வாரத்தை முன்னிட்டு மாணவர்களுக்கான கருத்தரங்கு

சாவகச்சேரி,ஒக்.19

உளநல வாரத்தை முன்னிட்டு தென்மராட்சி கல்வி வலயம், பாடசாலைகளில் தரம் 10 வகுப்புகளில் கற்கும் மாணவர்களுக்கான உளநல விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றது. கடந்த 15 ஆம் திகதி மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்திலும், கடந்த 16 ஆம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. அதற்கமைவாக இன்று திங்கட்கிழமை உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்திலும், எதிர்வரும் 22 ஆம் திகதி நாவற்குளி மகா வித்தியாலயத்திலும் கருத்தரங்குகளை நடத்த ஏற்பாடுகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன. (ஐ-9)

## இலவச மருத்துவ முகாம்

கருவி சமூக வள நிலையத்தால் நல்லூர் சுகாதார வைத்திய சேவை கள் பணிமனையின் பங்களிப்புடன் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு தொற்றாநோய் கள் தொடர்பான இலவச மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது. இந்த இலவச மருத்துவமுகாமானது அரு ளம் பலம் லேன் நல்லூர் வடக்கு யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்கும் கருவி சமூக வள நிலை யத்தில் இடம்பெறவுள்ளது எனவும் நிலையத்தில் பயனாளிகளைக் கலந்து பயன்பெறுமாறு நிலையத்தின் செய லாளர் ரி.ஜசிந்தன் அறிவித்துள்ளார். (ஐ-ரி6)

## விண்ணப்பம் கோரல்

கைத்தொழில் அபிவிருத்தி சபையின் வருடத்தின் திறமையான தொழில் முயற்சியாளரைத் தெரிவு செய்யும் போட்டி தேசிய மட்டத்தில் நடத்தப்படவுள் ளது. இதற்கான விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னதாக கைத்தொழில் அதிகார சபை, வீடமைப்பு அதிகார சபைக் கட்டடம், சுண்டுக்குளி எனும் முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும் என கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பிரதிப் பணிப் பாளர் எஸ்.சிவகெங்காதரன் தெரிவித்துள்ளார். (ஐ-ரி6)

## பதிவு செய்யக் கோரிக்கை

கோப்பாய் பிரதேச செயலகத்தில் வாகன உரிமை மாற் றம் செய்யப்பட்ட வாகன பாவனையாளர்கள் இதுவரை புத்தகம், இலக்கத் தகடு என்பன கிடைக்கப் பெறவில்லை எனின், கோப்பாய் பிரதேச செயலக மோட்டார் போக்கு வரத்துக் கிளையுடன் உடனடியாகத் தொடர்புகொண்டு எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யுமாறு பிரதேச செயலர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார். (ஐ-ரி6)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்




யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி
மாணவனும்
மதியழகன்- லனிதா தம்பதியரின்
புதல்வனுமான கிருசிகன்
அவர்கள் 2015 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில்
182 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில்
முதலாம் இடத்தை அடைந்து சித்தியடைந்தமையை
வாழ்த்தி கல்வி யில் மேன்மேலும் சிறந்து விளங்க
கயிற்றசிட்டி கந்தன் அருளை வேண்டி இவருக்கு கல்வி
கற்பித்த பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும்
கைதடி பூப்பிற்றர் கல்வி நிலைய ஆசிரியர்களுக்கும்
நன்றிகளையும் பாராட்டுக்களையும்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:
அம்மம்மா(திருமதி இரத்தினம்), அப்பப்பா, அப்பம்மா( திரு. திருமதி வசம்பு),
ஜெசிமாமா- (கவிஸ்),
அத்தை- சோபனா

## அகம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்




யா/ இடைக்குறிச்சி
ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயத்தில்
கல்வி கற்கும்
செல்வி கிருஸ்ணமோகன் கர்சனா
அவர்கள் 2015 ஆம் ஆண்டு தரம் - 5
புலமைப்பரிசில் தேர்வில் 163 புள்ளிகள் பெற்று
சித்தியடைந்தமையை அகம் மகிழ்ந்து
பாராட்டுகிறோம். இவர் வாழ்வில் மேலும் பல
வெற்றிகள் பெற்று சிறப்பாக வாழ
வாழ்த்துவதுடன் இவரின் வெற்றிக்கு
உரமூட்டிய
அதிபர், ஆசிரியர்களையும், அன்புப்
பெற்றோர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்.
அம்மப்பா, அம்மம்மா,பெரியம்மா குடும்பம்.
பவிதன் மாமா குடும்பம், காந்தன் மாமா குடும்பம்,
பவன்மாமா.

மாசேரி, வரணி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி துஸியந்தி இந்திரபாலர்
2015 ஆம் ஆண்டு நடைபெற்ற
தரம் - 5 புலமைப்பரிசில்
பரீட்சையில் யாழ் இந்து மகளிர்
ஆரம்ப பாடசாலை மாணவி செல்வி
துஸியந்தி இந்திரபாலர்
162 புள்ளிகளைப் பெற்று
சித்தியடைந்ததையிட்டு பாராட்டி
வாழ்க்கையில் மேலும் பல
திறமைச்சித்திகளைப்பெற எல்லாம்
வல்ல இறைவனை வேண்டி
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்.
அப்பப்பா குமாரசாமி, அப்பம்மா கமலாவதி
அப்பா, அம்மா, அக்கா மற்றும் உறவினர்கள்.

இல.360, திருநகர்,
மல்லாவி, யோகபுரம்.

## வாழ்த்துகின்றோம்

சுன்னாகம் வீதி, புத்தூர்வடக்கு புத்தூரைச் சேர்ந்த
ரமேஷ் ரதீஸ்வரி தம்பதிகளின்
செல்வப் புதல்வன் லவினாஷ்
இன்று தனது
10 ஆவது பிறந்த தினத்தை
சிறப்பாகக் கொண்டாடுகிறார்.




புலமைப் பரிசில் பரீட்சையில்
வெற்றிகண்டு
பத்தாவது அகவை இன்று
பாலன் நீ எய்துகின்றாய்
பெற்றவர் மற்றும் எங்கள்
உறவுகள் சுற்றம் யாவும். உன்
கற்றலின் திறனைக் கண்டு
களிப்பினில் மிதக்கின்றோமே
படிப்பினில் உயர்ந்து, இன்னும்
படிப்படியாய் உயர்ந்து
பட்டங்கள் பலதைப் பெற்றுப்
பாருளோர் உளம் மகிழப்
பெரும் பதவிகள் பெற்றுவாழ
பத்தாவது அகவை நாளில்
உன்னை வாழ்த்திப்
பல்லாண்டு பாடுகின்றோம்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.




செல்வன் R. லவினாஷ்
யாழ்/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்
புலமைப் பரிசில் 162 புள்ளிகள்

வாழ்த்துகின்றார்:
மாமா- சோதி சின்னா (லண்டன்)

(65353) (13.15)

"ஓம் நமோ நாராயணா"
கண்ணனின் திருவருளுடன்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




யாழ்/ சாவகச்சேரி இந்து
ஆரம்ப பாடசாலை மாணவன்
செல்வன்
சிவகுமார் திதோஜனன்
2015 இல் நடைபெற்ற தரம் 5
புலமைப்பரிசில் பரீட்சையில் 161
புள்ளிகளைப் பெற்று
பாடசாலை மட்டத்தில் 14 ஆம்
இடத்தையும் பெற்று
சித்தியடைந்தமைக்காக
அவரையும் பாடசாலை அதிபர்,
ஆசிரியர்களையும், தனியார்கல்வி
நிலைய ஆசிரியர்களையும்
நன்றியுடன் பாராட்டுவதோடு
அவர் மென்மேலும் பல
பெருமைகளைப் பெற்று
சாதனை படைக்க
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
அம்மா, அப்பா, அம்மம்மா, அம்மப்பா,
மாமா குடும்பம், பெரியம்மா குடும்பம்.
செ.தங்கராஜா
நாச்சிமார் கோயிலடி,யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்





த.அருமைநாயகம்
அதிபர் SLPS -I

பொ.ஆறுமுகரஞ்சன்
ஆசிரியர் SLPS 2-II

இவ்வருடத்திற்கான பல்துறை ஆற்றல் ஆளுமை மிக்க முதல்வருக்கான "பிரதீபா பிரபா" விருதினைப்பெற்ற எமது பாடசாலை அதிபர் த.அருமைநாயகம் அவர்களையும் நல்லாசிரியருக்கான விருதினைப்பெற்ற எமது பாடசாலை ஆசிரியர் பொ. ஆறுமுகரஞ்சன் அவர்களையும் வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிசங்கம்
மு/பாண்டியன்குளம் ம.வி - நட்டாங்கண்டல்



# மணிவிழா நாயகியின் சேவைநலன் பாராட்டு



திருமதி
நேசரஞ்சினி
விக்கினேஸ்வரன்
(SLTS -I)

Best Wishes

சேவை விவரம்:

| | |
|---|---|
| யா/ முத்துதம்பி வித்தியாலயம் | 16.05.1977 - 30.06.1977 |
| யா/ செங்குந்தா இந்துக்கல்லூரி | 01.07.1977 - 31.12.1979 |
| யா/ பலாலி ஆசிரியர் கலாசாலை | 01.01.1980 - 31.12.1982 |
| யா/ கரம்பன் ஸ்ரீபுஸ்ப மகளிர் வித்தியாலயம் | 01.10.1983 - 31.12.1988 |
| யா/ செங்குந்தா இந்துக்கல்லூரி | 01.01.1989 - 30.06.1996 |
| யா/ இந்து மகளிர் கல்லூரி | 01.07.1996 - தற்போதுவரை. |

பகுதித்தலைவர், பாட. இணைப்பாளர் 2007இல் இருந்து இன்றுவரை.

நேசமாய் உரையாடும் நேசரஞ்சினியேபாச
உணர்வுடனே எம்முன் பண்பாய் உரைத்திடுவீர்
கடமையே கண்ணெனக் கொண்டு
காலமெல்லாம் கல்விப்பணி ஆற்றிட்டீர்

விந்தையூட்டும் விஞ்ஞானக் கல்வியை
விருப்புடன் கற்பித்தே மாணவர் சாதனையாளராகிட - நீர்
சரித்திரம் கண்டு கொண்டீர்

பற்றுடன் பாடசாலையில் சேவை ஆற்றிட்டீர்
பழைய மாணவி எனும் பண்பினைக் காத்திட்டீர்
பகுதித் தலைவராயும் பணிகள் புரிந்திட்டீர்
பாரினிலே உயர்ந்தனர் உம் பயன் பெற்ற மாணாக்கர்

அகவையில் அறுபது கழிகிறது
அகிலத்தில் உம்புகழ் மிளிர்கிறது
வேர்விட்டு விழுதெறிந்து
விருட்சமாய் நிற்கிறது உம்வாழ்வு

நிறைவான வாழ்வு நித்தியமாத் தொடர
அன்போடு உம்மை
அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம்.

கல்லூரிச் சமூகம்
யா/ யாழ்.இந்து மகளிர் கல்லூரி



# கோசலா லேணர்ஸ்
# KOSHALA LEARNERS

அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

பதிவு இல.591



கண்டி வீதி,
சாவகச்சேரி.

தொ.பே.இல.: 0217903422
0775356979

01. விஜயதசமி விழா, தீபாவளிப் பண்டிகை ஆகிய தினங்களை முன்னிட்டு இன்றிலிருந்து எதிர்வரும் 10.11.2015 வரை குறைந்த கட்டணத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.
02. பெண்களுக்கு காரில் பயிற்சி வழங்கப்படுவதுடன் அவர்களுக்கே உரித்தான கண்ணியமான முறையில் பயிற்சியளிக்கப்படும்.
03. எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய தவறுபவர்களுக்கு விசேட வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வாய்மொழிமூலம் பரீட்சையில் சித்தியடைய ஒழுங்கு செய்யப்படும்.



கிளைகள் :
பிரதான வீதி,
சங்கானை.
0777048585

இல.215, 2ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
0217903351



# பிரதீபா பிரபா விருது-2015

பல பட்டங்களையும் 2015 ஆம் ஆண்டிற்கான
"பிரதீபா பிரபா" விருதினையும் பெற்ற எமது பாடசாலை
ஆசிரியர் சேனாதிராஜா ஜெயானந்தன்
அவர்களைப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்



வாழ்த்துவோர்: அதிபர், ஆசிரியர், ஊழியர்கள்
முல்லைத்தீவு ம.வி.
முல்லைத்தீவு



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

மு/ சிறி சுப்பிரமணிய
வித்தியாசாலை
புதுக்குடியிருப்பு





Congratulation

இ. செல்வநாயகம்
அதிபர்(SLPS-II J.P)

சி.சிவநாதன்
ஆசிரியர்

மேற்படி எமது அதிபர் அவர்களும் ஆசிரியர் அவர்களும் கடந்த 06.10.2015 அன்று அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களிடமிருந்து பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சிறந்த அதிபர் சிறந்த ஆசிரியருக்கான அதியுயர் விருதான "பிரதீபா பிரபா" விருதினைப் பெற்றமையையிட்டுப் பாராட்டுவதுடன் இவர்களுடைய சேவை மென்மேலும் வளர வாழ்த்துகின்றோம்.

மாணவிகள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சபையினர்,
மு/ சிறி சுப்பிரமணிய வித்தியாசாலை புதுக்குடியிருப்பு



# பேருவகையுடன் வாழ்த்துகின்றோம்



இலங்கை அதிபர் சேவை தரம் I இற்கு
பதவி உயர்வு பெற்ற எம் அதிபர்
அந்தோனிமுத்து கிறகோரி ஜெயசீலன்
(இலங்கை அதிபர் சேவை தரம் I)

Congratulations

வெள்ளிவிழா சேவையதில்
உள்ளம் கொள்ளும் பணியாற்றி
ஏழ்மைச் சமூகத்தின் ஏணியாய்த் தானிருந்து
ஏற்றம் இன்று கண்டு நிற்கும் - அதிபர்
முதலாம் தரத்தில் உயர்வு பெற்ற - எம் முதல்வரை
உளம் நிறைந்து வாழ்த்துகிறோம்
உம்பணி தொடரட்டும்......
உயர்வுகள் இன்னும் சேரட்டும்

வாழ்த்துவோர்:
ஆசிரியர் ஒன்றியமும், பாடசாலைச் சமூகமும்,
கிளி/ இரணைதீவு றோ.க.வித்தியாலயம்



# திறப்பு விழா
# த சசிகா லேணர்ஸ்

R.eg.No.DS882

அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப்பாடசாலை

சங்கானையில்....

(பேருந்து நிலையத்திற்கு முன்பாக)

தசசிகா லேணர்ஸ் தனது கிளையை
19.10.2015 இன்று நண்பகல்
12.03 - 1.30 மணி வரையுள்ள
சுபவேளையில் திறப்புவிழாவினை
மேற்கொள்ளவுள்ளது
என்பதை மகிழ்ச்சியுடன்
அறியத்தருகிறோம்.



குறிப்பு:
- வாகனப் பயிற்சிகள் மற்றும் எழுத்துப்பரீட்சைக்கான வகுப்புக்கள் யாவும் சங்கானையிலேயே நடைபெறும் .....
- இயந்திரத்திற்கான தொழில்நுட்ப வகுப்புக்களும் சனி, ஞாயிறுகளில் நடைபெறும்.

ஓடக்கரை வீதி, சங்கானை.
தொடர்பு: 021 225 1664

தலைமைக்காரியாலயம்
இல. 57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
077 722 6247, 021 221 7678

கிளை
வங்களாவடி சந்தி,
வேலணை.
021 221 5472


## நவராத்திரி பூசை

முல்லைத்தீவு,ஒக்.19

கற்சிலைமடு ஸ்ரீ விநாயகர் ஆலயத்தில் நவராத்திரி பூசையை முன்னிட்டுதினமும் மாலையில் விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்றுவருவதுடன்பாமாலை படிக்கும் நிகழ்வும் இடம்பெற்று வருகின்றன. எதிர்வரும் 22 ஆம் திகதி மானம்பூ உற்சவம் இடம்பெறவுள்ளது. (ஐ-500)

## சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.19

ம.பா.மகாலிங்கசிவத்தின் புதைமணல் சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நூலின் வெளியீட்டுரையை தெல்லிப்பழை கலை இலக்கிய கழகத்தின் செயலாளர் திருமதி கோகிலா மகேந்திரன் நிகழ்த்தவுள்ளார். (ஐ-ரி6)

## துணுக்காய் விவசாயிகளுக்கு உர விநியோகம் ஆரம்பம்

துணுக்காய்,ஒக்.19

துணுக்காய்ப் பிரதேச பெரிய நீர்ப்பாசனம், மானாவாரி நெல் வேளாண் செய்கைக்கான மானிய உர விநியோகம் கடந்த 13 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தற்போது சிறிய நீர்ப்பாசன குள விவசாயிகள் உரத்தை பெற்றுவருகின்றனர். பெரிய நீர்ப்பாசனக்குள விவசாயிகளுக்கு வெகு விரைவில் விநியோகம் மேற்கொள்ளப்படும் எனவும் குறிப்பிட்ட திகதிகளில் அந்தந்தப் பிரிவு விவசாயிகள் உர மானியத்தை பெற்றுக் கொள்வதற்கு தயாராகுமாறு துணுக்காய் கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (ஐ-425)

## வருடாந்த ஒன்று கூடல்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவர்களின் வருடாந்த ஒன்று கூடல் எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு கல்லூரியின் ஒட்லிமண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பிளின் அப்பிளிக்கேஷனை தடை செய்தது சீனா



அப்பிள் நிறுவனமானது மொபைல் சாதனங்களுக்கான புதிய இயங்குதளமான ஐ.ஓ.எஸ். 9 ஐ அண்மையில் அறிமுகம் செய்திருந்தமை அனைவரும் அறிந்ததே.
இந்தப் புதிய இயங்குதளத்துடன் அப்பிள் நியூஸ் எனும் அப்பிளிக்கேஷனையும் அந்த நிறுவனம் அறிமுகம் செய்திருந்தது.
இது குறித்த அப்பிளிக்கேஷனானது சீனாவில் பயன்படுத்த முடியாத அளவுக்குத் தடை செய்யப்பட்டுள்ளமை தற்போது கண்டறியப்பட்டுள்ளது.
இந்த அப்பிளிக் கேஷன் ஆனது அதனைப் பயன்படுத்துபவர்களின் இருப்பிடங்களை அறிந்தே, அதற்கு ஏற்றவகையில் தகவல்களை வழங்குகின்றது. இந்தக் காரணத்தை முதன்மைப்படுத்தியே சீனாவில் தடை செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
எனினும் இதற்கான சரியான காரணம் இதுவரை வெளியிடப்படாத நிலையில் அப்பிள் நிறுவனமும் இது தொடர்பாக எந்தவிதக் கருத்துக்களையும் வெளியிட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# விரைவில் அறிமுகமாகும் (McLaren 675LT Spider) கார்

பிரித்தானியாவில் உள்ள பிரபல ரேஸிங் கார் தொழில்நுட்ப நிறுவனமான **McLaren** ஆனது **675LT Spider** எனும் காரை 2016 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யவுள்ளது.
260,000 பவுண்ட்ஸ் பெறுமதியைக் கொண்டதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படும் இந்தக் காரின் விலையானது உயர்ந்தபட்சமாக 280,000 பவுண்ட்ஸ் வரை இருக்கலாம் என ஊகம் வெளியிடப்பட்டுள்ளது.
மேலும், மணிக்கு 205 மைல்கள் எனும் உச்ச வேகத்தில் பயணிக்கக்கூடியதாக இருப்பதுடன், ஓய்விலிருந்து வெறும் 2.9 செக்கன்களில் மணிக்கு 62 மைல்கள் எனும் வேகத்தை எட்ட வல்லது என்பது குறிப்பிடத்தக்கது.





# கால் தடம் பதிக்க வருகிறது பெப்சி நிறுவனம்

உலகின் பிரபல குளிர்பான நிறுவனமாக இருக்கும் பெப்சி அன்ரோயிட் தொடுபேசிகளை சீனாவில் வெளியிட உள்ளன.
இந்த, அன்ரோயிட் கருவிக்கு பெப்சி பி1 எனப் பெயரிடப்பட்டுள்ளது. அதன்படி பெப்சி பி1 கருவியானது எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் வெளியிடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. 5.5 இன்ச் 1080பி டிஸ்ப்ளே, 1.7 ஜிகாஹெர்ட்ஸ் குவாட்கோர் பிரவுஸர், 2 ஜிபி ரம், 16 ஜிபி இன்டர்னல் மெமரியும், 13 எம்பி ப்ரைமரி கமராவும், 5 எம்பி முன்பக்க கமராவும், அன்ரோயிட் லாலிபாப் 5.1 இயங்குதளமும் கொண்டிருப்பது இதன் சிறப்பம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு ஐந்து தற்காலிக உறுப்பு நாடுகள் தெரிவு

ஜெனிவா, ஒக்.19



ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தற்காலிக உறுப்பு நாடுகளாக எகிப்து, ஜப்பான், செனகல், உக்ரைன், உருகுவே ஆகிய நாடுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த ஐந்து நாடுகளும் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் எதிர்வரும் இரண்டு ஆண்டுகளுக்கு ஐ.நா. பாதுகாப்பு சபையின் தற்காலிக உறுப்பு நாடுகளாகச் செயற்படவுள்ளன.

தற்போது ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தற்காலிக உறுப்பு நாடுகளாக இரு ஆபிரிக்க நாடுகளும், ஆசிய-பசுபிக், லத்தீன் அமெரிக்க மற்றும் கரீபியன் நாடுகளுக்கு ஒரு இடமும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு ஓர் இட மும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அந்தவகையில் ஆபிரிக்க நாடுகளில் சாட் மற்றும் நைஜீரியாவும், ஆசிய பசிபிக் நாடுகளில் ஜோர்தானும், லத்தீன் அமெரிக்க மற்றும் கரீபியன் நாடுகளில் சிலியும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் லிதுவேனியாவும் ஐ.நா. பாதுகாப்புக் சபையில் தற்காலிக உறுப்பு நாடுகளாக உள்ளன. அந்த நாடுகளின் உறுப்புரிமைக் காலம் இந்த ஆண்டு இறுதியுடன் நிறை வடையவுள்ளது. இந்த நிலையில் அந்த இடங்களுக்கு எகிப்து, ஜப்பான், செனகல், உக்ரைன், உருகுவே ஆகிய நாடுகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.(ற)

## சூரியனி... பூமியைப்...

லண்டன், ஒக்.19

சூரியனில் மா பெரும் துளை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சூரியனைச் சுற்றி ஒளிப்படங்கள் எடுத்துவரும் நாசாவின் சோலர் டைனமிக்ஸ் ஒப்சர் வேட்டரி விண்கலம் அண்மையில் அனுப்பிய படங்கள் மூலமாக சூரியனில் மாபெரும் துளை உள்ளமை தொடர்பான தகவல் வெளியாகியுள்ளது.

சூரியனில் உள்ள இந்தத் துளைபூமியைப் போல 50 மடங்கு பெரிதாக இருக்கின்றது என்றும் தெரியவந்துள்ளது. அது மட்டுமின்றி இதன் காந்தப் புலம் அதிகவேக சூரிய காற்றை வீசுவதாகவும் தெ... கடந்த ஒக்ரோபர் 10ஆம் திகதி எடுக்...

## நேபாளத்தின் சபாநாயகராக முதன்முறை பெண் தெரிவு

காத்மண்டு, ஒக்.19

நேபாளத்தில் அரசியல் சாசனம் பிரகடனப்படுத்தப்பட்டு புதிய அரசு அமைக்கப்பட்டுள்ள நிலையில் நாடாளுமன்றத்தின் சபாநாயகராக முதன்முறையாகப் பெண்ணொருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.


முன்னாள் கெரில்லாப் போராளியான 37 வயதுடைய அன்சாரி கர்தி மகர், சபாநாயகராக நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் பல தசாப்தங்களாக இடம்பெற்று 2006ஆம் ஆண்டு முடிவுக்கு வந்த மாவோயிச எழுச்சிப் போராட்டத்தில் பங்குபற்றிய முன்னாள் மாவோயிச கெரில்லாப் போராளியாவார்.

தங்களது கட்சிகளின் சார்பில் நிறுத்தப்பட்ட அனுராதா தபா மகரின் வேட்புமனுவை நேபாள தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் கட்சி திரும்பப் பெற்றுக்கொண்டதை அடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்களால் அன்சாரி கர்தி மகர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை, நாடாளுமன்ற துணைத் தலைவராக கங்கா பிரசாத் யாதவ் என்ற பெண் ஒருமனதாகத் தேர்வு செய்யப்பட்டார்.

புதிய அரசியலைப்பு பிரகடனப்படுத்தப்பட்டதை அடுத்து நேபாளத்துக்கான அரசியல் சாசனத்தை எழுதுவதற்காக இருந்த அரசியல் நிர்ணய சபை, நாடாளுமன்றமாக மாற்றப்பட்டது. அதையடுத்து, நேபாளத்தின் புதிய பிரதமராக கே.பி.சர்மா ஒலி தெரிவு செய்யப்பட்டார். (ற)



லொஸ் ஏஞ்சல்ஸில் கடந்த வாரம் பெய்த கடும் மழையால் வீதிகள் வெள்ளத்தில் மூழ்கின. தற்போது... நிரம்பியுள்ளது. வாகனங்கள் போக்குவரத்துச் செய்ய முடியாது சேற்றுக்குள் சிக்கிக் கொண்டுள்ள... நடவடிக்கையில் கனரக வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.



# பிலிப்பைன்ஸில் சூறாவளி அபாயம்

### 6 மில்லியன் மக்களை வெளியேற்ற நடவடிக்கை

மணிலா, ஒக்.19

பிலிப்பைன்ஸை 'கோப்பு' சூறாவளி பெரியளவில் தாக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகின்ற பகுதிகளிலுள்ள சுமார் 6 மில்லியன் மக்களை வெளியேறுவதற்குத் தயாராக இருக்குமாறு ஜனாதிபதி பெனிக்னோ அகுய்னோ கடந்த வெள்ளிக்கிழமை எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பிலிப்பைன்ஸில் இந்த வார இறுதியில் கடும் மழை மற்றும் வெள்ளத்தை ஏற்படுத்தக் கூடிய பெரும் சூறாவளியொன்று ஏற்படக் கூடிய சாத்தியக்கூறுகள் நிலவுகின்றன.

அதையடுத்தே எச்சரிக்கையுடன் இருக்குமாறு மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ள னர்.

இது தொடர்பில் தொலைக்காட்சி நிகழ்வொன்றில் உரையாற்றிய ஜனாதிபதி, இந்த சூறாவளித் தாக் கத்தின் எதிரொலியாக 12 மணி நேரத்துக்குத் தொடர் கடும் மழை ஏற்படக்கூடும் எனவும் அதனால் பெரும் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதற்கான சாத்தியம் நிலவுகின்றது என்றும் குறிப்பிட்டார்.

அதேவேளை 2013ஆம் ஆண்டு பிலிப்பைன்ஸைத் தாக்கிய ஹையூன் சூறாவளியில் சுமார் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருந்தனர். (ற)

# பிரிட்டனின் ஆயுத விற்பனையின் முக்கிய சந்தை சவூதி அரேபியா!

### அறிக்கை ஒன்று கூறுகின்றது

லண்டன், ஒக்.19



சவுதி அரேபியாவால் மேற்கொள்ளப்பட்டு வரும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகக் கோசங்கள் வலுத்து வரும் நிலையில் ஆயுத விற்பனைக்காகவும், இராணுவ ரீதியான ஒப்பந்தங்களுக்காகவும் சவுதியின் சந்தையைப் பிரிட்டன் எதிர்பார்க்கின்றது என்று அறிக்கையொன்று சுட்டிக்காட்டியுள்ளது.

பிரிட்டனில் இருந்து வெளிவரும் கார்டியன் பத்திரிகையில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

பிரிட்டன் நிறுவனங்கள் இராணுவம், சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் நீதி போன்ற துறைகளில் ஒப்பந்தங்களில் ஈடுபடும் போது முன்னுரிமை கொடுக்கும் சந்தைகள் பற்றி அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

[illegible] பதவிக்கு வந்த 2010 முதல் ஏறக்குறைய 4 பில்லியன் பவுண்களுக்கான ஆயுத விற்பனை உரிமம் சவுதியின் தலைநகர் ரியாத்துக்கு வழங்கப்பட்டதுடன், 240 இராணுவ அதிகாரிகள், அரச உத்தியோகத்தர் என பல [illegible]பட்டவர்கள் பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சால் இரு நாடுகளிலும் பணிக்கமர்த்தப்பட்டனர் என்றும் குறிப்பிடப்படுகின்றது.

சவுதி அரேபியாவுக்கான மிகப் பெரிய ஆயுத வழங்குநர் பிரிட்டன் என்பதும், அந்த நாடு இறக்குமதி செய்யும் மொத்த ஆயுதங்களில் 36 சதவீதம் பிரிட்டனிலிருந்தே கொள்வனவு செய்யப்படுகின்றது என்றும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# னில் பெரும் துளை; யப் போல் 50 மடங்கு

துளை ஒன்று உள்ளமை
து.
படங்
வின்
ப்சர்
அண்
ங்கள்
பரும்
நாடர்
யாகி

ந்தத்
50
க்கின்
ந்துள்
இதன்
வேக
கவும் தெரியவந்துள்ளது.
திகதி எடுக்கப்பட்டுள்ள படத்தின்

மூலம் இதனை நாசா உறுதி செய்துள்ளது. இந்த ஒளிவட்டத் துளையைப் புற ஊதா



அலைநீளத்தால் எமது கண்களால் காண முடியாதுள்ளது என்றும் நாசா தெரிவித்துள்ளது.(ற)



தற்போது வெள்ளம் வடிந்து வரும் நிலையில் வீதிகள் எங்கும் சேறு
ண்டுள்ளன. தற்போது வீதிகளில் தேங்கியுள்ள சேற்றை அகற்றும்

# இரட்டைக் கோபுர தாக்குதலில் ஜோர்ஜ் புஷ்ஷுக்கும் தொடர்பு!

## அந்த நாட்டு ஜனாதிபதி வேட்பாளர் டோனால்ட் ட்ரம்ப் கூறுகின்றார்

நியூயோர்க், ஒக்.19

2001 ஆம் ஆண்டு அமெரிக்காவில் இடம்பெற்ற இரட்டைக் கோபுரங்கள் தாக்குதலில் அப்போது ஜனாதிபதிப் பதவி வகித்த ஜோர்ஜ் டபிள்யூ புஷ்க்கும் தொடர்பு உள்ளது என்று தெரிவித்துள்ளார் 2016ஆம் ஆண்டுக்கான அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட உள்ள டோனால்ட் ட்ரம்ப். தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த செவ்வியின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



அமெரிக்காவில் நடைபெற்ற இரட்டைக் கோபுரத் தாக்குதலில் முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்க்கும் தொடர்பு இருக்கின்றது என்று அவர் தெரிவித்தார். அதனை விவரிக்குமாறு கேட்டபோது அப்போதைய ஜனாதிபதி அவர் தான். அதில் நிச்சயம் அவர் சம்பந்தப்பட்டுள்ளார் என்று அவர் பதிலளித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட உள்ள டொனால்ட் டிரம்புடன் அதே கட்சியைச் சேர்ந்த ஜெப் புஷ் போட்டியிடுகிறார். இவர் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் தம்பியும், புஷ்ஷின் இரண்டாவது மகனுமாவார். (ற)

# அலப்போ நகரின் மீது சிரிய படை தாக்குதல்

## ரஷ்ய விமானப் படை உதவியுடன்

அலப்போ, ஒக்.19

சிரியாவின் இரண்டாவது பெரிய நகரான அலப்போ நகரிலுள்ள கிளர்ச்சியாளர்களை இலக்கு வைத்து ரஷ்ய விமானத் தாக்குதல்களின் ஆதரவுடனான சிரிய அரசப் படைகள் புதிய தாக்குதலை ஆரம்பித்துள்ளன.

இந்தத் தாக்குதலில் ஹெஸ்பொல்லா மற்றும் ஈரான் நாட்டு இராணுவ வீரர்களும் ஈடுபட்டுள்ளனர் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

ரஷ்யா இரண்டு வாரங்களுக்கு முன்னர் வான்வழித் தாக்குதல்களைத் தொடங்கியது முதல் சிரியா இதுவரை நான்கு தரைவழித் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

இந்நிலையில் ரஷ்யாவால் முன்னெடுக்கப்பட்டுவரும் வான்வழித் தாக்குதல்களால் கிளர்ச்சிக் குழுக்கள் பெரும் இழப்புக்களை எதிர்நோக்கி வருகின்றன என்று சிரிய இராணுவத்தினர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளனர். அலெப்போ நகரின் கட்டுப்பாடு 2012ஆம் முதல் படைகளுக்கும், பல்வேறு கிளர்ச்சிக் குழுக்களுக்குமிடையே பிரிக்கப்பட்டுள்ளது. (ற)




# ஏவுகணைத் தாக்குதலில் அல்-குவைதா தளபதி சாவு

லண்டன், ஒக்.19

வடக்கு சிரியாவில் இடம்பெற்ற ஏவுகணைத் தாக்குதலில் அல்-குவைதா தீவிரவாத அமைப்பின் சிரேஷ்ட தளபதி ஒருவர் உட்பட மேலும் இரண்டு தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர் என்று ஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்ட கண்காணிப்புக் குழுவொன்று தெரிவித்துள்ளது.

ஷனாபி அல் நசர் என்று அறியப்பட்ட சவுதியைச் சேர்ந்த குறித்த அல்-குவைதா தளபதியுடன், அல்-குவைதாவுடன் சேர்ந்து இயங்கும் அல்-நுஷ்ரா தீவிரவாத அமைப்பின் இரண்டு தீவிரவாதிகளும் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஆனாலும், அமெரிக்காவால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலிலா? அல்லது ரஷ்யாவால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலிலா ஷனாபி அல் நசர் கொல்லப்பட்டார் என்பது குறித்துத் தெளிவாகத் தெரியவில்லை எனக் கண்காணிப்புக் குழுவின் தலை வர் ரமி அப்துல் ரஹ்மான் குறிப் பிட்டுள்ளார்.

இதேவேளை, அமெரிக்கா மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதலிலேயே அவர் கொல்லப்பட்டுள்ளதாக தக்ஃபிறி அமைப்பினர் தெரிவித்துள்ளனர். (ற)

# சேவை நேரத்தில் வேண்டாம் சமூக வலைத் தள பயன்பாடு

## பிரேஸில் பொலிஸாருக்கு கடும் உத்தரவு

பிரேஸிலா, ஒக்.19

சேவை நேரத்தில் சமூக வலைத் தளங்களைப் பயன்படுத்தும் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராகத் தீவிரமான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என பிரேஸில் அரசு அறிவித்துள்ளது.

சமூக தளங்களைப் பயன்படுத்துவதில் உலகிலேயே முதலிடம் வகிக்கும் நாடாக பிரேஸில் விளங்குகின்ற நிலையில், சமூக வலைத்தளங்கள் மற்றும் தொடுபேசி ஆகியவற்றை வேலை நேரத்தில் பொலிஸார் உபயோகப்படுத்துவதற்கு பிரேஸில் அரசு தடை விதித்துள்ளது.

வேலை நேரத்தில் சமூக தளங்களைப் பயன்படுத்துவது தீவிரமான குற்றம் எனக் குறிப்பிடப்பட்டு, ரியோ டி ஜனீரோ மாநிலத்தில் பொலிஸாருக்குச் சுற்றறிக்கை ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்தச் சுற்றறிக்கையில், மக்களின் பாதுகாப்பு, கடமையில் பொறுப்பு மற்றும் உரிய நேரத்தில் சேவையளிப்பது ஆகியவற்றில் பொலிஸாரை முறையாக செயற்படவிடாமல் தடுக்கும் இதுபோன்ற சமூக தளங்களைப் பயன்படுத்தக் கூடாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், இதற்கான தண்டனை விவரங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (ற)

# ஜெருசலேம் மோதல்: ஐ.நா. கடும் கண்டனம்

ஜெனிவா, ஒக்.19

மேற்குக் கரை மற்றும் கிழக்கு ஜெருசலேம் பகுதியில் இஸ்ரேலியர்களுக்கும் பலஸ்தீனியர்களுக்கும் இடையே தொடர்ந்து வரும் மதப் போராட்டமானது பேரழிவை விளைவித்து வருகின்றது என்று ஐக்கிய நாடுகள் சபை குற்றம் சாட்டியுள்ளது.

ஜெருசலேமில் தொடரும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை கடந்த வெள்ளிக்கிழமை அவசர கூட்டமொன்றைக் கூட்டி விவாதித்திருந்த நிலையிலேயே மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரங்களில் பல கொடிய சம்பவங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில், அவை வன்மையாகக் கண்டிக்கத்தக்கவை என அரசியல் விவகாரங்களுக்கான ஐ.நா. உதவி செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் நீதியை நிலைநாட்டுவதற்கு உரிய தரப்பினர் அனைவரும் முன்வர வேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் தொடர்ந்துவரும் மோதல்களில், இதுவரை 7 இஸ்ரேலியர்கள் மற்றும் 32 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

124 இஸ்ரேலியர்களும், ஆயிரத்து 118 பலஸ்தீனியர்களும் படுகாயமடைந்துள்ளனர். (ற)

# தென் கொரியக் கடற்படை பெரும் இராணுவ பயிற்சி

சியோல், ஒக்.19

தென்கொரியத் தலைநகர் சியோலின் பெரும் துறைமுக நகரான பூஸனில் தென்கொரியக் கடற்படையினர் நேற்றுமுன்தினம் இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டனர்.

தென்கொரிய விடுதலை மற்றும் கடற்படை நிறுவப்பட்டதன் 70 ஆவது ஆண்டு நிறைவு என்பவற்றை முன்னிட்டே இந்த இராணுவப் பயிற்சி நடத்தப்பட்டுள்ளது.

பல கடற்படை இராணுவ ஒத்திகைகள் மேற்கொள்ளப்பட்டன என்று தென்கொரிய இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார். இதன்போது, போர்க் கப்பல்களை எதிர்க்கொள்ளல், விமானங்களை எதிர்கொள்ளல், நீர்மூழ்கிக் கப்பல்களை எதிர்ப்பதற்கான போர்ப் பயிற்சி உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பயிற்சிகள் முன்னெடுக்கப்பட்டன என்றும் அவர் குறிப்பிட்டார்.


இராணுவ பயிற்சியில் சுமார் 5 ஆயிரத்து 800 இராணுவத்தினர் பங்குபற்றியிருந்ததுடன், 35 போர்க் கப்பல்கள், 35 இராணுவ விமானங்கள் என்பனவும் ஈடுபடுத்தப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ற)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டிப்புள்ள ஆசிரியர்களே சமூகத்தால் மதிக்கப்பட்டார்கள்

சரா. புவனேஸ்வரன்
பொதுச் செயலாளர்,
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்



நல்ல மனிதர்களை உருவாக்குகின்ற பணியின் மூலவேராகத் திகழ்பவர்கள் ஆசிரியர்களே. அவர்கள் வணக்கத்துக்கும், மதிப்புக்கும் உரியவர்களாக சமூகத்தில் இடம் பிடித்திருந்தனர். ஆனால் இன்று அத்தகைய நிலைமாறி ஆசிரியர்களை மதிக்காத சமூகம் உருவாகி வருவது கண்டு மனவேதனை அடைகின்றேன். அதற்கு சமூகத்தில் உள்ளவர்கள் மட்டுமன்றி நாமும் காரணமாகின்றோம். முன்னைய காலங்களில் கண்டிப்புள்ள ஆசிரியர்களே சமூகத்தில் மதிப்புள்ளவர்களாக வாழ்ந்தார்கள். ஆனால், இன்று அத்தகைய நிலை இல்லை.

தமது கடமைகளைச் சிறப்பாகவும், சீராகவும் ஆற்றி அதனூடாக நல்ல அறுவடைகளைப்பெற்று தனிமனித வாழ்கையையும், சமூகத்தையும் உயர்வான நிலைக்கு கொண்டு வந்தவர்கள் ஆசிரியர்களே. அவர்களின் கண்டிப்பும், அவர்கள் வழங்கிய தண்டனையும் ஏற்புடையதாக மாணவர் மனங்களில் விழிப்பை உண்டாக்கியது. ஆனால் இன்று அப்படியல்ல. கண்டிப்பை ஏற்றுக்கொள்ளும் மாணவரும் இல்லை. சாதனைகளுக்கு உரிமை கோரக்கூடிய ஆசிரியர்களும் இல்லை. காரணம் ஒரு மாணவனின் சாதனையில் அதிக பங்காளிகள் உள்ளனர். அவர்களை இனங்காண்பதிலும், வணங்குவதிலும் மாணவர்களுக்கு பல்வேறு சிக்கல்கள் உள்ளன. இதனை உணராத சமூகம் ஆசிரியர்களை வணங்கும், வாழ்த்தும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. மாறாக சாதனைக்கு உரியவர் நான்தான் என்பதை மாணவன் எப்பொழுது சுட்டிக்காட்டுகின்றானோ அன்றுதான் நாம் மதிப்புக்கும், மரியாதைக்கும் உரியவர்களாக மாறுகின்றோம்.

நாம் கற்கும் காலத்தில் கண்டிப்பான ஆசிரியர்களாலேயே கற்பிக்கப்பட்டோம். அப்போது கற்பதென்பது எமக்குச் சுமையாக இருந்தது. கற்பதால் என்ன பயன் என்பதை நாம் உணர்ந்திருக்கவில்லை. கற்பதைவிட களிப்புடன் வாழ்வதையே கருப்பொருளாக் கொண்டிருந்தோம். அந்தக் காலத்தில் கண்டிப்பான ஆசிரியர்களுக்குப் பயந்தே நாம் கற்றோம் என்பதால்தான் அதன்பலாபயனை இன்று அனுபவிக்கின்றோம்.

இன்று கண்டிப்பு வழங்கும் அளவுக்கு ஆசிரியர்களும் இல்லை. அதுமுடியாத காரியமும்கூட. அதேவேளை, கண்டிப்பை ஏற்றுக்கொள்ளும் மாணவர்களும் இல்லை. இந்த நிலை மாறாத வரை மாணவப் பராயத்தில் கற்க

> “ கண்டிப்பும், அவர்கள் வழங்கிய தண்டனையும் ஏற்புடையதாக மாணவர் மனங்களில் விழிப்பை உண்டாக்கியது. ஆனால், இன்று அப்படியல்ல. கண்டிப்பை ஏற்றுக்கொள்ளும் மாணவரும் இல்லை. சாதனைகளுக்கு உரிமை கோரக்கூடிய ஆசிரியர்களும் இல்லை. காரணம் ஒரு மாணவனின் சாதனையில் அதிக பங்காளிகள் உள்ளனர்.

வேண்டிய எதையும் மாணவன் கற்காத நிலை தோன்றி எம்மில் எவரையுமே மதிக்காத சமூகம் உருவாகும். ஆகையால் கண்டிப்புக்குப் பதிலாக சாதனையின் சொந்தக்காரர்களாக நாம் மட்டும் மாறி, மாணவர் மனதில் இடம் பிடித்து அதனூடாக நல்ல சமூகத்தை உருவாக்குவோம்.

# வங்கி வாடிக்கையாளர்களும் பிடித்து வைத்தல் வரியும்

நடேசன் உதயசேகர்



வங்கி வாடிக்கையாளர் மத்தியில், நிதியாண்டின் இறுதிக் காலப் பகுதியில் அல்லது வரும் நிதியாண்டின் ஆரம்பத்தில் ஏற்படும் பதட்டம் என்னவாக இருக்கும் என வினவினால், அது பிடித்து வைத்தல் வரியும் அதன் சம்பந்தமான வரிமதிப்பு பிரகடனத்தை மேற்கொள்வதாகவுமே அமையும் எனலாம்.

இது சரியானதே என்பதை உறுதிப்படுத்தும் முகமாக, வெவ்வேறு வங்கிக் கிளைகள் தோறும் படி ஏறி இறங்கும் முதியவர் கூட்டமும், எத்தனையோ விசாரணைகள், தொலைபேசி அழைப்புக்கள் என சல்லடை போட்டுத் துளைக்கும் கேள்விகளும், அதற்கேற்ப தொடர் அலையான விளக்கங்களும் இவற்றுக்கு மேலான விமர்சனங்களும் காலத்துக்குக் காலம் நாம் கண்ட அனுபவங்களாகவே அமைந்து கிடக்கின்றன.

இவ்வாறானதோர் நிலையில், வாடிக்கையாளர்களுக்கு இந்த வரிவிதிப்பு பற்றி நிதிசார் அறிவை வழங்குவதற்கும், அவர்கள் தம் வங்கி வைப்பாளர்களின் மேல் அதீத நம்பிக்கையை ஏற்படுத்துவதற்குத் தற்கால போட்டிமிகு நிலையில் உள்ள வங்கித் தொழிற்பாடுகளின் ஒரு வலுவூட்டப்பட்ட சேவையாக, நிதிசார் அறிவுரையை மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் அனைத்து வங்கிகளும் தள்ளப்பட்டுள்ளன என்ற உண்மையை கூறவேண்டியது, வங்கியாளன் ஆகிய எனது கடமையாகும்.

அந்த வகையில், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின், மேம்படுத்தப்பட்ட சுற்றறிக்கையின் இல. SEC/2015/02 பிரிவு 133 இன் சட்ட இல. 10இன் 2006 கூறப்பட்ட விடயங்கள்-இந்த நிதியாண்டின் பிடித்து வைத்தல் வரி முறைமை பற்றி விளக்கமாக கூறுகின்றது. குறிப்பாக இலங்கைப் பிரசைகள் அனைவரும், இந்த் நாட்டின் வர்த்தமானியில் அறிவிக்கப்படும் விடயங்களை அறிந்து கொள்வதற்கான உரிமையைக் கொண்டுள்ள அதேவேளை இந்த அறிவித்தல்களுக்கு அமைய தமது செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான கடமையையும் கொண்டுள்ளன. இந்தக் குறித்த வரிவிதிப்பு முறையானது, மேல் கூறப்பட்ட சுற்றறிக்கையின் படி தனிநபர், கூட்டுக்கணக்கு உடையோர், தனியுடைமையாளர், பங்குடைமையாளர் கணக்குகள் சேமிப்புக் கணக்குளாக அமையும் பட்சத்தில் அந்த வைப்புக்களின் மொத்த வட்டி ரூபா ஐயாயிரத்தை விட அதிகமாகும் பட்சத்தில் 2.15 வட்டி மீதான வரிவிதிப்புக்கும், நிலையான வைப்புக்களாயின் மொத்த வட்டியின் முதிர்வுத்திகதியில் அல்லது மீளப்பெறுகையில் 2.5 ஆகவும் அமையும்.

இவ்வாறே, பொதுவான கழகங்கள், சமூக அமைப்புக்கள், சங்கங்கள் ஆக இருப்பின் சேமிப்பு வட்டி ரூபா ஐயாயிரத்துக்கு மேற்படின் வட்டியின் மீது 8.0 வீதமும் நிலையான வைப்பின் முதிர்வின் போது அல்லது மீளப்பெறுகையின்போது, வட்டியின் மீது 8 ஆகவும் அமையும். இந்த நிலைமை நிறுவனங்களைப் பொறுத்த வரையில் 10 ஆகும். எனினும், சேவை சார் கழகங்கள், பொது நிறுவனங்கள் தாம் மேற்கொள்ளும் சமூக நற்சேவைகள், குழந்தைப் பராமரிப்பு, முதியவர்களைப் பேணுதல், மாற்றுத்திறனாளிகளுக்கு சேவைகளை வழங்குதல் சம்பந்தமாக அமையும் என்பதை உறுதிப்படுத்தும் இடத்தும், தமது நிறுவன சேவையை உரிய அரச ஆணையாளர் ஊடகப் பதிவை மேற்கொள்வதன் மூலமும் இந்த வரி விரிப்பை 2.5 ஆகக் குறைக்க முடியும்.

மேலும், மேற்குறித்த தகைமைகளுடன், இறைவரித் திணைக்களத்தின் வரிவிலக்கைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் முற்றாகவே பிடித்து வைத்தல் வரிவிலக்கை பெறுவதற்கான வாய்ப்புக்களும் உள்ளதென்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

இதற்கு மேலாக, இந்தமுறை வாடிக்கையாளருக்கு உள்ள சௌகரியமான விடயம் என்னவெனில், தமது வருமானம் சம்பந்தமான வெளிப்படுத்தல்களையோ அல்லது வரிமதிப்புக்கான பிரகடனங்களையோ மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்பதாகும்.

எனவே, இந்தமுறை அனைத்து வங்கி வாடிக்கையாளர்களும், பிடித்து வைத்தல் வரி சம்பந்தமாகவோ அல்லது அதன் வரி மதிப்பீட்டு பிரகடனம் சம்பந்தமாகவோ அதிகம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை என்பதோடு, அவர்தம் வைப்புக்கள் அல்லது முதலீடுகளுக்கு ஏற்ற வகையில் முதிர்வின்போதோ அல்லது மீளப்பெறுதலின்போதோ வரி அறவீட்டை ஏற்றுக்கொண்டு, அந்த வரிப் பணமானது, அரசின் வருவாயின் ஒரு அங்கமாகக் கருதி, நாட்டின் பொருளாதார மற்றும் நிதிசார் அபிவிருத்தி மற்றும் உறுதிப்பாட்டுக்கு தமது பங்களிப்பை வழங்குவதாக பெருமை கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்ணெய் திரண்டு வர தாழி உடைந்த நிலையா? தமிழினத்துக்கு!!

பல தசாப்த காலமாகத் தமிழின விடுதலைக்காக சாத்வீக வழியில் தந்தை செல்வா அவர்கள் போராடித் தீர்வு கிடைக்காத நிலையில் இளைஞர்கள் ஆயுதமேந்திப் போராடி ஆயுத கலாசாரம் தோற்றுப் போனா லும் சர்வதேசக் கதவை அல்லது உணர்வைத் தட்டிச் சென்ற நிலையில் இன்று தந்தை செல்வாவின் அரசியல் பாசறையில் வாழ்ந்த முதுபெரும் அரசியல் சாணக்கியம் நிறைந்த எமது சம்பந்தன் ஐயா எதிர்க்கட்சித் தலைவராகவும் வந்துள்ளார். இதன்மூலம் தமிழினத்துக்கு ஒரு தீர்வு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் எம் மக்கள் உள்ளனர்.

ஆனால் சமகால பத்திரிகைச் செய்திகள் மீண்டும் ஆறாத்துயருக்கு இட்டுச் செல்கின்றன.

1. அண்மையில் யாழ். சென்ற எமது சம்பந்தன் ஐயா ஒரு நேர்காணலில் ஏன் வன்முறை உருவானது என வினவியுள்ளார்.

2. வலி.வடக்கில் கிராமசேவை உத்தியோகத்தரிடம், காணியைக் கையகப்படுத்தியது யார்? ஏன் விடுவிக்கவில்லை எனக் கேள்வி எழுப்பியுள்ளார். கிராம சேவை உத்தியோகத்தர் பதிலளிக்கவில்லை.

இப்படியான சிறுபிள்ளைத்தனமான கேள்வியும், எமது அபிமானத்துக்கு உரிய முதலமைச்சருடன் முரண்படுவதும் தமிழினத்துக்கு ஏற்புடையதல்ல. மேலும் தேர்தல் காலத்தில் ஒரே சின்னத்தில் போட்டியிடுகின்றார்கள். நடவடிக்கையில் அது ஆயுதக் குழு. இது அரசியல் குழு என்கிறார்கள். எனவே தயவுசெய்து அனைவரின் பங்களிப்புடன் எல்லோரையும் ஒற்றுமையாக, கூட்டமைப்பையும் பதிவு செய்து முதல் அமைச்சரையும் அவருக்குரிய கௌரவத்தை வழங்கி, நான் பெரிது நீ பெரிது என முரண்படாமல் எமக்கு ஒரு நல்ல தீர்வைப் பெற்றுத் தர வேண்டும் என தமிழ்த் தலைவர்களை மன்றாட்டமாக மக்கள் சார்பாக வேண்டுகிறேன்.

– முல்லையிலிருந்து தமிழ் உணர்வாளன்

# மாற்றி யோசித்தால் என்ன?

தங்கள் உதயன் நாளிதழில் வெளியாகியிருந்த கொடிகாமம் வழித்தட பஸ்களில் பயணிப்போருக்கு ஏற்படும் பாதிப்புப் பற்றி வாசகர் ஒருவர் எழுதியிருந்ததை வாசித்த பின்னர்தான் உதயன் ஊடாக இதையும் சமூகத்துக்குத் தெரிவிக்க வேண்டும் எனும் எண்ணம் ஏற்பட்டதனால் குறித்த வழித்தடத்தில் பயணிக்கும் மாணவர்களில் பருவகாலச் சீட்டு (சீசன் ரிக்கற்) வைத்திருப்போரது பரிதாப நிலைபற்றி இங்கு குறிப்பிடுகிறேன்.

கொடிகாமத்தில் இருந்து இ.போ.ச. பஸ்களில் யாழ்ப்பாணம் வரும் பொதுமக்களும் மாணவர்களில் கூடுதலானோரும் சீசன் ரிக்கற்றையே பயன்படுத்துகின்றனர். இவர்களுக்கு இ.போ.சவும் சிறப்பாகச் சேவை புரிந்து வருவது மறுப்பதற்கில்லை. ஆயினும் இந்த வழித்தடத்தில் வரும் ஒரு சில இ.போ.ச. பஸ்கள் சீசன் ரிக்கற் வைத்திருப்பவர்களை, குறிப்பாக மாணவர்களை ஏற்றிச் செல்வதைத் தவிர்த்து வருகின்றமை தான் கவலைக்குரியது. சீசன் ரிக்கற்றை விநியோகிக்கும் இ.போ.ச. அதிகாரிகள் அவற்றை வழங்கும்போதே குறிப்பிட்ட சில வழித்தட இலக்கங்களை மட்டுமே அவற்றில் குறிப்பிடுகின்றனர். அந்த இலக்க வழித்தட பஸ்களில் மட்டுமே பயணிக்க முடியும் என்பதைச் சுட்டிக்காட்டி இதே வழித்தடத்தில் பயணிக்கும் சில நீண்டதூர பஸ்கள் – பஸ்ஸில் போதிய இடமிருப்பினும் சீசன் ரிக்கற் வைத்திருக்கும் மாணவர்களைத்தானும் ஏற்றுவதில்லை. மக்களுக்காக மக்களினால் சேவையில் ஈடுபடும் மக்கள் வாகனங்கள் இந்த விடயத்தில் கொஞ்சம் நெகிழ்ச்சிப் போக்கைக் கடைப்பிடிக்கக் கூடாதா என்பதுதான் பிரயாணிகளின் எதிர்பார்ப்பாகும்.

அண்மையில் யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒருவர் இந்த வழித்தடத்தில் வந்த, வடக்கு மாகாண டிப்போ சாராத இ.போ.ச. பஸ்ஸில் ஏறிய போது, பஸ்ஸின் நடத்துநரால் பண்பற்றவிதத்தில், அவமதிக்கும் வகையில் அநாகரிகமாக நடத்தப்பட்டு பலாத்காரமாக பஸ்ஸில் இருந்தும் இறக்கிவிடப்பட்டார். பாவம் அந்த மாணவன் – அதுவும் இளைஞன். படிக்க என்று வந்து இப்படியெல்லாம் அவமானப்பட வேண்டியிருக்கிறதே என்று அவர் சிந்திக்க முற்பட்டால் அவரது கல்விச் செயற்பாடுகளுக்கும் குந்தகம் ஏற்படலாம். அவமானப்பட்டுத் தலை குனிந்தபடி பஸ்ஸிலிருந்து இறங்கும்போது அம்மாணவனது மனநிலை எவ்வாறெல்லாம் பாதிக்கப்படும் என்பதை ஏன் இவர்கள் சிந்திப்பதில்லை. யாசகம் செய்வோரை எல்லாம் சுயாதீனமாகப் பஸ்ஸில் செயற்பட அனுமதிக்கும் இவர்கள் நாளைய சமூக நாயகர்களான மாணவர்களை மட்டும் ஏன் ஏற்றிச் செல்ல மறுக்கின்றனர். 'சீசன்' ரிக்கற்றுகளுக்குச் செலுத்தப்படும் கட்டணங்களும் சேர்ந்துதான் இவர்களின் சம்பளமாகின்றன என்பதை ஏன் மறந்து விடுகின்றனர். சீசன் ரிக்கற் வைத்திருப்போரை ஏற்றாவிடில் அவர்கள் தனியார் பஸ்களில் செல்வதற்கு கட்டணம் செலுத்திப் பயணிப்பதைத் தவிர்க்க மேலதிகாரிகள் கொஞ்சம் மாறியோசித்தால்தான் என்ன?

சீசன் ரிக்கற் வைத்திருப்போரை குறிப்பாக மாணவர்களையாவது குறித்த வழியாகப் பயணிக்கும் பஸ்கள் கட்டாயமாக ஏற்றிச் செல்ல வேண்டும் என இ.போ.ச. அதிகாரிகள் பணிக்கக்கூடாதா? சமூக நலனுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் மாறி யோசித்தால்தான் என்ன?

– கு.தாரிணி, மிருசுவில்.


## வாசகர் திருமுகம்



## கேலிச் சித்திரம்

மைத்திரி.....நீங்கள் ஐ.நா.சபையில் சிங்கள மொழியில் உரையாற்றியதைக் கேட்டபோது எனக்குப் பெருமையாக இருந்தது.

– மகிந்த ராஜபக்ச.



நன்றி: மவ்பிம

# ஆரம்பித்தது நவராத்திரி

**தொ**டங்கிவிட்டது நவராத்திரி திருவிழா. சின்னஞ் சிறுசுகளுக்குப் பெருவிழா. அது ஒரு காலத்தில். ஆனால் இப்போது நவராத்திரி கொண்டாட வேண்டும் என்பதற்காகக் கொண்டாடுமாப்போல இருக்கின்றது.

முன்னர் எல்லாம் ஒன்பது தினங்களும் வீட்டில் கும்பம் வைத்து பக்தி சிரத்தையோடு விரதம் அனுஸ்டிப்பார்கள். குறிப்பாக மாணவர்கள் இருக்கும் வீட்டில் பின்நேரங்களில் சகலகலாவல்லி மாலை கேட்கத்தொடங்கிவிடும். ஆலயங்களில் பக்தர்கள் கூட்டம் குழுமும்.

இப்போது பார்த்தால் மாலைநேரங்களில் மாணவர்கள் பிரத்தியேக வகுப்புக்களில் இருப்பார்கள். ஒன்பது நாளும் வீட்டில் கும்பம் வைத்தலும் பெருமளவில் குறைந்துவிட்டது. நவராத்திரியின் இறுதி மூன்று நாள்களைமட்டும் வீட்டில் அனுஸ்டிக்கிறார்கள்.

நவராத்திரி தொன்று தொட்டு அனுஸ்டிக்கப்படும் விரதங்களில் ஒன்று. இது மனிதனுக்கு அவசியமான ஆற்றலின் அதிதேவதையாக விளங்குகின்ற சக்தியைப் போற்றும் விதமாக அனுட்டிக்கப்படுகிறது. இது புரட்டாதி மாதத்தில் சூரியன் கன்னி இராசியில் சஞ்சரிக்கும் காலத்தில் வரும்.

ஆலயங்களில் சொல்லிக்கொள்ளும் அளவுக்குத் தற்போது நவராத்திரி விழா சிறப்பிக்கப்படாவிட்டாலும், கிராமிய இந்து ஆலயங்களில் பழமை மாறாமல் உள்ளது. விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக்கொள்ளவேண்டிய விடயம். இளம் தலைமுறையினரிடம் பக்தி குறைகின்றது அதற்கு அவர்களைக் குற்றம் சொல்ல முடியாது. காலம் பெருமளவு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதே உண்மை.

மூதாதையர் காலத்தில் நவராத்திரியின் ஒன்பது தினங்களும் விதம் விதமான பலகாரங்கள் செய்து தேவிகளுக்கு படைத்து அயலவர், உறவினருடன் பகிர்ந்து உண்டுள்ளனர். இன்று சமூக வலைத்தளங்களில் வாழ்த்தினைத் தெரிவித்துவிட்டு நகர்கின்றது இளம் சமுதாயம்.

பேரழிவுக் காலத்தின் முடிவில், இறைவன் உலகத்தை உண்டாக்க விரும்பினபோது இச்சை என்ற சக்தியும், அது எவ்வாறு தோன்றியது என்று அறிந்தபோது ஞானசக்தியும் தோன்றின. பின் கிரியா சக்தியினால் இறைவன் உலகைப் படைத்தான் என்ற கருத்தே நவராத்திரி விழாவால் விளக்கப்படுகின்றது. நவராத்திரி வழிபாடு சக்தி மகிமையை விளக்கும். மனிதனின் முக்கிய தேவைகளான கல்வி, செல்வம், வீரம் இம்மூன்றையும் வேண்டி அவற்றுக்கு அதிபதிகளான சுரஸ்வதி, லஷ்மி, துர்க்கை என்ற மூன்று சக்தி அம்சங்களையும் வழிபடுதலே இந்த விரதத்தின் நோக்மாகும்.

இன்றைய காலத்தில் நவராத்திரி பற்றியாவது தெரிந்துவைத்திருக்கின்றனர். ஆனால் எமது எதிர்கால சந்ததியினர் 'நவராத்திரியா? அப்பிடி என்றால்?' என்று கேட்கும் நிலை வருமா என்பதுபற்றி நாங்கள் தான் சிந்திக்க வேண்டும்.

வீடுகளில் கொலுவைத்தல் நவராத்திரியின் விசேஷ அம்சமாகும். படிப்படியாக அமைக்கப்பட்ட விசேஷமான பீடங்களில் அல்லது மாடிப்படிகளில் விதவிதமான பொம்மைகள் வைத்து இக் கொலு அலங்கரிக்கப்படுகிறது. 5, 7 என்ற ஒற்றைப்படையாகப் படிகளின் எண்ணிக் கையை வைத்துக் கொலு அமைக்கப்படுகிறது. அருகிலேயே கும்பம் வைத்து சுவாமிப்படங்களையும் மாட்டி அணையா விளக்குகள் ஏற்றி ஒன்பது நாள்களும் விதவிதமான பட்சணங்களை நைவேந்தியம் செய்து பூஜிப்பது முறை. எவராவது செய்கின்றோமா? ஆனால் எமது முன்னோர்கள் செய்துள்ளனர்.

முன்னர் இப்படியும் ஒரு முறை இருந்ததாம். அதாவது சுமங்கலிப் பெண்களை விரத நாள்களில் வீட்டுக்கு அழைத்து அவர்களைப் பராசக்தியாகப் பாவித்துக் கொலுவின் அருகில் அமரச் செய்து வணங்கி மஞ்சள், குங் குமம், பட்டு, நாணயம், தாம்பூலம் என்பவற்றை வழங்கு வார்களாம். நவராத்திரியின் ஒன்பதாம் நாளாகிய மஹாநவமியன்று சரஸ்வி பூஜை அல்லது கலைமகள் விழா அல்லது ஆயுத பூஜை என்றும் சிறப்பாக கூறுவர். புத்தகங்கள் சரஸ்வதி தேவியின் உறைவிடம், கலைப் பொருட்கள், இசைக்கருவிகள், தொழிற்கருவிகள் முதலிய ஆயுதங்களை வைத்து குறித்த நாளில் வழிபடுவார்கள். இன்றைய காலத்தில் ஆயுதம் என்பது மடிக் கணினிதான் பலருக்கு.

பாடசாலைக் காலத்தில் நவராத்திரி என்றால் தனிக் கொண்டாட்டம். தினமொரு வகுப்புக்கென்று பூசைகள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். அவர்கள் அதைச் சிறப்பாகச் செய்வார்கள். பிரசாதங்கள் வேறு வகுப்புக்களுக்கு வரும். இப்போது அதனை நினைத்துப் பார்த்து மகிழ்வதாகவே உள்ளது.

நவராத்திரிக்கென்று விரதகாலப் பாடல்கள் உள்ளன. தேவி மகாத்மியம், அபிராமி அந்தாதி, துர்க்கா அஷ்டகம், இலட்சுமி தோத்திரம், சகலகலா வல்லி மாலை, சரஸ்வதி அந்தாதி, மஹிஷசுரமர்த்தினி தோத்திரம் போன்றவை. ஒன்று மட்டும் ஏற்றுக் கொண்டாக வேண்டும். மூத்த தலைமுறை இருக்கும் வரை சாஸ்திரங்கள் சம்பிரதாயங்கள் இருக்கும். பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக மலையேறி விடும்... சிந்தித்துச் செயற்படுவோம்.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com


## ஒரு கண்ணில் வெண்ணெயும் மறு கண்ணில் சுண்ணாம்பும் வேண்டவே, வேண்டாம்.....

நாட்டின் பல்வேறு சிறைச்சாலைகளிலும் கால வரையறையற்ற உணவு தவிர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் அனைவருக்கும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமிருந்து வந்த ஒரு தகவலை அடுத்து அதனைக் கைவிட்டுள்ளார்கள் என்பது தமிழ் மக்கள்அனைவருக்கும் ஓர் ஆறுதல் தரும் செய்தியாகும்.

கடந்த ஆறு நாள்களுக்குமேல் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டிருந்தவர்களில் 30 பேர் வரையில் உடல்நிலை பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தார்கள் என்பது சகலரையும், பெரும் கவலையில் ஆழ்த்தியிருந்தது.

உணவு தவிர்ப்பில் ஈடுபட்ட கைதிகளில் பலர் 10 அல்லது 15 ஆண்டுகளுக்கு மேல் காவலில் இருந்துள்ளார்கள். இந்தக் கைதிகளின் விடுதலை குறித்து கடந்த மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்திலிருந்தே தமிழ்த் தரப்பினர் வற்புறுத்தி வந்துள்ளார்கள். மைத்திரி ரணில் 100 நாள் ஆட்சித்திட்ட காலத்திலும் அதற்குப் பிறகும் கூட, இந்த விவகாரம் அரசிடம் தமிழ்த் தரப்பினால் ஓங்கி உரைக்கப்பட்டு பெரும்பாலும் ஒரு முடிவு ஏற்படக் கூடிய நம்பிக்கையும் கூட உருவாக்கப்பட்டிருந்தது.

தமிழ்க் கைதிகளை ஒன்றில் வழக்குத்தொடர்ந்து நீதிமன்றில் நிறுத்துங்கள். எந்தவித குற்றமும் இன்றி வெறும் சந்தேகத்தின் மீது கைது செய்து அவர்கள் தமிழர்கள் என்பதால் மட்டும் அடைத்து வைத்து, அடக்கி ஒடுக்க வேண்டாம் என்று நீதி நியாயத்தின் பேரில் அவர்களை விடுதலை செய்யுங்கள் என்று கோரப்பட்டு வந்துள்ளது.

வழக்குத் தொடராமலும் விடுதலை செய்யப்படாமலும் காவலில் வைத்திருப்பது என்பது சர்வாதிகாரம் நடைபெறும் நாடுகளில் மட்டுமே நடைபெறும் செயற்பாடு. அது சித்திரவதைக்கு ஒப்பானது மட்டுமன்றி, மனித உரிமை மீறலுமாகும். போர் நடைபெற்ற காலத்தோடு தொடர்புடைய பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் அடைத்து வைக்கப்படுவது போர்க்குற்றமாகவும் கருதப்படவேண்டியது ஒன்று.

மனித உரிமைகள் பேரவையின் அறிக்கை வெளிவந்து அதன் மீதான தீர்மானமும் இலங்கை அரசின் அனுசரணையோடு அது நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், தேசிய நல்லிணக்கத்தின் ஒரு முக்கிய முதல் படி நிலையாக இந்த அரசியல் கைதிகள் விடுதலை அமையும் என்று தமிழ்த் தரப்பில் பலரும் எதிர்பார்த்தனர். அது எட்டாக்கனியானது. அதனால் கைதிகள் விரக்தி அடைந்து தம்மை பொதுமன்னிப்பு அளித்து விடுதலை செய்யுமாறுகோரி உணவு தவிர்ப்புப் பேராட்டத்தில் இறங்கினார்கள்.

முதலில் அரச தரப்பினர் இதனை ஒரு பொருட்டாகவே கருதவில்லை. அமைச்சர்கள் சிலர் குறிப்பாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை. கொலைகள் மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களே சிறைகளில் இருக்கிறார்கள் என்றவாறு அலட்சியமாக கைவிரித்திருந்தார்.

நிலைமை மோசமானதாலும் தமிழர் பிரதேசங்கள் எங்கும் பல்வேறு அமைப்புக்களும் கைதிகளின் உறவினர்களும் முக்கிய பிரமுகர்களும் ஆர்ப்பாட்டங்களிலும் பேரணிகளிலும் இறங்கியதாலும் -- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஏனையவர்களும் நேரடியாக ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டதாலும் அரசு அசைந்து கொடுத்துள்ளது. குறிப்பாக உண்ணாவிரதிகள் ஜனாதிபதியிடம் இருந்து எழுத்து மூலம் உறுதி மொழி வேண்டுமென்று விடாப்பிடியாக இருந்தமை பயனளித்துள்ளது.

அந்த வகையில், செப்ரெம்பர் 7 ஆம் திகதிக்கு முன் தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினை தொடர்பாக ஆராய்ந்து தீர்வைத் தருவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கைதிகளுக்கு உறுதியளித்திருக்கிறார். இந்தத் தகவலை கைதிகளிடம் வெளியிட்ட த.தே. கூட்டமைப்புத் தலைவர்கள் அரசு அவ்வாறு செய்யத் தவறும் இடத்து, கைதிகள் மீண்டும் போராட்டத்தைத் தொடங்கும் பட்சத்தில், தாங்களும் அதில் கலந்து கொண்டு பக்கபலமாகச் செயற்படுவார்கள் என்று வாக்களித்துள்ளார்கள்.

நாட்டின் இராணுவத்தினரை எவ்வாறாயினும் காப்பாற்றி ஆகவேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக செயற்படும் அரசும் அமைச்சர்களும், சந்தேகத்தின் பேரில் காவலில் உள்ள தமிழ்க் கைதிகள் அனைவரையும் பொதுமன்னிப்பு அளித்து விடுதலை செய்து நீதியையும் பெருந்தன்மையையும் காட்ட வேண்டும்.

ஒரு கண்ணில் வெண்ணெயும் மறுகண்ணில் சுண்ணாம்பும் வைத்துக்கொண்டு உலகத்தை ஏமாற்றும் கொள்கையைக் கைக்கொண்ட முன்னைய ராஜபக்ச அரசைப் போன்று, மைத்திரிபாலவும் செயற்படக் கூடாது என்பதை தமிழ் மக்களின் சார்பில் நாம் உரத்த குரலில் வலியுறுத்துகின்றோம்.

# கலப்பு நீதிமன்ற யோசனையும் அதற்கான எதிர்ப்பும்

சிங்கள மூலம் லங்காதீப
**தமிழில் வீ.எஸ்.ரீ**

போரின் இறுதிக் கட்டத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ள தேசிய விசாரணைக் கட்டமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டுமென அண்மையில் நடந்து முடிந்த ஐ.நா. மனித உரிமைகள் சபை மாநாட்டில் அமெரிக்காவால் முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட பிரேரணை குறித்து சிங்கள மற்றும் தமிழ்த் தரப்புக்களின் இனவாதத் தரப்பினர் எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர்.

குறித்த விசாரணைக் கட்டமைப்பில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நீதிபதிகளும் சட்டத்தரணிகளும் உள்ளடக்கப்பட்டு அதுவோர் சர்வதேச கலப்பு நீதிமன்றமாக உருவாக்கப்பட வேண்டும் என ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர், தாம் மனித உரிமைகள் சபையில் இலங்கை விவகாரம் குறித்துச் சமர்ப்பித்த தமது அறிக்கையில் ஆலோசனை வழங்கியிருந்தார்.

ஆனால், பின்னர் ஐ.நா. மனித உரிமைகள் சபை மாநாட்டில் அமெரிக்கா சமர்ப்பித்த இலங்கை மனித உரிமை மீறல்கள் தொடர்பான பிரேரணையில் வெளிநாட்டு நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளை உள்ளடக்கிய உள்நாட்டு விசாரணைக் கட்டமைப்பொன்றே ஏற்படுத்தப்பட வேண்டுமெனவும், இலங்கையின் அரசமைப்புச் சட்டங்களுக்கு அமையவே அது நிறுவப்படவேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

தமிழர் தரப்புக்கள் குறித்த யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவித்ததுடன், முற்றுமுழுதாக வெளிநாட்டு நீதித்துறை வல்லுநர்களைக் கொண்ட நீதிமன்றமொன்றின் மூலமே விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்துகின்றன. ஆனால், சிங்கள கடும்கோட்பாட்டாளர்களோ குறித்த நீதிமன்றம் நூற்றுக்கு நூறு வீதம் உள்நாட்டு நீதிவான்களை உள்ளடக்கியதாக அமைய வேண்டுமென வலியுறுத்துகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த பல விசாரணை ஆணைக்குழுக்களை நிறுவியமை மட்டுமன்றி, அவற்றில் சிலவற்றுக்கு வெளிநாட்டு நீதித்துறைப் பிரமுகர்கள் சிலரை உறுப்பினர்களாக நியமித்துமுள்ளார். இவற்றில் 2010 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மற்றும் 2013 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட காணாமற் போனோரைக் கண்டறியும் மாக்ஸ்வல் பரணகம விசாரணை ஆணைக்குழு என்பவை மகிந்தவால் ஏற்படுத்தப்பட்டனவே. குறித்த விசாரணை ஆணைக் குழுக்களுக்கு உதவி வழங்க வெளிநாட்டு நிபுணர்கள் நியமிக்கப்பட்டதுண்டு.

உடலகம ஆணைக்குழுவுக்கு உதவவென இந்தியாவின் முன்னாள் பிரதம நீதியரசர் பி.என். பகவதியின் தலைமையில் மகிந்தவால் நியமிக்கப்பட்ட வெளிநாட்டு நிபுணர்கள் குழுவில், 2010 ஆம் ஆண்டில் இலங்கை தொடர்பாகத் தமக்கு ஆலோசனை வழங்கவென ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ – மூன் நியமித்த குழுவின் தலைவரான இந்தோனேஷியாவின் முன்னாள் சட்டமா அதிபர் மர்சூகி தருஷ்மனும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆயினும் குறித்த நிபுணர்கள் குழு உடலகம விசாரணை ஆணைக் குழுவின் விசாரணைகள் முடிவடைவதற்கு முன்னரே நாட்டின் நீதிமன்றக் கட்டமைப்புக்கு ஒவ்வாத அறிக்கையொன்றைச் சமர்ப்பித்துவிட்டு ஆணைக்குழுவின் செயற்பாடுகளிலிருந்து விலகிக் கொண்டது.

உடலகம விசாரணை ஆணைக் குழு தனது விசாரணைகளை முன்னெடுத்து வந்த வேளையில், அதற்கு உதவுவதற்காக நியமிக்கப்பட்ட வெளிநாட்டு நிபுணர்களது கடும் விமர்சனத்துக்கு உட்பட்ட பிரமுகராக விளங்கியவர் அந்த வேளைய சட்டமா அதிபரான காலஞ்சென்ற சீ. ஆர்.த. சில்வா ஆவார். ஆனால் அவரது தலைமையில் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டதொன்றாக அமைந்தது. அண்மைய அமெரிக்காவின் ஐ.நா. மனித உரிமைகள் சபை யோசனையிலும் கூட குறித்த ஆணைக் குழுவின் அறிவுறுத்தல்களை நடைமுறைப்படுத்துமாறு கோரப்பட்டிருந்தது. மகிந்தவால் நியமிக்கப்பட்ட அந்த ஆணைக்குழு சனல்–4 தொலைக்காட்சியில் இலங்கைப் படையினருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களையும் மறுத்துரைக்கவில்லை.

எழிலன், யோகி போன்ற விடுதலைப் புலிகள் அமைப்பின் உயர் மட்டத் தலைவர்கள் கைதுக்குப் பின்னர் காணாமற் போனமை குறித்த பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் கூட ஆதாரமற்றவை என அந்த ஆணைக் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்படவில்லை. அவை குறித்து நீதிமன்றம் மூலம் விசாரணை செய்யப்பட வேண்டுமென்றே அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனவே, மனித உரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுக்கள் குறித்து ஆராயும் உள்நாட்டுப் பொறிமுறையில் வெளிநாட்டு நிபுணர்கள் இடம் பெறுவதொன்றும் புதிதான ஒன்றல்ல. ஆனால் போர்க்குற்றங்கள் தொடர்பான சட்டங்கள், குற்றமிழைத்தோர் மட்டுமன்றி அவற்றுக்கு உத்தரவிட்டோரைக்கூட பொறுப்பாளிகளாக்கும் சட்டங்கள் மற்றும் சர்வதேசச் சட்டங்கள் இலங்கை நீதிக் கட்டமைப்புக்குள் உள்வாங்கப்பட்டு உள்நாட்டுப் பொறிமுறையொன்றை உருவாக்கி குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரிக்க வேண்டிய நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. ஆனால் முன்னைய அந்த வேளையில் இத்தகைய விசாரணைக் கட்டமைப்புக்களை ஏற்படுத்தவும், அவற்றில் வெளிநாட்டு நிபுணர்களை நியமிக்கவும் முன்வந்த் தரப்பினர்கள் தற்போது அத்தகையதொரு முயற்சி மேற்கொள்ளப்படும்போது அது குறித்து விமர்சிப்பது முற்றுமுழுக்க அரசியல் உள்நோக்கம் கொண்டதாகும்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த மகிந்த அரசு தவறியதன் காரணமாகவே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கையின் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணையொன்றை மேற்கொள்ள நேர்ந்தது. அதுவோர் குற்ற விசாரணையல்ல. இலங்கையில் மனித உரிமைகள் நிலை குறித்த பொது விசாரணையொன்றே. இலங்கை அரசு அதனை ஏற்க மறுத்ததால், இராணுவத்தினருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்கவும், விடுதலைப் புலிகளுக்கு எதிரான தனது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கவும் கிட்டிய வாய்ப்பு கை நழுவிப் போக நேர்ந்தது.

> **நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த மகிந்த அரசு தவறியதன் காரண மாகவே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கையின் மனித உரிமை மீறல்கள் குறித்து விசா ரணையொன்றை மேற்கொள்ள நேர்ந்தது. அதுவோர் குற்ற விசா ரணையல்ல. இலங்கையில் மனித உரிமைகள் நிலை குறித்த பொது விசாரணை யொன்றே.**

இலங்கை அரசு எதிர்த்தபோதிலும் ஐ.நா. மனித உரிமைகள் சபை ஆணையாளரது அலுவலகம் இலங்கை குறித்த தனது செயற்பாட்டைக் கைவிடவில்லை. வெளிநாட்டலுவல்கள் அமைச்சிடமிருந்தும் குறித்த சில தகவல்களைக் கோரிப் பெற்றுக் கொண்டது. குறித்த விசாரணை அறிக்கையை இலங்கை அரசு ஏற்க மறுப்பதானால் ஐ.நா. மனித உரிமைகள் சபை ஆணையாளர் அலுவலகம் கோரிய தகவல்களை இலங்கை அரசு வழங்குவதைத் தவிர்க்க வாய்ப்பிருந்தது. விடுதலைப் புலிகள் மற்றும் அரசுக்கு எதிரான தரப்பினர்கள் அந்த விசாரணையில் சாட்சியமளித்திருந்தனர். குறித்த விசாரணையை அவர்கள் தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டனர்.

அண்மையில் ஐ.நா. மனித உரிமைகள் சபை மாநாட்டில் அமெரிக்கா–இலங்கை தொடர்பான பிரேரணையை முன்வைப்பதற்கு முன்னர் ஐ.நா. மனித உரிமைகள் சபை ஆணையாளரது அந்த விசாரணை அறிக்கை வெளியிடப்பட்டிருந்ததுடன் அதன்மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிபுணர்களை உள்ளடக்கிய நீதிமன்றமொன்றை நிறுவி உண்மைச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது. மகிந்த அரசு பதவியில் இருந்திருக்குமானால் பெரும்பாலும் அது சர்வதேச நீதிமன்றம் ஒன்றுக்கான யோசனையாக அமைய இடமிருந்தது. மகிந்த தரப்பு ஐ.நா. மனித உரிமைகள் சபை ஆணையாளருடன் இணக்கமாகச் செயற்படாது என்ற கருத்து உறுதியாக நிலைபெற்றிருந்தமையே அதற்கான காரணமாகும்.

எனவே, இலங்கை அரசு அமெரிக்க அரசின் பிரேரணையைச் சாதகமான விதத்தில் பயன்படுத்திக்கொள்வதே பயனுள்ளதாக அமையும்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் யோசனைகளையும் அறிக்கையையும் அரசு நிராகரிக்குமானால், இது விடயத்தில் மனித உரிமைகள் சபையால் மேற்கொண்டு இலங் கைக்கு எதிராக எந்தவித நடவடிக்கையையும் மேற்கொள்ள இயலாது என்ற மகிந்த ஆதரவுத் தரப்பினரது வாதம் அர்த்தமற்றது. மகிந்த தரப்பினரை மின்சார நாற்காலிக்குக் கொண்டு செல்லத் தற்போதைய ஆட்சியாளர்கள் முயற்சிப்பதாகவும், இராணுவத்தினரைக் குற்றவாளிகளாக்க முயற்சிப்பதாகவும் அடிக்கடி குற்றம் சுமத்துபவர்களும் இந்த மகிந்த ஆதரவுத் தரப்பினரே. இதிலிருந்து நாட்டின் அரசியல்வாதிகள் நாட்டு மக்களது மனித உரிமைகளைத் தமது அரசியல் இலாபத்துக்குப் பயன்படுத்த முனைகின்றனர் என்பது மட்டும் மிகத் தெளிவாக, உறுதியாகப் புலப்படுகிறது. இதுவே யதார்த்த உண்மையுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதற்கு போராடும் யாழ்ப்பாணம்

ஆங்கில மூலம்: கிளாரா டிரான்
தமிழில்: ரஜீபன்



நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல், கடந்த கால அட்டூழியங்களுக்கு நீதி வழங்குதல் போன்ற நடவடிக்கைக்காண பாதையில் இலங்கையின் புதிய அரசு பயணிக்கத் தொடங்கியுள்ள அதே வேளைபோரினால்பாதிக்கப்பட்ட வடபகுதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மக்கள் தங்கள் வாழ்க்கையைமீளகட்டியெழுப்புவதற்கு கடும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.

தமிழர்கள் அதிகமாக வாழும் இந்தப்பகுதி இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான போரில் மிக உக்கிரமான மோதல்களைச் சந்தித்துள்ளது.

மே2009ஆம்ஆண்டுவிடுதலைப் புலிகளின்தோல்வியைதொடர்ந்து முடிவடைந்தஉள்நாட்டுப்போரில் ஏராளமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தின்சிலபகுதிகளில் மீள்கட்டுமானங்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள போதிலும், சுற்றியுள்ள கிராமங்களில் மக்கள் தங்கள் வாழ்வாதாரங்களை இழந்த பின்னர் வறுமையில் வாடுவதாக யாழ்ப்பாணக் குடியிருப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மீனவர்களும், விவசாயிகளுமே மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தார் ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தரான இராசாபேரின்பநாயகம்.

பெருமளவு மீனவர்கள் அனைவரும்தங்கள்மீன்பிடிஉபகரணங்களை இழந்துவிட்டனர். இதனால் அவர்களால் உரிய முறையில் மீன்பிடித்தொழிலை ஆரம்பிக்க முடியாமலுள்ளது. அவர்களுக்கு அவசியமான படகுகளைக்கூட அவர்களால் பெறமுடியாமலுள்ளது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

வடபகுதியின்மிகவும்செழிப்பான நிலத்தின் பெரும் பகுதி உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் காணப்படுகின்றது, அந்த பகுதிக்குச் செல்வதற்குவிவசாயிகளுக்குஅனுமதி மறுக்கப்பட்டுள்ளதால் அவர்கள் விவசாயம் செய்வதற்கான வாய்ப்பும்மறுக்கப்பட்டுள்ளதுஎனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போதைய அரசும் 400 ஏக்கர் நிலத்தை மக்களுக்கு மீள வழங்கியுள்ளது. ஆனால் இது போதுமானதல்ல. மக்கள் தங்கள் நிலங்களுக்கு மீண்டும் திரும்பிச் செல்வதற்காகக் காத்திருக்கின்றனர். அவர்கள் தங்கள் நிலங்களுக்குத் திரும்பிச்சென்றாலும், அவர்களின் வீடுகள் அழிந்துவிட்டன. இதனால் அவர்கள் மீண்டும் புதிதாக வாழ்க்கையைத் தொடங்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தண்ணீரும் பிரச்சினைக்குரிய விடயம். மக்கள் தண்ணீருக்காக கிணறுகளை நம்பியிருந்தனர். ஆனால் அவைகளும் சேதமடைந்துவிட்டன. இதனால் புதிய கிணறுகளைத் தோண்ட வேண்டும். அரசு அரசியல் தீர்வொன்றை முன்வைக்கும்என நாங்கள் கருதுகின்றோம். அரசியல் தீர்வு இல்லாமல் இந்தப் பகுதிகளை அபிவிருத்தி செய்ய முடியாது எனவும் பேரின்ப நாயகம் தெரிவித்தார்.

### உள்நாட்டுப் பொறிமுறை குறித்து தமிழர்கள் சந்தேகம்

இலங்கையின் புதிய ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனநல்லிணக்கத்தையும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் தலைமையின் கீழ் படையினர் இழைத்த போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறலையும் ஏற்படுத்துவதாக வாக்குறுதியளித்தே தேர்தலில் வெற்றிபெற்றார்.

கடந்த மாதம் அரசு அநீதிகள் குறித்து விசாரணை செய்து நட்டஈட்டைவழங்குவதற்காகஉண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுக்களை ஏற்படுத்தும் திட்டத்தை அறிவித்தது. எனினும் ஐக்கிய நாடுகள் இந்த யோசனையை நிராகரித்ததுடன்,விசேட கலப்பு நீதிமன்றத்துக்கு அழைப்பு விடுத்தது.

1997 இல் ஆஸ்திரேலியா வந்து சேர்ந்தஅரன் மயில்வாகனம்,உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை மூலம் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கும் என்பது குறித்து தான் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை என தெரிவித்தார்.

எந்தவித பக்கச்சார்புமின்றி சகல கோணங்களிலும் ஆராய்கின்ற சர்வதேச விசாரணையே நீதியை வழங்கும்– தமிழர்களுக்கு மாத்திரமல்ல பாதிக்கப்பட்ட அனைவருக்கும் என அவர் குறிப்பிட்டார்.

தமிழர் அகதிகள் சபையின் பேச்சாளர் நேரடியாகப் போரால் பாதிக்கப்பட்டவர். அதன் கொடுமையை அனுபவித்தவர். இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் உள்ளூர் பாடசாலையொன்றில் மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டு வீச்சில் தனது 14 வயது சகோதரனை இழந்தவர்.

நாங்கள் பாடசாலைக்குள் இருந்த வேளை இலங்கை இராணுவத்தினர் குண்டுவீசினர் என நினைவு கூர்ந்தார் மயில்வாகனம்.

அது மதிய உணவு இடைவேளைக்கு சற்றுப் பின்னர் இடம் பெற்றது, நாகர்கோவில் பாடசாலை எனது வீட்டுக்கு அருகில் காணப்பட்டது. எங்கள் வீட்டின் முன்னால் பெரிய புளியமரம் காணப்பட்டது. குண்டு வீசப்படும் சத்தத்தை கேட்டதும் நாங்கள் அனைவரும் ஓடத்தொடங்கினோம். நான் புளிய மரத்தின் கீழே ஒளிந்துகொண்டேன், சிறுவர்கள் அங்குமிங்கும் அச்சத்தால் ஓடிக்கொண்டிருந்தார்கள். நான் புளிய மரத்தின் கீழ் மறைந்திருந்த வேளை எனது அம்மா வீட்டு வாசலில் நின்றபடி எங்களது பெயர்களைச் சொல்லிக் கூப்பிட்டுக் கொண்டிருந்தார், நாங்கள் ஐந்து சகோதரர்கள். நான் வீட்டுக்குள் ஓடிப்போய் அம்மாவுடன் நின்றேன். எனது இளைய சகோரதரனும், சகோதரியும் கூட அங்கிருந்தனர், புளியமரத்துக்கு மேலே விமானப்படையினர் பல குண்டுகளை வீசிய வேளை நாங்கள் விறாந்தையில் பதுங்கியிருந்தோம். அந்த நேரத்தில் எனது இரண்டாவது சகோதரர் என்னை நோக்கி ஓடிவந்தார். அவர் வாயில் கதவை திறந்தவுடன் குண்டு வீச்சுக்கு இலக்காகி நிலத்தில் விழுந்தார். குண்டுவீச்சை மேற்கொண்ட பின்னர் விமானங்கள் திரும்பியவுடன் நாங்கள் உயிர் தப்பியவர்களைத் தேடினோம். எனது தம்பியைக் கண்டேன், அவர் தண்ணீர் தண்ணீர் என வலியால் துடித்தபடி காணப்பட்டார். அவர் எங்கள் வீட்டு வாயிலுக்குள் நுழைந்திருந்தாலும் குண்டுவீச்சில் அவரது உடலின் கீழ்பகுதி முற்றாகச் சிதைவடைந்து விட்டதை அப்போதே நாங்கள் உணர்ந்தோம், அவர் உயிருடன் இருந்தார் எங்களால் அவருடன் கதைக்க முடிந்தது. நாங்கள் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்ற வேளையிலும் அவர் உயிருடன் இருந்தார். ஆனால் அங்கு சாவடைந்தார் என கண்ணீர் மல்கியபடி தெரிவித்தார் மயில்வாகனம்.

ஆனால் எங்களது மற்றுமொரு உறவினரான ஆறு வயது வதனியை கிட்டத்தட்ட துண்டு துண்டாக சிதைவடைந்த நிலையிலேயே மீட்டோம். என்னுடைய இருஉறவினர்கள்உட்பட 21மாணவர்கள் பலர் அன்றைய குண்டு வீச்சில் கொல்லப்பட்டனர் என்றார் அவர்.

### யாழ்ப்பாணம் எதிர்கொள்ளும் சவால்கள்

யாழ்ப்பாணம் எதிர்கொள்ளும் சவால்களும்– முன்னுரிமை வழங்கப்படவேண்டிய விடயங்களும் நாட்டின் பிரிவினை வாதப் போரின் இறுதித் தருணங்களில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர் என்கிறது ஐ.நா.

மோதல்கள் காரணமாக ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் தமிழ்நாட்டுக்குத் தப்பிச் சென்றனர். தமிழ்நாட்டிலிருந்து அகதிகள் மீண்டும் திரும்புவதற்கு உதவும் ஓவ்வர்சிலோன் என்ற அமைப்பின் இயக்குநர் சூர்யா சின்னதம்பி–யாழ்ப்பாணத்தில் பொதுச் சேவைகள், வீடமைப்பு உட்கட்டமைப்பு என்பனவற்றில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மக்கள் மகிழ்ச்சியாக உள்ளனர். ஆனால்,தமிழ் மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தை முன்னேற்று வதற்கு உதவி அவசியம் என்கிறார்.

> நள்ளிரவில் அனைத்தையும் விட்டுவிட்டு வீட்டை விட்டு ஓட வேண்டிய நிலைமீண்டும் ஏற்படுவதை அவர்கள் விரும்பவில்லை. அவர்கள் தங்கள் குழந்தைகள் பாதுகாக்கப்படுவதையும், கல்வி தடையின்றி கிடைப்பதையும் விரும்புகின்றனர்.

இருதரப்பும் 30 வருடங்களாக துயரங்களை அனுபவித்து விட்டனர். தற்போது அவர்களுக்கு தமது சொந்தக்காலில் நிற்பதற்கான ஆதரவு அவசியம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்திரமான அரசு கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்படுதல், வாக்குறுதிகள் காப்பாற்றப்படுதல், காணிகள் விடுவிக்கப்படுதல், அவர்கள் சந்தித்த இழப்புகளுக்கான தீர்வுகள் ஆகியனவே மக்களின் முன்னுரிமைகள் என்கிறார் அவர்.

நள்ளிரவில் அனைத்தையும் விட்டுவிட்டு வீட்டைவிட்டு ஓட வேண்டிய நிலைமீண்டும் ஏற்படுவதை அவர்கள் விரும்பவில்லை. அவர்கள் தங்கள் குழந்தைகள் பாதுகாக்கப்படுவதையும், கல்வி தடையின்றி கிடைப்பதையும் விரும்புகின்றனர் எனவும் சின்னத்தம்பி குறிப்பிட்டார். சாதாரண மக்களைப் பொறுத்தவரை அவர்கள் நிரந்தர சமாதானத்தையேவிரும்புகின்றனர் – என்றார்.

இலங்கை நிலைமாற்று நீதிக்கான உறுதி மொழிகளை வழங்கியுள்ளமை நம்பிக்கையை உருவாக்கியுள்ளதாகக் குறிப்பிடுகின்றார். மாற்றுக்கொள்கை நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து.

கடந்த எட்டு மாதங்களில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் காரணமாக யாழ்ப்பாணத்தில் நிம்மதியான சூழல் நிலவுகின்றது என்றார் அவர்.

மக்கள் மீண்டும் வருவதற்கு ஏற்ற பாதுகாப்பான சூழல் காணப்படுகின்றது. முழு நாட்டையும் பொறுத்தவரை நிலைமை மாறி விட்டது. மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும் என்ற உணர்வு காணப்படுகின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாநகர வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம்,ஒக்.19

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி (ஏ.ஆர்.வி) வழங்கப்படவுள்ளதாக யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி பி.ஜெசிதரன் அறிவித்துள்ளார்.

அதற்கமைவாக இன்று திங்கட்கிழமை அத்தியடிப் பிள்ளையார் கோயிலடியில் காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரையும், ஸ்ரான்லி வீதி பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முன்பாக முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரையும், பருத்தித்துறை வீதி குருநாதர் சுவாமி கோயிலடியில் பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரையும் வழங்கப்படும்.

நாளை செவ்வாய்க்கிழமை நாவலர் மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரையும், ராசாவின் தோட்டவீதி ஸ்ரான்லி வீதி சந்தியில் முற்பகல் 11.30 தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரையும், கோயில் வீதி றக்கா வீதி சந்தியில் பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரையும் வழங்கப்படும்.

நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை மருதடிலேன் வைரவர் கோயிலடியிலும், முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை நல்லூர் தெற்கு சனசமூக நிலையம் கற்பகப் பிள்ளையார் கோயிலடியிலும், பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை றக்கா வீதி இளஞ்சிங்கம் சனசமூக நிலையத் திலும் வழங்கப்படும்.

எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை கோயில் வீதி வைத்திய சாலை வீதி சந்தியில் காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரையும், குழந்தை இயேசு ஆலயத்துக்கு முன்பாக கோயில் வீதியில் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரையும், மடம் வீதி திருவள்ளுவர் சனசமூக நிலையத்தில் பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரையும் வழங்கப்படும். எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை அருள் மாதா கோயிலடி ராசாவின் தோட்டத்திலும், முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை மாட்டின் வீதி சப்பல் வீதி சந்தியிலும், பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை 2 ஆம் குறுக்குத் தெரு வேம்படி வீதி யாழ்ப்பாணத்திலும் வழங்கப்படும். எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை ஓ.எல். ஆர். தேவாலயம் 4 ஆம் குறுக்குத்தெருவில் காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரையும், யாழ். புகையிரத நிலைய வீதி வைரவர் கோயில டியில் முற் பகல் 11.30 தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரையும், 2 ஆம் ஒழுங்கை பருத்தித் துறை வீதி யாழ்ப்பாணத்தில் பிற்பகல் 1.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை வழங்கப்படும் எனவும் அறிவித்துள்ளார். (ஐ–ரி6)


**சாரதி, சட்டறிங் வேலையாள்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் கட்டட நிர்மாண நிறுவனத்திற்கு பட்டா ரக வாகனம் ஓடத் தெரிந்த சாரதி, சட்டறிங் வேலை தெரிந்த வேலையாள்கள் தேவை.

(64682)(11,15,16) தொடர்பு: 077 416 4007



**பதவி வெற்றிடம்**

இணுவிலில் இயங்கி வரும் அச்சகம் ஒன்றின் கணினிப்பகுதிக்கு(Photo shop, corel Draw,In design) தெரிந்த அனுபவம் உள்ள பெண் பிள்ளைகள் தேவை. தகைமையுடையோர் 20.10.2015 அன்று தங்கள் சுயவிவர கோவையுடன் நேரில் சமுகம் தரவும்.

தொடர்பு : 077 447 7920

K.K.S Road ,Inuvil

(64349)(12,015)



**கண்ணீர் அஞ்சலி**

எமது கிளையின் இளைப்பாறிச் செல்லும் முகாமையாளர் திருமதி. பா. இரஞ்சனாதேவி அவர்களின் அன்புக்கணவர்

**வைத்திலிங்கம் பாலேந்திரன்**

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு மிகுந்த துயரடைவதுடன் அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



**முகாமையாளரும் உதவியாளர்களும்**
**தேசிய சேமிப்பு வங்கி**
**சுன்னாகம்**

NSB National Savings Bank

(64108)(12/815)


# வீடுகள் கையளிப்பும் திறப்பு விழாவும்

வரணி,ஒக்.19

வரணி கரம்பைக்குறிச்சி கிராமத்தில் இந்திய அரசின் நிதி உதவிப் பங்களிப்புடன் அமைக்கப்பட்ட வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கும் வைபவமும் திறப்பு விழாவும் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கரம்பைக்குறிச்சி மேற்கு பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கரம்பைக்குறிச்சி மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் இ.சுதாகர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக இந்தியத் தூதரக உயர் அதிகாரிகள், சர்வதேச மற்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க உயர் அதிகாரிகள், சாவகச்சேரி பிரதேச செயலர், உதவிப் பிரதேசசெயலர், திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் மற்றும் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர். இந்தக் கிராமத்தில் இந்திய அரசின் உதவி யுடன் 113 வீடுகள் கட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ–122)


**தொடர்பு கொள்ளவும்**

கே.கே.எஸ்.வீதி தெல்லிப்பழையில் வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு ஏற்ற வகையில் கட்ட்டம் புதிதாக கட்டி வாடகைக்கு விடப்படும்.

077 058 7625, 077 772 9525

(64071)(11,15,16)



**விஜயதசமியை முன்னிட்டு**

ஏடும் சகலகலாவல்லி மாலைப் புத்தகமும் அண்ணா தொழிலகத்தில் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு - அண்ணா தொழிலகம் இணுவில்.


## வாரியப்பர் ஆலயத்தில் பெருந் திருவிழா

சாவகச்சேரி,ஒக்.19

சாவகச்சேரி வாரியப்பர் ஆலயத்தில் உள்ள அம்பாள் ஆலய பெருந் திருவிழா எதிர்வரும் 22 ஆம் திகதி கொடியேற்றத்தடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழாக்கள் இடம் பெறவுள்ளன.


**கிளி/ பளை மத்திய கல்லூரி பழைய மாணவர்கள் சங்க பொதுக் கூட்ட அழைப்பு**

**காலம் :-** 23.10.2015 வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணி
**இடம்:-** கல்லூரி மண்டபம்
**தலைமை:-** அதிபர் -கிளி/ பளை மத்திய கல்லூரி

மேற்படி கூட்டத்திற்கு பழைய மாணவ மாணவிகள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

(c/15955)(12,15,16) **செயலாளர்**



**திருநெல்வேலி சிமாட்கிட்ஸ்**
**ஆடிய பாதம் வீதி, திருநெல்வேலி**

வித்தியாரம்பம் விஜயதசமியன்று 22.10.2015
வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணி

அ.பஞ்சலிங்கம் (முன்னாள் அதிபர்– யாழ் இந்துக்கல்லூரி. தலைவர்)

ப.பாலமுகுந்தன் (ஆங்கில ஆசிரியர். நிறைவேற்று இயக்குனர்)

T.P No:021 205 2262



**மகப்பேறு இனவிருத்தி நிலையம்**

மகளிருக்கு குழந்தைப் பருவம் தொடக்கம் முதுமை வரையிலான பிரச்சினைகளையும் அடிக்கடி ஏற்படும் அடி வயிற்று நோ கருச்சிதைவு மாதவிடாய் உட்பட சகல விதமான பிரச்சினைகளுக்கு சிகிச்சையளித்தலும் மகப்பேறு இனவிருத்திக்கான சிகிச்சைகளும் IVF, ICSI யும் கொடை முட்டை (donaor egg) விந்து நன்கொடை (donor sperm) போன்ற சிகிச்சைகளை ஐக்கிய இராட்சியத்தில் (UK) 40 வருட அனுபவம் கொண்ட வைத்திய நிபுணர் சதானந்தம் அவர்கள் திருநெல்வேலி நொதேன் சென்றல் வைத்தியசாலையில் அளித்து வருகின்றார். சென்ற மாதம் இவரின் சிகிச்சை மூலம் இரு தாய்மாருக்கு சோதனைக் குழாய் மூலம் குழந்தைகள் பிறந்தது யாவரும் அறிந்ததே.

தொடர்புகளுக்கு : திருமதி கௌரி
இல. 0773439988

021 221 9988, 021 221 9977, 021 222 2263

(சி/15956)(11,15,16,17)


## துணுக்காய் பிரதேசசபை
## மல்லாவி சந்தைக் கடைத் தொகுதி வாடகை அடிப்படையில் வழங்குவதற்கான மீள்கேள்விகள் கோரல்

புறநெகும திட்டத்தில் மல்லாவிச் சந்தை வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட 22 கடைகளில் 19 கடைகள் மீள் கேள்வி கோரல் அடிப்படையில் வழங்குவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புறநெகும திட்டநிதி மூலம் மல்லாவிச் சந்தை வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கீழ் குறிப்பிடப்படும் விபரப்படியான கடைகள் கீழ் குறிப்பிடப்படும் விபரப்படியான கட்டணங்களைச் செலுத்தி மாதாந்த வாடகை அடிப்படையில் நடாத்துவதற்கு முல்லைத்தீவு மாவட்ட எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் வசிக்கும் இலங்கைப்பிரஜைகளிடமிருந்து மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

01. மீள் கேள்விகள் யாவும் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு அரக்கு முத்திரையிடப்பட்டு மூலப்பிரதியை "செயலாளர் பிரதேசசபை துணுக்காய்" எனும் முகவரிக்கும் இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் முல்லைத்தீவு" என்னும் முகவரிக்கும் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ 06.11.2015ம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். அதற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

02. ஒப்பந்தம் மேற்கொண்டவராலேயே மேற்படி வியாபார நிலையம் தொடர்ச்சியாக நடத்தப்பட வேண்டும்.

03. வதிவிட மாவட்டத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் கிராம சேவையாளரின் உறுதிப்படுத்தல் கடிதத்துடனும் தேசிய அடையாள அட்டையையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை ஒரு வாரகாலத்தில் செலுத்தி பற்றுச் சீட்டினைப் பெற்றுக் கொள்வதுடன் செயலாளருடன் ஓர் ஒப்பந்தமும் செய்யவேண்டும். தவறும் பட்சத்தில் தாமாகவே இதிலிருந்து விலகியதாக கருதி அடுத்த கேள்விதாரருக்கு குறித்த நிலையம் வழங்கப்படும்.

05. வதிவிட மாவட்டத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் கிராம சேவையாளரின் உறுதிப்படுத்தல் கடிதத்துடனும் தேசியஅடையாள அட்டையையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

06. உள்ளூராட்சி சுற்றறிக்கை 46/80 இற்கு அமைவாக ஏற்கனவே கடை நடத்தியவர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் நோக்கில் இக் கேள்வி கோரலில் பங்கு பெற்ற போதும் அதில் கூடுதல் தொகை கோரியவரின் தொகைக்கு ஏற்கனவே கடை நடத்தியவர் எடுக்க சம்மதம் தெரிவிப்பின் அவருக்கே அக்கடை வழங்கப்படும்.

07. கேள்விகள் ஏற்கவோ அன்றி நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரணஅதிகாரமுண்டு.

கேள்விப் படிவம் வழங்கப்படும் காலம் :- 19.10.2015- 06.11.2015 ( அலுவலக நேரத்தில் )
கேள்விப் படிவம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி :- 06.11.2015 பி.ப 2.00 மணிவரை
கேள்வி திறக்கப்படும் திகதி நேரம் :- 16.11.2015 பி.ப 2.30 மணி

| கடை இல | ஆகக்குறைந்த கேள்வித் தொகை ரூபா ( வரி நீங்கலாக ) | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் ரூபா (வரி நீங்கலாக ) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் ரூபா | மாத வாடகை ரூபா |
|---|---|---|---|---|
| GF 01 | 450,000.00 | 500.00 | 5,000.00 | 3750.00 |
| GF 02 | 450,000.00 | 500.00 | 5,000.00 | 3750.00 |
| GF 03 | 450,000.00 | 500.00 | 5,000.00 | 3750.00 |
| GF 06 | 420,000.00 | 500.00 | 5,000.00 | 3500.00 |
| GF 07 | 420,000.00 | 500.00 | 5,000.00 | 3500.00 |
| GF 08 | 420,000.00 | 500.00 | 5,000.00 | 3500.00 |
| GF 09 | 420,000.00 | 500.00 | 5,000.00 | 3500.00 |
| GF 10 | 420,000.00 | 500.00 | 5,000.00 | 3500.00 |
| FF 01 | 330,000.00 | 500.00 | 5,000.00 | 2,750.00 |
| FF 02 | 330,000.00 | 500.00 | 5,000.00 | 2,750.00 |
| FF 04 | 330,000.00 | 500.00 | 5,000.00 | 2,750.00 |
| FF 05 | 330,000.00 | 500.00 | 5,000.00 | 2,750.00 |
| FF06 | 330,000.00 | 500.00 | 5,000.00 | 2,750.00 |
| FF 07 | 330,000.00 | 500.00 | 5,000.00 | 2,750.00 |
| FF 08 | 330,000.00 | 500.00 | 5,000.00 | 2,750.00 |
| FF 09 | 330,000.00 | 500.00 | 5,000.00 | 2,750.00 |
| FF 10 | 330,000.00 | 500.00 | 5,000.00 | 2,750.00 |
| FF 11 | 240,000.00 | 500.00 | 5,000.00 | 2,000.00 |
| [illegible] | [illegible] | 500.00 | 5,000.00 | 2,750.00 |

செயலாளர்,
பிரதேச சபை, துணுக்காய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாணி விழா

யாழ்ப்பாணம், ஒக்.19
கோண்டாவில் கிழக்கு சிவபூமி பாட சாலையின் வாணி விழா இன்று திங்கட் கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாட சாலை மண்டபத்தில் சிவபூமி அறக் கட்டளைத் தலைவர் கலா நிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடை பெற வுள்ளது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத்தின் கணித புள்ளி விபரவியல்துறைத் தலைவர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக ஆவ ரங்கால் சிவசக்தி மண்டபத்தின் முதல்வர் வே. சிவ சுந்தரமும் கலந்து கொள்ளவுள்ள னர். நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ் வுகளும் நடைபெறும் என சிவபூமி அறக் கட்டளை சமூகத்தினர் தெரிவித் துள்ளனர்.

* * *

மாவை ப்ருந்த கானலய அநெறி மற் றும் இசை மன்றமும் இணைந்து நடத் தும் வாணி விழா நிகழ்வு இன்று திங் கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மாவிட் டிரம் ப்ருந்தகானலய அறநெறிப் பாட சாலையில் நடைபெற வுள்ளது.
அகில இலங்கை சமாதான நீதிவானும் அற நெறிப் பொறுப்பாசிரியருமான திருமதி கோ. விஜயராகவன் தலை மையில் நடை பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர் களாக யாழ். மாவட்ட செயலகத்தின் இந்து கலாசார உத்தியோகத்தர்களான திருமதி ரி.பிர தீஸ்வரனும், எஸ். உதயபாலனும், வலி.வடக்கு பிரதேச செயலகத்தின் இந்து கலாசார அபிவிருத்தி உத்தி யோ கத்தரான திருமதி க.சகிபரனும் கலந்து கொள்ள வுள்ளனர். (ஐ–ரி6)

## அதிபர்களுக்கான கூட்டம்

துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட அதிபர்களுக்கான கூட்டம் இன்று திங் கட்கிழமை காலை 9 மணிக்கு துணுக் காய் கல்வி வலயத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. அனைத்து அதிபர்களையும் உரிய நேரத்துக்குச் சமூகம் தருமாறு துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார். (ஐ–422)

## கண்ணீர் அஞ்சலி

### வைத்தியலிங்கம் பாலேந்திரா



எமது அன்புக்கும் பெருமதிப்புக்கும் உரித்தான ஆசான் அமரர் சுந்தரலிங்கத்தின் அன்புத் தம்பியும், உரும்பிராய் இந்துக்கல்லூரியின் பழையமாணவர் சங்க உப தலைவரும், உரும்பிராய் இந்துக்கல்லூரியின் வளர்ச்சிக்கு அயராது உழைத்து வந்தவருமான வைத்தியலிங்கம் பாலேந்திரா அவர்களது மறைவு எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்துகின்றது.
அன்னாரை இழந்து துயருறும் குடும்பத்தவர்கள், நண்பர்கள், உறவினர்களுடன் துயர் பகிர்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உரும்பிராய் இந்துக்கல்லூரி,
பழையமாணவர் சங்கம்.
உரும்பிராய்.

## நெஞ்சகலா நினைவலைகள்

முதலாம் வருடம் — 12ஆம் வருடம்



பிறப்பு 01.01.1950 — இறப்பு 30.10.2014
அமரர் சீரானபிள்ளை வேலாயுதம் (தேசிங்கம்)



பிறப்பு 12.08.1955 — இறப்பு 05.08.2003
அமரர் வேலாயுதம் தவமணி

அன்பாலும் பண்பாலும் எம் எல்லோரையும் அரவணைத்த எம் அன்புத் தெய்வங்களே!!
மீளாத்துயில் கொண்டு ஆண்டுகள் பல கடந்தாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எம்முடன் வாழும்

ராணி மில் ஒழுங்கை,
நெல்லியடி.
பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.
(18.10.15)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் சதுஷா சுந்தரலிங்கம்



அன்னை மடியில் 02.09.2002 — ஆண்டவன் அடியில் 19.10.2013

ஈராண்டுகள் ஆனதுவோ
உங்கள் முகங்கண்டு
ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த
பொக்கிசம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம்
உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

சி.கந்தையா - பேரன், க.வாமதேவி - பேர்த்தி,
உதயகுமார் - குட்டி மாமா, மாமன்மார், அன்ரிமார்.
மட்டுவில் வடக்கு, சந்திரபுரம், சாவகச்சேரி.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 15 - 10 - 1934



மறைவு 19 - 09 - 2015


### அமரர் சின்னத்துரை இராசரட்ணம்

19.09.2015 சனிக்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் சின்னத்துரை இராசரட்ணம் (ஓவசியர்) அவர்களின் வீட்டுக் கிரியைகள் இன்று (19.10.2015) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன் னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கலைவாணி வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். (64050)(11,15,16)
குடும்பத்தினர்.

# கண்ணீர்ப் பூக்கள்



## இராசையா புஸ்பராஜா

முன்னாள் கமத் தொழில் பெரும்பாக உத்தியோகத்தர், முன்னாள் விசேட ஆணையாளர்,
வீரமா பிடாரி அம்பாள் ஆலய ஆயுட்கால தர்மகர்த்தா சபைத் தலைவர்)

மண்ணில் 24.03.1927 — விண்ணில் 14.10.2015

இந்த மண்ணிலே அவதரித்து தனக்கென வாழா பிறர்க்கென வாழ்ந்த செம்மல்களுள் ஒருவரான அமரர் இராசையா புஸ்பராஜா அவர்கள் வீரமா பிடாரி அம்பாளின் பாதங்களில் சரணடைந்த செய்திஎம்மூர் முழு வதையும் கடந்த சில நாள்களாக துக்கம் தோய்ந்த நிலையில் வைத்துள் ளது. எம்மூரில் பிறந்து எமக்காகவே வாழ்ந்து ஆயிரம் பிறை கண்ட அம்பாள் பக்தரான புஸ்பராஜா அவர்கள் பிடாரி அம்பாள் ஆலயத்தின் அறங்காவலர் சபையின் தலைவராக மிக நீண்ட காலம் இருந்தார். ஆலயத் திருப்பணிகள் நிறைவேறவும் ஆலயம் பொலிவு பெறவும் தனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்தவர்.

ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காணும் எமது மதத்தின் உன்னத பொருளுக்கு உதாரணமாகத் திகழ்ந்து சமூகத் தொண்டாற்றிய பெருந்தகை. வாரி வழங்கிய வள்ளல் வையத்தில் வாழ்வாங்கு வாழ வேண்டிய வழியை தன்னூர் மக்களுக்கு வகுத்துக்காட்டி அதன்படி நடந்து சென்று இறைவன்ன அடைந்த அமரர் இராசையா புஸ்பராஜா அவர்களுக்கு எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகிறோம்.

வண்.வடமேற்கு ஆனைக்கோட்டை
ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாள் ஆலய தர்மகர்த்தா சபையும் இந்து இளைஞர் மன்றமும்.
(c/15958)(11,15,16,17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்டை நாய்



வேட்டைக்காரன் ஒருவன் இரண்டு நாய்கள் வைத்திருந்தான். அவற்றில் ஒரு நாய் அவனுடன் வேட்டைக்குச் சென்றுவரும். மற்றொரு நாய் அவனது வீட்டைக் காவல் காத்துக் கொண்டிருக்கும். ஒரு நாயின் கடமை வேட்டையாடுதல், இன்னொரு நாயின் கடமை வீட்டைக் காவல் காத்தல்.

வேட்டைக்காரன் வேட்டைக்குச் சென்று திரும்பியதும், வேட்டையில் கிடைத்தவற்றில் வீட்டு நாய்க்கே அதிகமாகக் கொடுப்பது வழக்கம். வேட்டை நாய் நீண்ட நாள்வரை அதைப் பொருட்படுத்தாமல் இருந்தது. ஒருநாள் வேட்டையாடிவிட்டுத் திரும்பி வந்ததும், வேட்டைக்காரன் வழக்கம்போல் செய்தான். அதைக் கண்ட வேட்டை நாய்க்கு அப்போதுதான் வருத்தம் ஏற்பட்டது. வருத்தம் கொண்ட வேட்டைநாய், வீட்டு நாயைப் பார்த்து, வேட்டையாடுவது எவ்வளவு கடினமான வேலை தெரியுமா? நீ அந்தத் துன்பத்தில் பங்கு கொள்ளவில்லை. ஆனால், நான் வேட்டையில் சம்பாதித்தவற்றில் மட்டும் பெரும் பகுதியைப் பங்காகப் பெற்றுக் கொள்கிறாய். இது முறையா? இது நியாயமா? உனக்கே இது நல்லதாகத் தெரிகிறதா? என்று வருத்தத்துடன் கேட்டது. அதைக் கேட்ட வீட்டு நாய் மெல்லச் சிரித்துக் கொண்டே, நண்பனே! அது என்னுடைய குற்றம் இல்லை. நீ என்மீது வருத்தப்படுவதில் பயனில்லை. இந்தக் குற்றம் நமது எஜமானனுடையது. அவர் எனக்கு வேட்டையாடச் சொல்லித்தரவில்லை. வேட்டை யாடுவதில் என்னைப் பழக்கவில்லை. மற்றவர் சம்பாதித்த பொருளில் பங்கு பெறத்தான் சொல்லிக் கொடுத்துப் பழக்கியிருக்கிறார்-என்று பதில் கூறியது. அதைக் கேட்டதும், வேட்டை நாயினால் அதற்கு மேல் ஒன்றும் பேச முடியவில்லை. இந்த அநியாயக்கார உலகத்தில் நியாயத்தை எதிர்பார்ப்பது தவறு என்பதை உணர்ந்து மௌனமாக இருந்தது.



## அம்மன் கோயில் தேர்

அம்மன் கோயில் தேரிது
அசைந்து அசைந்து
வருகுது
அருணன் மறைந்து
போனது
அம்புலி வந்து சேர்ந்தது
பட்டுத்துணியால்
அலங்காரம்
பார்க்கப் பார்க்கப் பரவசம்
சொட்டும் அழகுத்
தோரணம்
சொக்க வைக்கும்
அலங்காரம்
ஒன்றுகூடி வடம்
பிடிக்கலாம்
உள்ளம் மகிழ்ந்து
திளைக்கலாம்
ஒற்றுமையாய் தேர்
இழுக்கலாம்
வேற்றுமையை வேர்
அறுக்கலாம்

## வர்ணம் தீட்டலாம் வாங்க





# ஜேர்மனி








ஜேர்மனி ஐரோப்பாவில் உள்ள ஒரு நாடு. இதன் வடக்கே வட கடல், டென்மார்க், பால்ட்டிக்கடல்; கிழக்கே போலந்து, செக் குடியரசு தெற்கே ஆஸ்திரியா, சுவிற்ஸர்லாந்து மேற்கே பிரான்ஸ், லக்சம்பேர்க், பெல்ஜியம், நெதர்லாந்து ஆகியன எல்லைகளாக உள்ளன. இந்த நாடு ஐரோப்பிய ஒன்றியத்தில் அதிகூடிய மக்கள்தொகையைக் கொண்ட உறுப்பு நாடாகவும், மூன்றாவது அதிகம் புலம் பெயர்ந்த மக்களைக் கொண்டதாகவும் திகழ்கிறது.

ஜேர்மனி கிழக்கு ஜேர்மனி மற்றும் மேற்கு ஜேர்மனி என இரண்டு பகுதிகளாக 1949 ஆம் ஆண்டு முதல் 1990 வரை இருந்தது. கிழக்கு–ஜேர்மனிக்கு கிழக்கு–பெர்லின் தலைநகரமாகவும் மேற்கு–ஜேர்மனிக்கு பான் தலைநகரமாகவும் இருந்தன. மேற்கு பெர்லினை ஜேர்மனியில் இருந்து பிரிக்க 1961 இல் பெர்லின் சுவர் கட்டப்பட்டது. 1989 இல் சுவர் உடைக்கப்பட்டு ஒருங்கி ணைக்கப்பட்ட ஜேர்மனிக்கு பெர்லின் தலைநகரம் ஆனது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்த நாட்டு கடற்படையின் கலங்களும் இலங்கை வரலாம்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.19
சீனா உட்பட உலகின் எந்த நாடுகளின்கடற்படைக்கலங்களும்இலங்கைக்குவிஜயம்மேற்கொள்ளலாம் என பிரதமர் ரணில்விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூரின் ஸ்டிரெயிட் டைம்ஸிற்கு அளித்த பேட்டியின்போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவைசீற்றத்திற்குள்ளாக்கிய சீனா நீர்மூழ்கிகளின் விஜயம் குறித்து கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:-

இலங்கைக்கு உலகநாடுகளின் கடற்படைக் கலங்கள் வருவதற்கான அளவுகோலொன்றை நாங்கள் வகுத்துள்ளோம். அதனடிப்படை யில் நீர்மூழ்கிகள் உட்பட அனைத்து கடற்படைக் கலங்களும் இலங்கைக்கு வரலாம். எங்களை பொறுத்த வரை அது சினேகபூர்வமான விஜயமாக காணப்பட்டால் நாங்கள் அயல் நாட்டிற்கு அது குறித்து அறிவிப்போம். குறிப்பிட்ட கப்பல்கள் இலங்கைக்கு தொடர்ச்சியாக அடிக்கடி வராத வகையில் நாங்கள் அட்டவணைகளை வகுப்போம்.

சீனாவின் நீர்மூழ்கிகள் உட்பட கடற்படைகலங்கள் இறுதியாக இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட வேளை அது குறித்து தனக்கு தெரிவிக்கப்படவில்லை என இந்தியா தெரிவிக்கின்றது. இதுவே பிரச்சினைக்குரிய விடயம். நாங்கள் இது குறித்து ஆராய்ந்து பார்த்ததில் இது உண்மை என்றே தெரிய வந்துள்ளது.

சீனா தனது நீர்மூழ்கிகள் விஜயத்தை முன்கூட்டியே இலங்கைக்கு தெரிவித்துள்ளது. அவர்களது நீர்மூழ்கிகள் கொழும்பு துறைமுகத்திற்கு வந்துதரித்து நின்று விட்டு சென்றுவிட்டன.

ஜப்பான் பிரதமர் இலங்கைக்கு விஜயம்மேற்கொண்ட வேளை இது இடம்பெற்றுள்ளது. தற்போது நாங்கள் எங்கள் அளவுகோல்களின் அடிப்படையில் செயற்படுவோம். நீங்கள் உங்கள் நீர்மூழ்கிகளையும் போர்க் கப்பல்களையும் இலங்கைக்கு அனுப்பவேண்டும். சிங்கப்பூரிடம் சிறந்த போர்க்கப்பல்கள் உள்ளது என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (வ)

# பிரகீத்தை கொலை செய்யுமாறு உத்தரவிட்டவர் விரைவில் கைது செய்யப்படுவார் என கொழும்பு ஊடகம் தகவல்

கொழும்பு, ஒக்.19
லங்கா ஈ நியூஸ் ஊடகவியலாளர் பிரகீத்எக்னெலிகொடவைகொலைசெய்யுமாறு உத்தரவிட்ட முன்னைய அரசின் பலம்பொருந்திய முக்கியஸ்தர் ஒருவர் விரைவில் கைது செய்யப்பட உள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பில்அந்தசெய்தியில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எக்னெலிகொட தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நடத்தி வரும் விசாரணைகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. இந்தக் கொலை தொடர்பில் இராணுத்தின் மேலும் சில உயர் அதிகாரிகள் கைது செய்யப்பட உள்ளனர்.

ஏற்கனவே இரண்டு இராணுவ கேணல்கள் உள்ளிட்ட 11 உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். கடந்த அரசில் மிகவும் விசேடமான அதிகாரங்களைக் கொண்ட அதி முக்கியஸ்தர் ஒருவரே, எக்நெலிகொடவை கொலை செய்யுமாறு உத்தரவிட்டதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் அதி உயர் பதவியொன்றை வகித்த சிவில் அதிகாரியொருவரே இவ்வாறு உத்தரவிட்டுள்ளதாக அந்த அந்த தகவலில் மறைமுகமாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, எக்னெலிகொட கொலை தொடர்பிலான விசாரணைகளை கிடப்பில் போடுவதற்கு பல்வேறு தரப்புக்கள் அழுத்தங்களை பிரயோகித்து வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

ஜனஜய
R 08 24 44 59
ரு.8,051,980/-

2015-10-18 1891
07 15 43 45
2,715,820/-

SAAMSON SPOKEN ENGLISH
24.10.2015
1. 08.00-10.00 3. 01.00-03.00
2. 10.00-12.00 4. 03.00-05.00
SAAMSON 279, யாழ்நகர். 021 320 3313 077 621 4567

# மகிந்தவை பரப்புரைக்கு களமிறக்க மைத்திரியிடம் கோரிக்கை விடுப்பு

கொழும்பு, ஒக்.19
மார்ச்சில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சிசபைத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குரிய பரப்புரைகளை முன்னெடுக்கும் குழுவில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு முக்கிய இடம் வழங்கப்பட வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனினும்,இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி இன்னும் எவ்வித அறிவிப்பையும் வெளியிடவில்லை.

பொதுத் தேர்தலின் போது மகிந்த ராஜபக்சவின் வெற்றிக்காக கடுமையாக உழைத்தவரான பிரசன்ன ரணதுங்க கடந்த வாரத்துக்கு முன்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இதன்போது, உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் தொடர்பில் பிரசன்ன ரணதுங்கவிடம் ஜனாதிபதி கேட்டுள்ளார்.

இதற்குப் பதிலளித்த அவர், சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் .அதிருப்தி நிலையில் இருக்கின்றனர். கிராம மட்டத்திலான ஆதரவாளர்கள் எமக்கு வாக்களிப்பார்களா என்பது சந்தேகமே. ஆகவே, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவையும் இணைத்துக்கொண்டு பயணித்தால் எதையாவது அடையமுடியும் – என்றார்.

இதற்கு சரி. பிரசன்ன. பார்ப்போம் என சிரித்தபடியே ஜனாதிபதி பதிலளித்துள்ளார் என அறியமுடிகிறது. (வ-சி)


பாராட்டி வாழ்த்துகின்றோம்
செல்வன் சிவபாலன் ஆகீசன்

யாழ் Anniversary 6 வது பூர்த்தியை முன்னிட்டு 17th 18th 19th
ஆகிய திகதிகளில் பதிவுசெய்து 25% கட்டண கழிவுடன்
பரிசில்களையும் வெல்லுங்கள்
ONLY 17th 18th 19th
PEARSON (UK) ESOFT
assured by PEARSON
DITEC INTERNATIONAL Diploma in Information Technology
DIE Diploma in English
ESOFT + Pearson (UK)
HND
Computing & Systems Development
Business Management
FREE Samsung GALAXY Tab4
Awarded By PEARSON edexcel
ESOFT + Pearson (UK)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக அனுமதியை 1950 மாணவர்கள் பெறுவர்

## தொழில்நுட்பவியல் கற்கைக்கு

கொழும்பு, ஒக்.19

முதல்தடவையாக,தொழில்நுட்பப் பாடத்தில் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியுள்ள மாணவர்களில் 1,950 பேரை பல்கலைக்கழகங்களுக்குச்சேர்த்துக்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக பல்கலைக்கழகக் கல்வி இராஜாங்க அமைச்சர் மொஹான் லால் கிரேரோ சிங்களப் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

மேலும், 2015 ஆம் ஆண்டில் உயர்தரப் பரீட்சை தொடர்பாக, முதல் தடவையாக தொழில்நுட்பப்பாடத்துக்கு 1,200 பேர் வரையிலானோர் தோற்றியிருந்தனர். தொழில்நுட்பப் பாடத்தில் பல்கலைக் கழகங்களுக்கு தெரிவு செய்யப்படவுள்ள இந்த 1,950 பேரும் 2016 ஆம் ஆண்டின் செப்ரெம்பர் மாதம் அளவில் பல்கலைக்கழகங்களுக்குச் சேர்த்துக்கொள்ளப்படவுள் ளனர்.

தொழில்நுட்பப் பாடத்தில் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதிகளைப்பெறாத மாணவ, மாணவியர் செயன்முறைப் பாடநெறியைச் சிறப்பாகப் பின்பற்றி தொழில்நுட்பப் பாடத்தில் சித்தியடைந்திருப்பார்களேயானால் அவர்கள் அனைவருக்கும் தேசிய தொழிற்றகைமைகள் 3 ஆவது மட்டம் சான்றிதழில் வழங்கப்படும்.

அதன் பின்னர் அவர்களுக்கு 4 ஆவது மட்டத்தில் சித்தியடைந்து, பல்கலைக்கழக விஞ்ஞான நிறுவனங்களுக்கு அனுமதியைப் பெறமுடியும்.

அதன் பின்னர் அவர்களுக்கு தொழில்நுட்பவியல் மாணிப் பட்டம்வரையில் கற்பதற்குவாய்ப்பாக அமையும்.

தொழில்நுட்பப் பாடத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழகங்களுக்குச் செல்லவுள்ள முதலாவது குழுவுக்கு 1,950 மாணவர்கள் தொடர்பாக அவசியப்படும் அனைத்துவித வசதிகள் குறித்து, ஏற்கனவே பல்கலைக்கழகங்களிடமிருந்து யோசனைகள் பெறப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் தொழில்நுட்பப் பாடத்தில் பல்கலைக்கழகங்களுக்குச் சேர்த்துக் கொள்ளப்படவிருக்கும் மாணவர்களின் தொகையை அதிகரிப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டிருப்பதா கவும் பல்கலைக்கழகக் கல்வி இராஜாங்க அமைச்சர் மொஹான் லால் கிரேரோ தெரிவித்தார். (வ–22)

## ஐ.நா தீர்மானத்தை அரசு ஏற்றுள்ளது –மகிந்த சமரசிங்க

ஐ.நா நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானத்தை அரசு ஏற்றுக்கொண்டுள்ளதாக அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த தீர்மானத்தினால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்ற விடயத்தை அவர் நிராகரித்துள்ளார்.தமிழகத்தின் முதல்வர் ஜெயலலிதா மற்றும் முன்னாள் முதல்வர் கருணாநிதி ஆகியோர் இந்த தீர்மானத்தை எதிர்ப்பதன் மூலம் அது இலங்கைக்கு வாய்ப்பானது என்பது தெரியவருகிறது என அமைச்சர் குறிப்பிட்டார். (வ)



உடல்நலக் குறைவால் சாவடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் மகளிர் பிரிவு அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினியின் பூதவுடலுக்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா அஞ்சலி செலுத்தியபோது...

# பொலிஸ் திணைக்களத்தில் முறைகேடான நியமனங்கள்

## பொலிஸ்மா அதிபர் நாட்டில் இல்லாத வேளை

கொழும்பு, ஒக்.19

பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்ககோன் வெளிநாட்டு விஜயத்தில் உள்ள நிலையில், பொலிஸ் திணைக்களத்தில் முறைகேடான நியமனங்கள் பல வழங்கப்பட்டுள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

சட்டம் மற்றும் அமைதி தொடர்பான புனர்நிர்மாண அமைச்சர் மற்றும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒருவரின் தலையீட்டுடன் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வாறு நியமனங்கள் வழங்கப்படுவதற்கான முக்கிய காரணம், பொலிஸ் மா அதிபர் ஓய்வு பெற்றதன் பின்னர் அப்பதவிக்கு வருவதற்கு எதிர்பார்க்கப்படும் பிரதிப் பொலிஸ்மா அதிபர்களை அரசியல் ரீதியில் தயார்படுத்துவதாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர்களின் தேவைக்கு ஏற்ப பல்வேறு இடமாற்றங்களும் இடம் பெற்றுள்ளதாக கொழும்புத்தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளன. (வ)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாலர் கல்விக் கழகத்தின் ஸ்தாபகரும் அதன் செயலாளருமாகிய திருமதி தே. இரட்ணகோபால் அவர்களின் அன்புத் தம்பி

**வைத்திலிங்கம் பாலேந்திரன் (சிறாப்பர்)**

(ஓய்வுபெற்ற பிரதி அதிபர் இராமநாதன் கல்லூரி இணக்க சபை உறுப்பினர்)

அவர்கள் (16.10.2015) அன்று இறைபதமடைந்ததையிட்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அம்மன் வீதி,
யாழ்ப்பாணம் (64146)(11.15.16.13)

பாலர் கல்விக் கழக நிர்வாகத்தினர்,
ஆசிரியர்கள்

## மரண அறிவித்தல்



### வைத்திலிங்கம் பாலேந்திரன் (சிறாப்பர்)

(ஓய்வுபெற்ற பிரதி அதிபர்-இராமநாதன் கல்லூரி, இணக்க சபை உறுப்பினர்)

சுதுமலை வடக்கைப் பிறப்பிட மாகவும் இணுவில் கிழக்கை வதிவிட மாகவும் கொண்ட வைத்திலிங்கம் பாலேந்திரன் (சிறாப்பர்) (ஓய்வுபெற்ற இராமநாதன் கல்லூரி பிரதி அதிபரும் இணக்க சபை உறுப்பினர்) 16.10.2015 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார்காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-பொன்னம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற சுவாமிநாதப்பிள்ளை மற்றும் இராசமணி தம்பதியரின் மருமகனும், ரஞ்சனா தேவியின் (முகாமையாளர்-தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம்) அன்புக் கணவரும், Dr. கார்த்திகா (தேசிய வைத்தியசாலை கொழும்பு) Eng. ஜனகன் (சிங்கப்பூர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தெய்வநாயகி (ஓய்வுபெற்ற ஆசிரியை), காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (கல்விப்பணிப்பாளர், விஞ்ஞானம்) மற்றும் பாஸ்கரன் (கப்பற் கூட்டுத் தாபனம்) காலஞ்சென்றவர்களான பராசக்தி பாலகிஷ்ணன் (மொடேர்ண் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்) மற்றும் விமலநாயகி காலஞ்சென்ற பாலச்சந்திரன் ஆகியோரின் சகோதரனும், இராசமனோகரன் (ஓய்வுபெற்ற முகாமையாளர் மக்கள் வங்கி-சுன்னாகம்), தேவ மனோகரன் (திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலிகாம வலயம்), இராசதேவி (கனடா), இராசமலர் (லண்டன்), சுலோசனா (ஆசிரியை, உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம்), கிருபாகரன்(கனடா), செல்வாகரன் (கனடா), ஐங்கரன்(கனடா), திருக்குமரன் (கனடா) காலஞ்சென்ற இரத்தினகோபால் மற்றும் தனலக்சுமி தனேஸ்வரி செல்வரத்தினம், சிதம்பரேஸ்வரி குமாரகுலசிங்கம், இந்திராணி ஆகியோரின் மைத்துனரும், ஸ்ரீபதி, துஷ்யந்தி, பரமானந்தன் உதயகுமார், யுவராஜா, மதுரா, றஜிதா, சந்திரிக்கா, புகழினி ஆகியோரின் சகலனும், ரமணன் காலஞ்சென்ற தனுஷா ஆகியோரின் சிறிய தந்தையும், யாழினி, விசாகன், பாலினி, அனு, அனந்தன், பானு, பாரி, யதுர்ஷா, விக்னேஷ், ஹரிஸ், ஹரினி, ஹேதுசன், ஹேதுஷா ஆகியோரின் பெரியதந்தையும், செந்தூரன், கஸ்தூரி, சர்மிலன், சாமந்தி, மாதுமை, ஜயபவன், சயான், கிருஷான், மதுஷான், சேயோன், ரணேஸ், சுவாதி, சரிக்கா, சுவேந்திகா, யுவேந்திகா, சுபீக்ஷா ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2015) திங்கட்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 4522568, 077 655 1739
075 041 3011

அங்களப்பாய் வீதி,
இணுவில் கிழக்கு.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தங்கமணி நல்லையா



இணுவில் மேற்கு இணுவிலை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி தங்கமணி நல்லையா நேற்று (18.10.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ந. சிதம்பரேஸ் வரனின் பாசமிகு தாயும், ஸ்ரீமதியின் மாமியும், சுமுகாவின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2015) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல்:
சி. ஸ்ரீமதி (மருமகள்).

### சின்னையா ராம்குமார் (ரமணி)



தட்டான் குளம் வீதி, மீசாலை வடக்கை பிறப்பிடமாக கொண்டவரும், சுவிஸில் வசித்து வந்தவருமான சின்னையா ராம்குமார் நேற்று (18.10.2015) ஞாயிற்றுக் கிழமை மீசாலையில் காலமானார்.

அன்னார் சின்னையா சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், சிவகுமார் (சுவிஸ்), சூரியகுமார் (M.P.C.S சாவகச்சேரி), விமலகுமார் (மாநகரசபை யாழ்ப்பாணம்), வசந்தகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், அனமரியா (சுவிஸ்), குணவதனி, சுதந்தா (வரணி மத்திய கல்லூரி), மரியான் (சுவிஸ்) ஆகி யோரின் மைத்துனரும், வெண்ணிலா, ஜெனணி, ரோஜா, நீதிசன், விவேக்கா, தேமதுரன் ஆகியோரின் சித்தப்பாவும், அபிஷயன், காவியா, ஜான் ஜாலுக்கா, டாறியோ ஆகியோரின் பெரியப் பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2015) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு பி.ப. 2.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தட்டான் குளம் வீதி,
மீசாலை வடக்கு, கொடிகாமம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மத்தள விமான நிலையத்திலுள்ள நெற் களஞ்சியத்தை அகற்ற வேண்டும் –*நிமல்*

கொழும்பு, ஒக்.19

மத்தள விமான நிலையத்திலிருந்து நெற்களஞ்சியத்தை அகற்ற வேண்டுமென அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

மத்தள விமான நிலையம் சர்வதேச தரத்தில் பேணப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார். விமான நிலையத்துக்குப் பயணம் செய்த போது அவர் இதனைச்சுட்டிக்காட்டியுள்ளார்.

விமான நிலைய வளாகத்தில் நெல் களஞ்சியப்பட்டுள்ளதனால் விமான நிலைய சூழலுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள அமைச்சர், மத்திய கிழக்கு நாடுகளின் விமான ங்களை மத்தள விமான நிலையத்தில் பயன் படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் குறிப்பிட்டுள்ளார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலட்சிய தாகத்தை மூச்சாகக் கொண்ட தமிழினிக்கு அஞ்சலி

## *இரங்கல் செய்தியில் மாவை எம்.பி தெரிவிப்பு*

யாழ்ப்பாணம்.ஒக்.19

நிறைந்த கொள்கைப் பற்றும் இலட்சிய தாகமும் அவர் மூச்சாக இருந்த சிவகாமி என்னும் தமிழினியை என்றும் தமிழர் மறந்துவிடமாட்டார்கள் என யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

நேற்றுமுன்தினமிரவு கொழும்பு மருத்துவமனையில் சகோதரி சிவகாமியின் உயிர் பிரிந்து விட்டது என்ற செய்தி கிடைத்தது. துக்கம் தாளாமல் கண்கள் கலங்கி விட்டன.

சிவகாமி, தமிழினி எனும் இயக்க பெயருடன் விடுதலைப் புலிகள் மகளிர் அணியில் அரசியல்துறையில் தன்னை அர்ப்பணித்திருந்தமையை அறிந்திருந்தேன். நல்ல அரசியல் அறிவும் ஆற்றலும் நிறைந்த வராய் விளங்கினார் .

தலைமைத்துவமும் ஆளுமையும் கொண்டிருந்தார். நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும் இனிமையுடன் பழகும் சுபாவமும் பண்பும் நிறைந்த பெண்மணியாக ஒரு தலைமைத்துவமிக்க போராளியாக விளங்கியதை அறிவேன்.

தமிழினியை கிளிநொச்சி, வன்னி , அம்பாறைமுதலானஇயக்கஅலுவலகங்களில் சந்தித்து அரசியல் சார்ந்த விடயங்களைப் பற்றி ஆர்வமுடன்கலந்துரையாடியசந்தர்ப்பங்களை நான் நினைவு கூருகின்றேன்.

நிறைந்த கொள்கைப் பற்றும் இலட்சிய தாகமும்அவர்மூச்சாகவும்இருந்ததையும் அறிந்திருக்கிறேன்.

தமிழின விடுதலைக்காக– தமிழீழ தேசத்திற்காக, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறையிலும்போர்ப்படையிலும் மேலும் பலதுறைகளிலும் பெண்கள் அர்ப்பணிப்புடன் பங்காற்றியிருந்தமையும் கொள்கைக்காகத் தம் உயிரை அர்ப்பணித்தமையும் விடுதலை வரலாற்றில் பெருமையுடன் பதிவு செய்ய முடியும் .இன விடுதலைப் போரின் பங்காளியாக 2009 வரை வன்னியில் அர்ப்பணித்து நின்றவரை இராணுவம் கைது செய்து சிறை முகாமிலும் புனர்வாழ்வு முகாமுக்குள்ளும் அடைத்தது. அங்கிருந்து நோய்வாய்ப்பட்டு சில ஆண்டுகள் தன் தாயுடன் இணைந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தும் மாறாத, நோயினால் மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் இரவு இவர் உயிர் பிரிந்துவிட்டாலும் என்றும் தமிழர் நினைவிலிருப்பார்.

எம் இதய அஞ்சலியை அர்ப்பணித்து அன்னார் குடும்பத்தினர் துயரத்தில், கண் ணீரில் கலந்து ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போம்– என்றுள்ளது. (வ)

**தேவை**

பைக்போ ஒப்பிரேற்றர் தேவை மாதம் 75,000 ரூபாக்கு மேல் சம்பளம்

தொடர்பு : 077 82 48 686 துர்க்கா கிரேசர் புத்தூர் கிழக்கு

**வயற்காணி தேவை**

கிளிநொச்சியை அண்டிய பிரதேசங்களில் இரண்டு போக பயிர்ச்செய்கை செய்யக்கூடிய 15 தொடக்கம் 25 ஏக்கர் வரையிலான வயற்காணி தேவை.

தொடர்பு : 077 966 7533

**வேலையாள்கள் தேவை**

மானிப்பாயில் இயங்கும் புடைவை விற்பனை நிலையத்துக்கு பழகவிரும்பும் வேலை தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை.

தொடர்பு : 077 991 0123

**பெயர் மாற்றம்**

சுரபாஸ்கரன் ஜெயமாலினி ஆகிய நான் எனது பிள்ளைகளான சுரபாஸ்கரன் மதுசாலினி சுரபாஸ்கரன் தனுஸ் ஆகியோரின் பெயர்களை இன்று (19.10.2015) திங்கள்கிழமை முதல் சுரபாஸ்கரன் மனிசா சுரபாஸ்கரன் ரஸ்ஸான் என்று மாற்றிப் பயன்படுத்தவுள்ளேன் என அறியத்தருகிறேன்

சுரபாஸ்கரன் ஜெயமாலினி

# மரண அறிவித்தல்கள்



## மகேந்திரன் அமிழ்தன்

(பழைய மாணவன் - சென் ஜோன்ஸ் கல்லூரி - 2010), இறுதி ஆண்டு மொறட்டுவ பல்கலைக் கழகம் - பொறியியல் பீடம்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மகேந்திரன் அமிழ்தன் கடந்த (16.10.2015) வெள்ளிக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் V.S. மகேந்திரன் (முன்னாள் - விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர், யாழ் மத்திய கல்லூரி), லதா மகேந்திரன் (முன்னாள், ஆசிரி யர், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, புனித பத்திரி சியார் கல்லூரி) தம்பதியரின் அன்பு மகனும், லாவண்யா, ஜோய் காருண்யா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி பழைய மாணவி கள்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (20.10.2015) செவ்வாய்க்கிழமை பி.ப. 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து பரியோவான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

50, பேரின்பநாயகம் லேன்,
சுண்டுக்குளி.

தகவல்:
குடும்பத்தினர்.



## சின்னத்தம்பி சிவலிங்கம்

பிறப்பு 03.08.1943 — இறப்பு 17.10.2015

கோப்பாய் வடக்கு, புதர்மடத்தைப் பிறப்பிடமாகவும், வெள்ளாம்போக்கட்டி கொடிகாமத்தை நிரந்தர வதிவிடமாகவும் தற்காலிகமாக ஸ்ரீநாராயணா வீதியை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிவலிங்கம் கடந்த (17.10.2015) சனிக் கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி பாக்கியம் தம்பதிகளின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற வர்களான கணபதி - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன் புக் கணவரும், சிவரூபி (ரூபி), சுதர்சினி (சுதா), சசிகரன் (றோசன்), சுஜாறத் (றேகன்), சுவர்ணராஜ் (ராஜ்), சுவர்ணமுகி (மேனகா) ஆகியோரின் பாசமிகு தகப்பனும், கௌசலா, தனுசா, றேனுஜா, விஜியகுமார் ஆகியோரின் மாமனும், சாருஜன், பிரியதர்சினி, விகாஸ், ஓவியா, ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதியடக்க ஆராதனை நாளை (20.10.2015) செவ்வாய்க்கிழமை கோண்டாவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கொட்டைக்காடு மயானத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஸ்ரீ நாராயணா வீதி, கோண்டாவில்.
077 0280297

தகவல்:
சி.றேகன் (மகன்).



## ஐயம்பிள்ளை தனபாலசிங்கம்

(சமாதான நீதிவான்)

மலர்வு 07.06.1936 — உதிர்வு 18.10.2015

கரம்பன் மேற்கைப் பிறப்பிடமாகவும் வேலணை மேற்கையும் தற்போது வவுனியா கோவில் குளத்தையும் வதிவிடமாகக் கொண்ட ஐயம்பிள்ளை தனபாலசிங்கம் நேற்று (18.10.2015) ஞாயிற்றுக் கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கமலாதேவியின் பாசமிகு துணைவரும், காலஞ்சென்ற வர்களான ஐயம்பிள்ளை - கோணேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், அருளம்பலம் - மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சோதியம்மா மற்றும் நவமணி ஆகியோரின் நேசம்மிக்க சகோதரனும், காலஞ்சென்ற முத்துச்சாமி, நாகரத்தினம் மற்றும் சுந்தரலிங்கம், சோமலிங்கம், பூலோக சுந்தரம்பிள்ளை, இராசரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கமலேஸ்வரன், பாலேஸ்வரி (ஆசிரியர், வ/இந்துக் கல்லூரி), கணேஸ்வரன், ஜெகதீஸ்வரி, தனேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கைக்கேறுமெல், சிவகுலசிங் கம், சங்கீதா, சுரேஸ்வரன், ஜனகன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கோபிநாத் (யாழ். பல்கலைக்கழக மாணவன்), சாருகா, (ஸ்ரீ ஜெயவர்த்தன புர பல்கலைக்கழக மாணவி), கிரிஷாந், கோபிந், பிரவிந், தானுகா, சகானா, ஜெயந், ஐயனுகா, பிரணவன், பானுகா, பாவனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2015) திங்கட் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 4.00 மணியளவில் தகனக் கிரியைக்காக கோவில் புதுக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 182, கோவில்
புதுக்குளம் வீதி, வவுனியா
024 222 5227

தகவல்:
திருமதி பாலேஸ்வரி
சிவகுலசிங்கம்

# மரண அறிவித்தல்கள்



## இரத்தினசிங்கம் இரங்கநாதன்

சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் புதுவளவு அளவெட்டி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசிங்கம் இரங்கநாதன் நேற்று (18.10.2015) ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத் தினசிங்கம் சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத் துரை-அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், உருக்குமணியின் அன்புக் கணவரும், றஜீத்தா, சுஜீத்தா, மீரஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், றமணன் (நொதேன்பவர்), நேசகுமார் (ஆஸ்திரேலியா), விவேக் (பீப்பில் லீசிங்) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற கமலாதேவி, பத்மாதேவி, காலஞ்சென்ற தெய்வேந்திரம், காலஞ்சென்ற இரவீந்திரன், சிறீபவன், லீலாதேவி, பகீரதன் ஆகியோரின் அன்புச் சகோ தரனும், மதுமிதா, கோபிசன், யுகாஷ், ஆரபி, அகரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2015) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக கேணிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"புதுவளவு"
அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.



## முத்துப்பிள்ளை வைத்திலிங்கம்


புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட முத்துப்பிள்ளை வைத்திலிங்கம் நேற்று (18.10.2015) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துப்பிள்ளை மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகனும், நேசரத்தினத்தின் அன்புக் கணவரும், சந்திரலீலா, இந்திராதேவி (பிரான்ஸ்), சுகிர்தராணி , சங்கரலிங்கம், சத்தியபாமா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான குணசிங்கம், இராசரத்தினம் மற்றும் சங்கரப்பிள்ளை, மங்கயற்கரசி, தவராசா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான அன்னப்பிள்ளை, காசிப்பிள்ளை, செல்லம்மா, குட்டிப்பிள்ளை, சின்னட்டிப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.10.2015) செவ்வாய்க் கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிள்ளையான் காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(BOC Lene)
புன்னாலைக்கட்டுவன் வடக்கு.

தகவல்:
வை. சங்கரலிங்கம் (மகன்).



## பூதர் கந்தசாமி

(மெக்கானிக்)

கோட்டைக்காடு மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பூதர் கந்தசாமி (மெக்கானிக்) கடந்த (17.10. 2015) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பூதர்-வள்ளி தம்பதியரின் அன்பு மகனும், சின்னவி- தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மாணிக்கத்தின் அன்புக் கணவரும், செல்வநாயகி, சத்தியநாதன் (சுவிஸ்), சறோஜாதேவி, சிவ நாதன் (சுவிஸ்), Dr.நிர்மலாதேவி (சமாதான நீதிவான்), யோதீஸ்வரன் (கனடா), லோகேஸ்வரி (ஜேர்மனி) பரமேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சங்கரலிங்கம், அரியமலர், சூரியகுமார், சிவமலர், பழனி (C.E.B) , றோசனா, லலித்குமார், சுகுமார், இரா சேந்திரம் ஆகியோரின் அன்பு மாமனும், உதயகுமாரியின் அன்புச் சித்தப்பாவும், காலஞ்சென்ற சின்னமணி, சின்னத்தங்கம், கனகம்மா, இராசம்மா, நாகம்மா, திருநாவுக்கரசு ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கணபதி, பாலசிங்கம், செல்லத்துரை மற்றும் மகேஸ்வரி, இராசமணி, இரத்தினம், இராசதுரை, ஐயாத்துரை ஆகியோரின் அன்பு மைத்துனரும், சாமினா-தயாபரன் (லண்டன்), சஜீபன்-சுயந்தினி (சுவிஸ்) (அமீரன், சகீரன், சாருணி(சுவிஸ்), மதுர்சன் (ஜேர்மன்) -வேர்ஜினியா, தேனுஜா, தரன்சியா, சந்தோஸ், (ரதுர்சன், விதுர்சன், யதுசன்) (சுவிஸ்), றுதாங்கன் , சஞ்சை (பிரவின், ஜஸ்வின், அஸ்வின்) (கனடா), துசிரேகா, பிரசாந் (ஜேர்மன்), சந்திரிக்கா, அபிஜா, லுயன் (ஜேர்மனி), பபீசன், யுதிக்கா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும், விதுசா, மானசா, லுக்சன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.10.2015)செவ்வாய்க்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ம ல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோட்டைக்காடு,
மல்லாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினியின் நினைவுகள் எப்போதும் நீங்காதிருக்கும்

## நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் இரங்கல் செய்தியில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.19

அரசியல் ஆற்றல் கொண்ட - ஆளுமை கொண்ட சகோதரி சிவகாமியை இழந்து விட்டோம். அவர் இவ்வுலகை விட்டுப் பிரிந்தாலும் தமிழர் நெஞ் சில் எப்போதும் நிலைத்திருப்பார். - என்று தெரிவித்தார் யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மகளிர் பிரிவின் முன்னாள் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினியின் மறைவையிட்டு வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

கொள்கைப் பற்றும் - இலட்சியத் தாகமும் கொண்ட பெண்ணாக தமி ழினி விளங்கினார். தமிழர் விடுதலைக்காக - தமிழ்த் தேசத்தின் விடுதலைக்காக அவர் போர் படை யிலும் அரசியல் துறைகளில் தமது உயிரைச் துச்சம் என மதித்துப் பணியாற்றியிருந்தார். கொள்கைக்காக தன்னை அர்ப்பணித்த அந்த வீரப் பெண்மணியின் நினை வுகள் தமிழர் மனங்களில் எப்பொதும் நிலைத்திருக்கும்.

பெண்களுக்கு முன்மாதிரியாக - வீரப் பெண்மணியாக வாழ்ந்து மறைந்திருக்கும் தமிழினி தமிழர் மனங்களில் எப்போதும் நிலைத்திருப்பார்.

அவருக்கு எமது இதய அஞ்சலிகளை சமர்ப்பதோடு - அவரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கேற்று அந்த வீரப் பெண்மணியின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போமாக. - என்றுள்ளது. (ற)

# நீதிப் பொறிமுறைக்கு குறிப்பிட்ட சில போர்க்குற்றங்களே பாரப்படுத்தப்படும்

## பிரதமர் ரணில் சிங்கப்பூரில் தெரிவிப்பு

சிங்கப்பூர், ஒக்.19

போர்க்குற்ற விசாரணைகளை மேற்கொள்ள அமைக்கப்படும் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய நீதிப் பொறிமுறைக்கு குறிப்பிட்ட சில வழக்குகளே செல்லக் கூடும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான வழக்குகள் முழுமையாக உண்மை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும். அதன் பின்னர் கருணை சபை ஊடாக அவை ஆராயப்படும். கருணை சபையில் மக்களின் பங்களிப்பு இருக்கும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சிங்கப்பூருக்கு விஜயம் மேற் கொண்டிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அந்நாட்டின் ஆங்கில ஊடகமான ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அந்த செவ்வியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதா வது:-

இலங்கையின் விசாரணை ஆணைக் குழுக்களில் ஏற்கனவே வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்பு இருந்துள்ளது.

இலங்கையில் இறுதிப் போரில் இடம் பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணை செய்வதற் காக அமைக்கப்படும் விசேட நீதிப் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகள் பங்களிப்பதில் சிலவேளைகளில் சிக்கல் மிகுந்ததாக அமை யக் கூடும். அவர்களினுடைய பங்களிப்பு நீதிமன்ற அமர்வின் அடிப்படையி லேயே அமையும். வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்பு தொடர்பில் சிவில் சமூகங்கள் எந்த எதிர்ப்பை யும் வெளியிடவில்லை.

போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர் பில் முதலில் அனைத்து வழக்குக ளும் உண்மை ஆணைக்குழுவுக்கே பாரப்படுத்தப்படும். அவர்கள் கருணை சபையிடம் ஆராய்வதற்காக வழங்குவார்கள். கருணை சபை மக்களினுடைய பங்களிப்பில் அமைக்கப்படும்.

அதன் பின்னரே சில வழக்குகள் மாத்திரமே நீதிப்பொறிமுறைக்கு செல்லக் கூடும். எனவே அதில் வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்பு இருப்பது பிரச்சினையாக அமையாது.

அத்துடன் ஐ.நாவினா கூறப்பட்டது போன்று இறுதிப்போரில் 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்க மாட் டார்கள். அது குறைவான அளவாகவே இருக்குமென்று நினைக்கின்றேன் என பிரதம் குறிப்பிட்டுள்ளார். (வ)

## முன்னாள்

தன்னுடைய சிறப்பான செயற்பாடு களால் தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல் பிரிவு தலைவியாக உயர்ந்தார்.

இறுதிப் போரின் பின்னர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு வெலிக்கடை சிறையில் அடைக்கப்பட்டு, பின்னர் புனர்வாழ்வுப் பயிற்சிக்காக பூந்தோட்டம் புனர்வாழ்வுப் பயிற்சி மையத்திற்கு அனுப்பப்பட்டிருந்தார். புனர்வாழ்வுப் பயிற்சிகளை முடித்துக் கொண்டதையடுத்து, தமிழினி அவருடைய தாயாராகிய சின்னம்மா சிவசுப்பிரமணியத்திடம் கடந்த 2013 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஒப்படைக்கப்பட்டார். (ற-5)

## 3 ஆணைக்குழு

உறுப்பினர்களாக ரஞ்சித் சில்வா, நிவேல் குருகேக்கும் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

பொதுச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு முன்னாள் பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் டி.திசாநாயக்க தலைவராகவும் ஏ.டபிள்யூ.ஏ சலாம், என்.எஸ்.செனவிரட்ண, தரா விஜயதிலக, பிரதாப் இராமானுஜன், விஜயலக்ஷ்மி ஜெகராஜசிங்கம், எம்.எல்.எம்.மெண்டிஸ், ஆர்.ரேணுகே மற்றும் சரத் ஜெயதிலக ஆகியோர் உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவராக, பேராசிரியர் எஸ்.ஹெட்டிகேயும் உறுப்பினர்களாக, அன்ரன் ஜெகநாதன், பீ.எச்.மனதுங்க, சாவித்திரி தர்ஷினி விஜயசேகர மற்றும் வை.எல்.எம். சுகைர் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு அரசமைப்பு சபையால் தெரிவாகிய மேலும் இரண்டு உறுப்பினர்கள் தொடர்பில் ஜனாதிபதியால் அனுமதி வழங்கப்படவில்லை. அரசமைப்பு சபையால் அனுப்பப்படும். தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கான நியமனத்தை ஜனாதிபதி 14 நாள்களுக்குள் வழங்க வேண்டும்.

19ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் அரசமைப்பு சபையால் தெரிவு செய்யப்படும் சுயாதீன ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி, 14 நாள்களுக்குள் நியமனம் வழங்காமல் தாமதித்தால், அவர்களின் தெரிவு இரத்துச் செய்யப்படும்.

எதிர்வரும் நான்காம் திகதி அரசமைப்பு சபை மீண்டும் கூடும் போது மேலும் 6 சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். இதில் தேர்தல்கள் ஆணைக்குழு, நிதி ஆணைக்குழு, எல்லை நிர்ணய ஆணைக்குழு, தேசிய கொள்முதல் ஆணைக்குழு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் தேசிய மொழிகள் ஆணைக்குழு ஆகியவற்றுக்கே எதிர்வரும் 4 ஆம் திகதி உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இதேவேளை தேசிய கணக்காய்வு ஆணைக்குழு நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு ஆரம்பிக்கப்படவுள்ளது. (ற-வ)

## போர்க்குற்ற

பாரதூரமான பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்ட புலி உறுப்பினர்களும் அடங்குகின்றனர்.

இவ்வாறான நிலையில், ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைய, நிறுவப்படவுள்ள கலப்பு நீதிமன்ற நடவடிக்கையின் போது, இலங்கையை பயங்கரவாதிகளிடம் இருந்து காப்பாற்றிய இராணுவத்தினரை போர்க்குற்றவாளிகளாகக் கருதி தண்டனை வழங்குவதற்கான செயற்பாடுகளை அரசு மேற்கொள்ளவுள்ளது.

இந்த வருடம் ஜனவரி மாதம், மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் வாக்களித்த மக்கள் இந்த நாட்டில் ஒரு மாற்றத்தினை எதிர்பார்த்திருந்தனர். எனினும் மக்கள் எதிர்பார்த்த ஒரு நல்ல மாற்றம் இதுவல்ல. அவர்கள் எதிர்பார்த்ததை விடவும் ஒரு மோசமான மாற்றமே ஏற்பட்டுள்ளது.

மைத்திரி ரணில் ஆட்சியின் கீழ் இலங்கைக்குக் கிடைக்கவுள்ள பிரதிபலன்தான் இந்தக் கலப்பு நீதிமன்றமும், இராணுவத்தினர் மீதான போர்க்குற்றமும் ஆகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை நேற்று பிலியந்தலையில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க, முன்னாள் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை அரசியல் கைதிகளாக வகைப்படுத்த முடியாது எனத் தெரிவித்துள்ளார். (ற-வ)

## பாலியல்

சம் கோரினர் என்று கணவனை இழந்த பெண் ஒருவர் செய்த முறைப்பாட்டை அடுத்து இந்தக் கூட்டு விசாரணை ஆரம்பிக்கப்பட்டது.

இதுபோன்ற மேலும் பல முறைப்பாடுகள், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துக்கு கிடைத்திருந்தன என்று கிளிநொச்சிக் கிளையின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பாக இந்தியத் தூதரகத்துடன் இணைந்து நடத்திய விசாரணை நிறைவடைந்துள்ளது என்றும் இந்த விசாரணையின் கண்டறிவுகள் தொடர்பாக இன்று கொழும்பில் நடக்கவுள்ள உயர்மட்டக் கூட்டத்தில் ஆராயப்படும் என்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தொடர்பாடல் மற்றும் மனிதாபிமான இராஜதந்திரப் பிரிவின் மூத்த முகாமையாளர் மகேஸ் ஜோன்னி தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தின் பின்னரே, முகாமைத்துவம் ஒரு முடிவை எடுக்கும், அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பாக இந்தக் கூட்டத்தின் பின்னரே தீர்மானிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

கிளிநொச்சிப் பகுதியில் பணியாற்றிய அதிகாரி ஒருவர், இன்னமும் விசாரணையில் இருக்கின்றார் என்றும் அவரும் கூட, இந்தவாரம் நடக்கவுள்ள மாதாந்த முன்னேற்றக் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளார் என்றும் தம்மை வெளிப்படுத்த விரும்பாத கிளிநொச்சி கிளையின் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இதுகுறித்து கருத்து வெளியிட்ட, இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் பேச்சாளர், குற்றச்சாட்டை எதிர்கொண்டதில் இருந்து குறிப்பிட்ட அதிகாரி பணியில் இருந்து தானாக முன்வந்து வேலையிலிருந்து விலகிச் சென்றிருக்கின்றார் என்று குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்திய வீட்டுத் திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கிளிநொச்சி தேவாலயத்தின் மதகுரு வண பிதா எஸ்.எம்.பி ஆனந்தகுமார், இலங்கை செஞ்சிலுவைச் சங்க உயர்மட்டத்திற்கு [illegible] அறிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி அலுவலகத்தால் வேண்டுமென்றே கொடுப்பனவை தாமதப்படுத்துகின்றனர் என அவரால் சுட்டிக்காட்டப்பட்ட போதும் அவை எதனையும் உயர்மட்டம் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை.

இந்திய வீட்டுத் திட்டத்தில் ஒவ்வொரு வீட்டுக்கும் ஒதுக்கப்பட்ட நிதி 8 லட்சம் ரூபா. எனினும் இலங்கை செஞ்சிலுவை சங்கம் 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவே மட்டுப்படுத்தி விநியோகிக்கின்றது. தற்போது கட்டடப் பொருள்களின் அதிகரித்த விலையில் இந்தப் பணம் போதுமனதல்ல என அருட்தந்தை குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் செஞ்சிலுவை சங்க அதிகாரிகள், குறிப்பிட்ட சில கட்டடப் பொருள்கள் விற்பனையகங்களில் மட்டுமே பொருள்களை வாங்க வேண்டுமென்று வீட்டுத்திட்ட பயனாளிகளுக்கு கட்டளையிட்டனர். சில நேரங்களில் பற்றுச்சீட்டே பயனாளிகளுக்கு வழங்கப்படவில்லை என வண பிதா எஸ்.எம்.பி ஆனந்தகுமார் குற்றச்சாட்டியுள்ளார்.

கொழும்பு சண்டே ரைம்ஸ் ஆங்கில ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-வ)

## சீன கடற்படை

கொண்டிருந்தது.

இந்த நிலையில் கடந்த பெப்ரவரி மாதம் சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, எதிர்காலத்தில் சீன நீர்மூழ்கிகள் கொழும்புக்குப் பயணம் மேற்கொள்வதற்கு வாய்ப்பில்லை என்று கூறியிருந்தார்.

எனினும் கடந்த மாதம் புதிதாகப் பதவியேற்றுள்ள பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெற்றியாராச்சி பீஜிங்கில் வைத்து ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்துக்கு, அளித்துள்ள செவ்வியில் தற்போதைக்குத் திட்டங்கள் இல்லாவிட்டாலும் கூட கடற்படைக் கப்பல்கள் குறித்து சீனாவிடம் இருந்து புதிய கோரிக்கைகள் விடுக்கப்பட்டால் அது குறித்து தீவிரமாகச் சிந்திக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த விவகாரம் இன்னமும் எனது மேசைக்கு வரவில்லை. அது வந்தால் அதனைக் கருத்தில் எடுத்துக் கொள்வேன். சரியான பாதையில் அது வந்தால், நாம் தீவிரமாக அதனைப் பரிசீலிப்போம் என்று அவர் செவ்வியில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதில் உண்மையான ஆர்வமும், பயனும் இருந்தால், சிலவேளைகளில் நாம் உலகம் முழுவதிலும் இருந்து போர்க்கலங்களுடன் கூட்டு நடவடிக்கைகளையும், பயிற்சிகளையும் மேற்கொள்வோம். அதில் பாகுபாடு இருக்காது.

சீனாவுடனான உறவுகளில் வெளிப்படைத் தன்மையுடன் இருக்க இலங்கை அரசு முயற்சிக்கிறது. இராணுவ உறவுகள் வலுவானதாக இருக்க வேண்டும்.

முன்னைய ஆட்சிக்காலத்தில் வெளிப்படைத் தன்மை குறித்த முறைப்பாடுகள் இருந்தன. ஆனால், நாங்கள் அதிகம் வெளிப்படைத் தன்மையுடன் இருப்பதாக நினைக்கிறேன். நேரம் வரும் போது, எமது உறவுகள் வலுவடையும் என்றும் பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெற்றியாராச்சி கூறியுள்ளார். (ற-வ)

## அறுபது அரசியல்

இந்த விவகாரம் தொடர்பில் ஆராயப்படும் என்று ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த உறுதிமொழி குறித்து நேற்றுமுன்தினம் வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் அரசியல் கைதிகளிடம் எடுத்துக் கூறியிருந்தனர்.

அதையடுத்து ஜனாதிபதி தமது வாக்குறுதியை நிறைவேற்ற கால அவகாசம் அளிக்கும் வகையில் தமது போராட்டத்தை வரும் 7ஆம் திகதி வரை இடைநிறுத்த அரசியல் கைதிகள் தீர்மானித்தனர்.

இந்த நிலையில் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டு நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் குறைந்தது 60 தமிழ் அரசியல் கைதிகள் நவம்பர் 7 ஆம் திகதிக்கு முன்னர் பொதுமன்னிப்பில் விடுவிக்கப்படுவார்கள் என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இதேவேளை நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள அரசியல் கைதிகள் மீதான வழக்குகள் துரிதப்படுத்தப்படவுள்ளன. குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படாத அரசியல் கைதிகளை விடுவிப்பது உள்ளிட்ட சாத்தியப்பாடுகள் குறித்தும் அரச தரப்பில் ஆராயப்படுகின்றது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்கள் குறிப்பிட்ட கால புனர்வாழ்வுக்கு அனுப்பப்படும் சாத்தியங்கள் உள்ளன என்றும் கூறப்படுகிறது. சுமார் 10 முதல் 15 ஆண்டுகளுக்கு மேலாக அரசியல் கைதிகள் விசாரணையின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு கொழும்பு ஆங்கில ஊடகமான சண்டே ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. (ற-வ)

## நவம்பரில்

கலைக்கப்பட உள்ளது என்று கடந்த வாரம் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்திருந்தார்.

எனினும் அரசு உத்தியோகபூர்வமாக ஆணைக்குழு கலைப்பு குறித்து அறிவிக்க வில்லை எனவும் வழமையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் ஆணைக்குழுவின் தலைவர் மெக்ஸ்வல் பரணகம குறிப்பிட்டுள்ளார்.

எமது அடுத்த கட்ட விசாரணைகள் யாழ்ப்பாணத்தில் அடுத்த மாதம் இரண்டாவது வாரத்தில் நடைபெறும். அத்துடன் எமது ஆணைக்குழுவின் விசாரணைகள் குறித்த இடைக்கால அறிக்கையொன்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது இறுதி அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும்- என்றார்.

இதேவேளை காணாமற்போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை இந்த வாரம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்திருந்தார். (ற-வ)

## பிரிட்டன்

சித்ராங்கனி வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. பிரித்தானியாவுக்கான இலங்கை பிரதி தூதுவராக சுகீஸ்வர குணரட்னவின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. குணரட்ன கடந்த பதினைந்து ஆண்டுகளாக வெளிவிவகார சேவையில் பணியாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ற-வ)

# அத்துமீறும் இந்திய மீனவரின் வலைகளை வெட்டியெறிவதற்கு விரைவில் உத்தரவு

## பிறப்பிக்கப்படும் என்கிறார் மீன்பிடித்துறை அமைச்சர்

கொழும்பு, ஒக்.19
இலங்கை கடற்பரப்பில் மீன் பிடிக்கும் இந்தியமீனவர்களின் வலைகளை வெட்டியெறியுமாறு விரைவில் உத்தரவிடப்போவதாக மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதற்காக இலங்கை எல்லைக் காவல் படையினரின் உதவி நாடப்படுமெனவும், இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து மீன்பிடிப்பதை தடுப்பதற்காகவே இந்த நடவடிக்கை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் ஆங்கில ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளதாவது:-
இலங்கைக் கடறபரப்பில் அத்து மீறி நுழையும் இந்திய மீனவர்களை கைது செய்வது, படகுகளை கைப்பற்றுவது போன்ற நடவடிக்கைகள் காரணமாக பலன் ஏற்படாததை தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

மேலும்,இந்தியமீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் அத்து மீறி நுழையும்நடவடிக்கைகுறித்து ஐரோப்பிய ஒன்றியத்திடம் இலங்கைமுறையிட்டுள்ளது. நாங்கள் ஏற்கனவே இந்த விடயம் குறித்து ஐரோப்பிய ஒன்றியத்திடம் சுட்டிக்காட்டியுள்ளோம். அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் எனக்கருதுகின்றோம் என மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்தியா–இலங்கையின் சிநேகபூர்வமான அயல்நாடு என்ற காரணத்தினால் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் குறித்து ஐரோப்பிய ஒன்றியத்திடம் முறையிடவில்லை என அமைச் சரவை பேச்சாளர் கடந்த வியாழக் கிழமை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும், இந்தவிவகாரம் தொடர்பாக இரு நாடுகளினது மீனவர்கள் அமைப்புகளும் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்காததை தொடர்ந்து மேலும் பேச்சுக்களுக்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இந்தியத் தூதுவருக்கும் மீன்பிடித்துறை அமைச்சருக்கும் இடையில் இந்த வாரம் பேச்சுவார்த்தைகள் இடம்பெறவுள்ளன. இதன் பின்னர் மீன்பிடித் துறை அமைச்சர் மகிந்த அமரவீர இந்தியாவுக்கு பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

(ற–வ)

# புற்றுநோயால் பாதிக்கப்பட்ட இந்திய மீனவர் விடுவிப்பு

நெல்லியடி, ஒக்.19
பருத்தித்துறைகடல்பரப்பில்வைத்து அண்மையில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர் புற்று நோயால் அவதிப்பட்டநிலையில் அவர் நீதிமன்றால்விடுதலைசெய்யப்பட்டுள்ளார். அவர் யாழ்ப்பாணத்தில்உள்ளஇந்திய துணைத்தூதரகத்திடம் பாரப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளார் என்று கடற்றொழில் நீரியல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

தென்னிந்தியாவின் நாகப்பட்டினம் பகுதியை சேர்ந்த வீரமணி என்ற மீனவரே இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளார். இந்த மீனவர் இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் இலங்கை கடற்படையினரால் பருத்தித்துறை கடற்பகுதியில்வைத்து கைது செய்யப்பட்டிருந்தார்.

அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் அவர் புற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளமை தொடர்பில்நீதிமன்றின்கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. அதையடுத்து அவரை விடுவிக்குமாறு பருத்தித்துறைநீதிமன்றம் உத்தரவுபிறப்பித்தது. அவர்யாழ்ப்பாணத்தில்உள்ளஇந்திய துணைத்தூதரகத்திடம் பாரப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளார் என்று கடற்றொழில்நீரியல்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

(ற–109)

# ஏ.ரி.எம். அட்டையை பயன்படுத்தி கையாடியவர் நீதிமன்றில் சரண்

சாவகச்சேரி, ஒக்.19
ஒருவரின் தன்னியக்க பணபரிவர்த்தனை (ஏ.ரி.எம்.) அட்டையைப் பயன்படுத்தி 2 லட்சத்து 67 ஆயிரம் ரூபாவைச் சுருட்டிய சங்கத்தானை வாசி நேற்றுமுன்தினம் சட்டத்தரணி மூலம் நீதிமன்றில் சரணடைந்தார்.

குறித்த நபர் சாவகச்சேரியில் உள்ள தனியார்வங்கியொன்றில் அயலவர் ஒருவரின்தன்னியக்கபணப்பரிவர்த்தன அட்டைத் திருடி அதன் இரகசிய இலக்கத்தைத் தெரிந்து கொண்டு வங்கியிலிருந்து 2 லட்சத்து 67 ஆயிரம் ரூபாவை கையாடியுள்ளார்.

பணத்தை வங்கியில் வைப்பிலிட்டவர் வங்கிக் கணக்கில் உள்ள தொகை பெருமளவில் குறைந்திருந்ததை அவதானித்து சாவகச்சேரி பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். இது தொடர்பாக பொலிஸார் நேற்று நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து வங்கியின் இரகசியக்கண்காணிப்புகமரா பதிவுகளைப் பெறுவதற்கு நீதிமன்றில் அனுமதி கோரியிருந்தனர்.

இந்த நிலையில் சங்கத்தானையைச் சேர்ந்த நபர் சட்டத்தரணி மூலம் நீதிமன்றில் சரணடைந்தார். நீதிமன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டு ஒரு தொகைப் பணம் செலுத்துவதாகவும் தெரிவித்தார். அதையடுத்து குறித்த நபரை தலா 2 லட்சம் ரூபா பெறுமதியான இரு ஆள்பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான் மிகுதித் தொகையை அடுத்த தவணையில் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

இதனையடுத்து 99 ஆயிரம் ரூபா நீதிமன்றில் செலுத்தப்பட்டது.

(ற–9)

# பண்ணைப் பால கட்டுமானத்தை விரைவில் முடிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.19
பண்ணைப் பாலத்தின் நிர்மாணப் பணிகள்துரிதப்படுத்தப்பட்டுள்ளன. மாரி மழைக்கு முன்பாக இந்தப் பாலத்தின் கட்டுமானப் பணிகளை விரைவாக மேற்கொண்டுஅதைமக்கள் பயன்பாட்டுக்குத்திறந்துவிடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



இதற்கென இந்தப் பாலத்தின்கட்டுமானப்பணிகள்கடந்த ஒருவாரகாலமாக இரவு,பகலாகஇடம் பெற்று வருகின்றன. தற்போது பாலத்தைஅண்டியபண்ணைவீதிக்கு காப்பெற்போடும் பணிகளும் இடம் பெற்று வருகின்றன.

தற்போது இந்தப் பாலத்துக்கு அருகில் அமைக்கப்பட்ட தற்காலிக பாலம் ஊடாகவே போக்குவரத்துக்கள் இடம்பெற்று வருகின்றன. அதனால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அதையடுத்து மாரி மழைக்கு முன்பாக புதிதாக நிர்மாணிக்கப்படும் பண்ணைப் பாலத்தின் பணிகளை நிறைவுறுத்தவும் துரித ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேசமயம் பண்ணைவீதியில் மண்டைதீவு சந்திக்கு அருகில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பாலம் நிறைவு பெற்று மக்கள் பயன்பாட்டுக்குத் திறந்து விடப்பட்டுள்ளது.

(ற–17)


## துணுக்காய்,மல்லாவி,ஜயன்குளம், பொது சந்தை, ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சிக் ,கோழி இறைச்சி கடைகளுக்கான குத்தகை கேள்வி அறிவித்தல் - 2016

துணுக்காய் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட கீழே அட்டவணைகளில் விவரிக்கப்பட்ட நிலையங்களை 01.01.2016 தொடக்கம் 31.12.2016 வரையான காலப்பகுதிக்கு நடத்துவதற்கான குத்தகைக் கேள்விகள் கீழே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் (அலுவலக நாட்களில் மு.ப8.30-பி.ப 3.00)
காலம் :- 19.10.2015 - 06.11.2015
கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி :- 06.11.2015 பி.ப 12.00 மணி வரை
கேள்வி திறக்கப்படும் திகதி :- 16.11.2015 பி.ப 1.00 மணி
கேள்வி திறக்கும் இடம் :- துணுக்காய் பிரதேசசபை அலுவலகம்

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை செயலாளர், துணுக்காய் பிரதேசசபை , துணுக்காய் என்ற முகவரியிட்டு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்துக்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை " பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு " என்ற முகவரியிட்டு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இறைச்சிக்கடை

| இல | குத்தகை வகை | இடம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் | மீளளிக்கப்பட முடியாத கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | ஆட்டிறைச்சிக்கடை | துணுக்காய் | 19140.00 | 1,500.00 | 500.00 |
| 02 | மாட்டிறைச்சிக் கடை | துணுக்காய் | 232100.00 | 2,500.00 | 500.00 |
| 03 | கோழி இறைச்சிக்கடை | துணுக்காய் | 19140.00 | 1,500.00 | 500.00 |
| 04 | ஆட்டிறைச்சிக்கடை | மல்லாவி | 47520.00 | 1,500.00 | 500.00 |
| 05 | மாட்டிறைச்சிக் கடை | மல்லாவி | 1845250.00 | 2,500.00 | 500.00 |
| 06 | கோழி இறைச்சிக்கடை | மல்லாவி | 270556.00 | 1,500.00 | 500.00 |
| 07 | ஆட்டிறைச்சிக்கடை | ஜயங்குளம் | 11550.00 | 1,500.00 | 500.00 |
| 08 | மாட்டிறைச்சிக் கடை | ஜயங்குளம் | 112640.00 | 2,500.00 | 500.00 |
| 09 | கோழி இறைச்சிக்கடை | ஜயங்குளம் | 11550.00 | 1,500.00 | 500.00 |

பொதுசந்தை

| இல | குத்தகை வகை | இடம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் | மீளளிக்கப்பட முடியாத கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | துணுக்காய் பொதுச்சந்தையும் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையமும் | துணுக்காய் | 22.000.00 | 1,500.00 | 500.00 |
| 02 | மல்லாவி பொதுச்சந்தையும் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையமும் | மல்லாவி | 1510300.00 | 1,500.00 | 500.00 |
| 03 | ஜயங்குளம் பொதுச்சந்தையும் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையமும் | ஜயங்குளம் | 22.000.00 | 1,500.00 | 500.00 |

நிபந்தனைகள்:
1. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் இலங்கை பிரஜையாகவும் தமது ஆள் அடையாளத்தை நிருபிக்கக்ககூடியவராகவம் சான்றுகள் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
2. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறாகக் கணிக்கப்பட்டவர்கள் என தெரியவருமிடத்து தகுதியற்றவர்களாக கருதப்படுவர்.
3. எந்தவொரு கேள்வியும் காரணம் தெரிவிக்காது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ செயலாளரிற்கு பூரண அதிகாரம் உண்டு. ஆகக் குறைந்த கேள்வி தொகையிலும் குறைவான கேள்வி கேட்பவர்களின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்பட மாட்டாது.
4. கேள்விப்படிவ கட்டணம்,கேள்வித்தொகை, மாதவாடகை,என்பவற்றிற்கு 12%பெறுமதி சேர் வரியும் 2%தேசத்தை கட்டியெழுப்பும் வரியும் காலத்திற்கு காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரியும் செலுத்தப்பட வேண்டும்
5. வியாபார உத்தரவுக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.
6. சபையால் விதிக்கப்படும் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.
7. எம்மால் நிர்ணயிக்கப்படும் கொல்களத்திலேயே இறைச்சிக்குரிய மிருகங்கள் அறுக்கப்பட வேண்டும்.
8. இறைச்சிக்காக ஆடு , மாடு கொல்லப்பட முன் எம்மால் குறிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைய நடந்து கொள்ள வேண்டும்.
9. மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்
10. சித்தியடையும் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதிப்பணத்தை ஒரு வார காலத்திற்குள் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்

செயலாளர்,
பிரதேசசபை,
துணுக்காய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைலோ கிண்ண முடிவுகள்



யாழ்ப்பாணம், ஒக். 19
யாழ். மாவட்டச் செயலக விளையாட்டுத் திணைக்களம் மைலோ கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட உதைபந்தாட்ட அணிகளுக்கு இடையே நடத்தும் உதைபந்தாட்டத் தொடரில் தீவக லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கான ஆட்டங்கள் வேலணை ஐயனார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:- தீவக அணிக்கும் சண்ஸ்ரார் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சண்ஸ்ரார் அணி 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. சென்.ஜேம்ஸ் அணிக்கும் நாரந்தனை அண்ணா அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் நராந்தனை அண்ணா அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. சென்.சேவியர் அணிக்கும் ஞானஒளி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சென்.சேவியர் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. நயினை அண்ணா அணிக்கும் தம்பாட்டி காந்திஜி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் தம்பாட்டி காந்திஜி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. புங்குடுதீவு நண்பர்கள் அணிக்கும் புங்குடுதீவு நசரேத் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் புங்குடுதீவு நசரேத் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. வேலணையூர் ஐயனார் அணிக்கும் சண்ஸ்ரார் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் வேலணையூர் ஐயனார் அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
(ம)

# கலைமதி, ஐக்கியம் அணிகள் அடுத்த சுற்றுக்கு தகுதிபெற்றன

மாங்குளம், ஒக். 19
மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தினால் மாகாண ரீதியாக நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டத் தொடரில் நவிண்டில் கலைமதி அணியும், மன்னார் தோட்டவெளி ஐக்கிய அணியும் அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளன.

**கலைமதி எதிர் ஜெகமீட்பர்**

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டங்களில் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து கிளிநொச்சி வலைப்பாடு ஜெகமீட்பர் அணி மோதியது. ஆட்டத்தின் முதல் பாதியில் கலைமதியின் ஆதிக்கம் வெகுவாக நீடித்திருந்தது. 16ஆவது, 20 நிமிடங்களில் விஜிதரனும், 19வது நிமிடத்தில் சிந்துஜனும் அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்ய ஆட்டம் கண்டது ஜெகமீட்பர் அணி. பதில் கோலை அடிப்பதற்கு நீண்ட நேரத்தை எடுத்துக்கொள்ளவில்லை ஜெகமீட்பர் அணி. அந்த அணியின் லதீஸ் 23 ஆவது நிமிடத்தில் மீட்பரை மீட்கும் நட வடிக்கையில் முதல் கோலை பதிவுசெய்தார். அந்தக் கோலே முதல் பாதியின் முடிவுக்கோலுமாக 3:1 என்ற கோல் கணக்கில் கலைமதி அணி முன்னிலை வகித்தது.

இரண்டாம் பாதியின் 33 ஆவது நிமிடத்தில் கலைமதி அணியின் சந்துரு தனது அணியின் 4ஆவது கோலைப் பதிவுசெய்தார். 41ஆவது நிமிடத்தில் ஜெகமீட்பர் சார்பாக மற்றுமொரு கோல் பதிவாக முடிவில் 4:2 என்ற கோல் கணக்கில் நவிண்டில் கலைமதி அணி வெற்றிபெற்றது.

**ஐக்கியம் எதிர் கருணாகரன்**

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் மன்னார் தோட்டவெளி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வடமராட்சி கருணாகரன் அணி மோதியது. ஆட்டத்துடன் இணைந்து கருணாகரன் அணியின் ஆதிக்கமும் ஆரம்பமாகியது. அந்த அணியின் சிந்துஜன் 3ஆவது நிமிடத்திலும், லோகராஸ் 10ஆவது நிமிடத்திலும் கோல்களை அடிக்க 2:0 என்ற கோல் கணக்கில் கருணாகரனின் ஆதிக்கத்துடன் முடிவடைந்தது முதல்பாதி.

இரண்டாம் பாதியின் 4ஆவது நிமிடத்திலும் கருணாகரனின் சார்பாக மற்றுமொரு கோல் பதிவாக தற்பொழுது நிலைமை 3:0. கிட்டத்தட்ட கருணாகரன் அணியின் வெற்றி உறுதியாகியிருந்த நிலையிலேயே, ஐக்கியத்தின் ஆட்டம் ஆரம்பமானது. 6ஆவது,7ஆவது நிமிடங்களில் ஜோன்சனால் அடுத்தடுத்து ஐக்கியத்தின் சார்பாக கோல்கள் பதிவாக ஆட்டத்தின் முடிவு எவ்வாறும் அமையலாம் என்ற நிலைமை. 18ஆவது நிமிடத்தில் கிறிஸ் மீண்டும் ஒரு கோலை அடிக்க சமநிலையானது ஆட்டம். 27ஆவது நிமிடத்தில் மீண்டும் ஐக்கியத்தின் சார்பாக கோல் பதிவாக முடிவில் 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது ஐக்கியம்.
(ம-422)

# 786 அணிக்கு வெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 19
வவுனியா உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்துள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் முன்னெடுக்கப்பட்டுவரும் உதைபந்தாட்டத் தொடர் முஸ்லிம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் 786 அணியை எதிர்த்து நீயூ பைட் அணி மோதிக்கொண்டது. இதில் 786 அணி 7:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
(ம-23)

# அன்ரனிஸ், சென்.ஜோன்ஸ் இறுதியாட்டத்துக்கு தகுதி

யாழ்ப்பாணம், ஒக். 19
நெடுந்தீவு மத்திய சனசமூக நிலையத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குறித்த சனசமூக நிலையத்தால் நடத்தப்படும் 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரில் அன்ரனிஸ், சென்.ஜோன்ஸ் அணிகள் இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளன.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற அரையிறுதியாட்டங்களில் முதலில் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் நெடுந்தீவு அன்ரனிஸ் அணியை எதிர்த்து நெடுந்தீவு அன்ரனிஸ் யுத் அணி மோதிக் கொண்டது. அதில் நெடுந்தீவு அன்ரனிஸ் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் நெடுந்தீவு சென்.ஜோன்ஸ் அணியை எதிர்த்து நெடுந்தீவு உதயசூரியன் அணி மோதிக் கொண்டது. இதில் நெடுந்தீவு சென்.ஜோன்ஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.
(ம-23)

# மாவட்ட செயலக நலன்புரிக் கழகத்தின் இறுதியாட்டங்கள்



மருதங்கேணி பிரதேச செயலக அணி



யாழ்.மாவட்ட செயலக அணி



யாழ்.பிரதேச செயலக அணி



ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணி.



நல்லூர் பிரதேச செயலக அணி



யாழ்.மாவட்ட செயலக அணி

யாழ்ப்பாணம், ஒக். 19
யாழ். மாவட்டச் செயலக நலன்புரிக் கழகத்தினால் நடத்தப்பட்டுவந்த இருபாலாருக்குமான துடுப்பாட்டத் தொடரினதும், ஆண்களுக்கான உதைபந்தாட்டத் தொடரினதும் இருபாலாருக்குமான கயிறிழுத்தல் தொடரினதும் இறுதியாட்டங்கள் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

ஆண்களுக்கான துடுப்பாட்டத் தொடரில் நல்லூர் பிரதேச செயலகத்தை எதிர்த்து யாழ். மாவட்டச் செயலகமும், பெண்களுக்கான துடுப்பாட்டத் தொடரில் யாழ். பிரதேச செயலகத்தை எதிர்த்து ஊர்காவற்றுறை பிரதேச செயலகமும், ஆண்களுக்கான உதைபந்தாட்டத் தொடரில் யாழ். மாவட்டச் செயலகத்தை எதிர்த்து மருதங்கேணி பிரதேச செயலகமும் மோதவுள்ளன.

கயிறிழுத்தல் போட்டிகளில் ஆண்கள் பிரிவில் மருதங்கேணி பிரதேச செயலகத்தை எதிர்த்து தெல்லிப்பழை பிரதேச செயலகமும், பெண்கள் பிரிவில் கோப்பாய் பிரதேச செயலகத்தை எதிர்த்து சங்கானை பிரதேச செயலகமும் மோதவுள்ளன.

யாழ். மாவட்டச் செயலக நலன்புரிக் கழகத்தின் தலைவர் திருமதி இ.உதயகுமாரின் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் பா.செந்தில் நந்தனன், யாழ். வேலணை மத்திய கல்லூரியின் அதிபர் சி.கிருபாகரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.
(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

**வவுனியா உதைபந்தாட்டத் தொடர்**

யாழ்ப்பாணம், ஒக். 19

வவுனியா உதைபந்தாட்ட லீக்கில் பதிவுசெய்துள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் முன்னெடுக்கப்பட்டுவரும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் முஸ்லிம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத்தொடரில் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் காலிறுதியாட்டத்தில் வடதாரகை அணியை எதிர்த்து யங்ஸ்ரார் அணி மோதவுள்ளது.(ம-23)

**மைலோ கிண்ணத் தொடர்**

யாழ். மாவட்டச் செயலக விளையாட்டுத் திணைக்களம் மைலோ கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட உதைபந்தாட்ட அணிகளுக்கு இடையே நடத்தும் தொடரில் யாழ். உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கான ஆட்டங்கள் இன்று திங்கட்கிழமை அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி நிலையத்தில் ஆரம்பமாகின்றன. மேற்படி தொடரில் 15 அணிகள் பங்குபற்றுகின்றன.

**மத்தியின் கூடைப்பந்தாட்டத் தொடர்**

யாழ். மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபையினால் வடமாகாண பாடசாலைகளுக்கு இடையில் பொ.விபுலானந்தன் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் லீக் ஆட்டங்கள் யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்ட திடலில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் இன்று திங்கட்கிழமை காலை 7மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மல்லாவி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. பிற்பகல் 3மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் இராமநாதன் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.திருக்குடும்ப கன்னியர்மட அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி அணி மோதவுள்ளது. (ம-23)

# மீண்டும் வீழ்ந்தது இந்தியா

## அளவுக்கு அதிக நிதானம் ஆபத்தில் முடிந்தது



இந்தியா – தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான ஐந்து ஒருநாள் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் மூன்றாவது ஆட்டத்தில் 18 ஓட்டங்களால் வெற்றிபெற்று தொடரில் 2:1 என்று முன்னிலை வகிக்கிறது தென்னாபிரிக்கா.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க ஆரம்ப வீரராக அம்லாவுக்கு பதிலாக மில்லர் மாற்றம் செய்யப்பட்டு ஹொக்குடன் களமிறங்கினார். இணைப்பாட்டம் எடுபட்டது. ஆனால் சராசரி ஒருநாள் ஆட்டங்களுக்கு பேணப்படவேண்டியதைவிட கீழாகவே பேணப்பட்டது. அம்லாவை விட அதிகம் நிதானித்தார் மில்லர். இணைப்பாட்டமாக 72 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த வேளையில் ஆட்டமிழந்தார் மில்லர். மூன்றாவது வீரராக களமிறங்கிய அம்லாவால் முழுமையாக பத்து ஓட்டங்களைத் தானும் நிறைவுசெய்ய முடியவில்லை. தற்பொழுது தென்னாபிரிக்கா 87–2. டி ஹொக்குடன் பிளாஸிஸ் இணைய மீண்டுமொரு வலுவான இணைப்பாட்டம் பதிவாகியது. அரைச்சதம் கடந்தார் கொக். ஆரம்பத்தில் சிறிது நிதானித்தாலும் பந்துகள் பழக்கப்பட நொருக்கத் தொடங்கினார் பிளாஸிஸ். சீரான சராசரியில் பயணித்து அரைச்சதமும் கடந்தார். மறுமுனையில் சதம் கடந்தார் டி கொக். 60 ஓட்டங்களுடன் பிளாஸிஸ் ஆட்டமிழக்க சிறிது நேரத்திலேயே கொக்கின் இன்னிங்ஸிம் முடிவுக்கு வந்தது. வில்லியர்ஸ், டுமினியின் ஆட்டம் எடுபடவில்லை. தற்பொழுது இறுதி நம்பிக்கை பெக்கார்டின் மட்டுமே. தான் எதிர்கொண்ட முதல் 35 பந்துகளில் ஒரு பவுண்டரியைத் தானும் பெக்கார்டினால் அடித்துவிட முடியவில்லை. முடிவில் 270–7. பந்துவீச்சில் இந்தியா சார்பாக மோகித் சர்மா 2 இலக்குகளையும், ஹர்பஜன், அமீத் மிர்சா, அக்சர் பட்டேல் மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

300 பந்துகளில் 271 ஓட்டங்கள். ஆரம்ப வீரர்களாக ரோகித் சர்மா மற்றும் தவான். வழக்கம் போல் சொதப்பினார் தவான். பந்துகளை வீணடித்து அணிக்கு மேலும் பாரத்தை ஏற்படுத்தினார். 13 ஓட்டங்களுடன் தவான் வெளியேற இந்தியா 41–1. சிக்சருடன் அரைச்சதம் கடந்தார் ரோகித் சர்மா. 65 ஓட்டங்களுடன் டுமினியின் பந்தில் டுமினியிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். ரெய்னாவை எதிர்பார்த்திருக்க களமிறங்கினார் டோனி. கடந்த ஆட்டத்தின் தாக்கம் இந்த ஆட்டத்திலும் டோனியிடம் இருக்கவே செய்தது. நம்பிக்கை தரும்படியான சராசரியில் சென்று கொண்டிருந்தார். மறுமுனையில் அளவுக்கு அதிகமாக பந்துகளை வீணடித்து அரைச்சதம் கடந்தார் கோக்லி. 99 பந்துகளில் 77 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். கோக்லியின் அரைச்சதம் ஒருநாள் ஆட்டங்களில் இந்திய வீரர்களால் பதியப்பட்ட ஆயிரமாவது அரைச்சதமானது. டோனி 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இறுதி 5 பந்துப்பரிமாற்றங்களில் 55 ஓட்டங்கள் பெறப்படவேண்டும்என்றநிலைமை. இறுதிவரை போராடி 18 ஓட்டங்களால் கோட்டை விட்டது இந்தியா. (ம)



## இந்திய அணியின் பயிற்சியாளராக கேரி கிறிஸ்டன் மீண்டும் நியமனம்?

2011ஆம் ஆண்டு இந்திய அணி உலகக் கிண்ணம் வென்றபொழுது பயிற்சியாளராக இருந்தவர் கிறிஸ்டன். இவரையே இந்திய அணியின் பயிற்சியாளராக்க இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை முயன்று வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. 2008ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரை இந்திய அணியின் பயிற்சியாளராக இருந்தவர் கேரி கிறிஸ்டன். இவரது பயிற்சியிலேயே இந்திய அணி கிண்ணம் வென்று அசத்தியது. கிறிஸ்டனின் பயிற்சிக்காலம் முடிவடைந்த பின்னர் இந்திய அணியின் பயிற்சியாளரானார் டங்கன் பிளட்சர். டங்கன் பிளட்சரின் பயிற்சிக்காலமும் சில மாதங்களுக்கு முன்னர் முடிவடைந்தது. இதனால் பயிற்சியாளர் இல்லாமலேயே இந்திய அணி தொடர்ந்தும் செயற்பட்டு வருகிறது. புதிய பயிற்சியாளரை தேடும் நடவடிக்கையில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தொடர்ந்தும் ஈடுபட்டுவந்த நிலையில் கிறிஸ்டன் மீண்டும் பயிற்சியாளராக உள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம)

## 7000 அடி உயரத்தில் கிரிக்கெட் ஆட்டம்

நியூஸிலாந்தின் சுற்றுலா தூதுவர் சித்தார்த் மல்கோத்ரா, நியூஸிலாந்து அணியின் முன்னாள் தலைவர் பிளமிங் மற்றும் ஓய்வு பெற்ற வீரர்களான ஸ்டைரிஸ், சைமைன் டவுல் ஆகியோர் நியூஸிலாந்தில் உள்ள இசோபெல் கிளேசியர் என்ற மலைப்பகுதிக்குச் சென்று கிரிக்கெட் ஆடியுள்ளனர்.

பனிப் பிரதேசமான அந்த இடம், கடல் மட்டத்தில் இருந்து சுமார் 7 ஆயிரத்து 600 அடி உயரத்தில் உள்ளது. குறித்த மலைக்குச் சென்ற வீரர்கள் அங்கு கிரிக்கெட் விளையாடி தமது ஆட்டத்தை சமூக வலையத்தளங்களில் பதியவிட்டுள்ளனர். (ம)



## உறுதியானது சென்னையின் தடை

சென்னை, ராஜஸ்தான் அணிகளின் உரிமையாளர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டமை உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து இந்த இரண்டு அணிகளுக்கும் 2 வருட தடை விதிக்கப்பட்டது. இதனால் இந்த இரண்டு அணிகளதும் ரசிகர்கள் தமது அணியின் மீதுள்ள தடையை நீக்குமாறு கோரிக்கை விடுத்து வந்தனர். நீண்ட காலமாக இழுத்தடிக்கப்பட்டுவந்த இந்த பிரச்சினை குறித்த அணிகள் மீதான தடை உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து நேற்று முடிவுக்கு வந்தது. இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் பொதுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. அதில் இந்த இரண்டு அணிகளதும் நிலைமை குறித்து தீவிரமாக விவாதிக்கப்பட்டது. நீண்ட நேரமாக நடைபெற்ற இந்த விவாதத்தின் முடிவில் சென்னை, ராஜஸ்தான் அணிகளுக்கு விதிக்கப்பட்ட தடை நடைமுறைக்கு வருவதாக அறிவிக்கப்பட்டது.



சென்னை, ராஜஸ்தானுக்குப் பதில் வேறு இரண்டு அணிகள் அடுத்த வருட ஐ.பி.எல். தொடரில் விளையாடும். ஆனால் இரண்டு வருடங்களுப் பின்னர் (சென்னை, ராஜஸ்தான் அணிகளுக்கான தடை நீங்கிய பின்னர்) புதிதாக இணைக்கப்பட்ட அணிகளை கைவிடவும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை விரும்பவில்லை. இதனால் 2018ஆம் ஆண்டு முதல் மொத்தமாக 10 அணிகள் ஐ.பி.எல். தொடரில் விளையாடும். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண வரலாற்றில் நீங்கள் எப்போதும் கண்டிராத நிகழ்வு உங்கள் நகரில் கணக்கிட முடியாத இலட்சத்துக்கும் மேற்பட்ட

# டிசைன்களில் தொகையான ஆபரணங்கள்

யாழ்ப்பாண இளைஞர் யுவதிகள் தங்க முலாம் பூசப்பட்ட மற்றும் ரேடியம் பூசப்பட்ட அவுஸ்திரேலியா வைர நகைகளைக் கொள்வனவு செய்யலாம்.

**உரிய ஏற்றுமதி விலையான ரூ.1500/= & 3000/= வரையிலான நகைகளுக்கு**

# ரூபா. 150/=, 350/= மட்டுமே

**2015 ஒக்ரோபர் 19 ஆம், 20 ஆம், 21 ஆம், 22 ஆம் திகதிகளில்**

## (திங்கள், செவ்வாய், புதன், வியாழன்)

நேரம் : முற்பகல் 10.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை

**(பகல் உணவு இடைவேளை கிடையாது)**

ரூ.150/= இற்கும், ரூ. 350/= இற்கும் விற்பனை செய்யும் ரூ.3000/= ஏற்றுமதி பெறுமதி கொண்ட 10 இலட்சம் நகைகளை இன்றே கொள்வனவு செய்யுங்கள்.

இவ்விளம்பரத்தில் எல்லா டிசைன்களையும் குறிப்பிட இடமில்லை. சில ஆபரணங்களை மட்டுமே குறிப்பிட்டுள்ளோம்.

| | |
|---|---|
| * மும்பாய் தங்க முலாமிடப்பட்ட செயின் பென்ரன் | ரூ.150/=Only |
| * சிபரா தங்க முலாமிடப்பட்ட கம்மல் | ரூ.150/=Only |
| * அமெரிக்கன் டைமன் கல் பதித்த கம்மல் | ரூ.150/=Only |
| * மேல் நாட்டு மாதிரியிலான தோடுகள் | ரூ.150/=Only |
| * அவுஸ்திரேலிய டயமன்ட் மோதிரம் | ரூ.150/=Only |
| * அவுஸ்திரேலியா டயமன்ட் செயின் | ரூ.350/=Only |
| * பஞ்சாப் பியூட்டி குயின் மாலை | ரூ.350/=Only |
| * அமெரிக்க டயமன்ட் நெக்லஸ் | ரூ.350/=Only |
| * கிரிஸ்டல் நெக்லஸ் செட் | ரூ.350/=Only |
| * ஹைட்ராப்பாத் முத்து நெக்லஸ் செட் | ரூ.350/=Only |
| * இத்தாலிய டயமன்ட் தோடுகள் | ரூ.350/=Only |
| * ரேடியம் பிளேடிங் டயமன்ட் பிரேஸ்லெட் | ரூ.350/=Only |
| * ஜெய்ப்பூர் குண்டன் நெக்லஸ் செட் | ரூ.350/=Only |

**99% புதிய டிசைன்கள்**

**விசேட சலுகை : விவாக சடங்குகள் மற்றும் வைபவங்களுக்கு ரூபா . 500/= & 5000/= வரை ஆபரணங்கள்**

## இடம் : வீரசிங்கம் மண்டபம்

அனுமதி இலவசம்

இல.12. கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம்

T.P077 6047788


## போராடி வென்றது ஈகிள்ஸ்

யாழ்ப்பாணம், ஒக். 19

வவுனியா உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்துள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் முன்னெடுக்கப்பட்டுவரும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் நேற்று இடம்பெற்ற காலிறுதியாட்டம் ஒன்றில் யூனிபைட் அணியை எதிர்த்து ஈகிள்ஸ் அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா இரு கோலினைப் பெற்றதினால் ஆட்டம் சமநிலைத் தவிர்ப்பு வரை நீடித்தது. சமநிலை தவிர்ப்பு உதைகளில் ஈகிள்ஸ் அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (ம-23)

## இந்திய டெஸ்ட் அணி இன்று அறிவிப்பு



இந்தியா – தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான 4 ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் அடுத்த மாதம் ஐந்தாம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் குறித்த தொடருக்கான இந்திய அணி இன்று அறிவிக்கப்படவுள்ளது.

சமீப காலமாக டெஸ்ட் அணியில் இடம்பிடித்துள்ள ஹர்பஜன் இந்தத் தொடரிலும் இடம்பிடிப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவே உள்ளன. அஸ்வின் காயம் ஓரளவு குணமடைந்து விட்டதால் அவரும் அணிக்கு திரும்புவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமாகவே உள்ளன. இலங்கைக்கு எதிரான கடைசி டெஸ்ட்டில் தவறான அணுகுமுறை காரணமாக அசாந் சர்மாவுக்கு ஓர் ஆட்டத்தில் விளையாட தடை விதிக்கப்பட்டது. இதனால் தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது ஆட்டத்தில் அவர் விளையாட முடியாது. சமயால் சர்மாவின் இடம் நிரப்பப்படலாம். (ம)


# கோலாகல திறப்பு விழா அழைப்பு

## SUNJEYS MULTI MARKETING CENTER

என்னும் வியாபார ஸ்தாபனம் இல. 713 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இன்று (19.10.2015) திங்கட்கிழமை நண்பகல் 12 மணி முதல் ஒரு மணிவரை உள்ள சுப வேளையில் மங்கலகரமாக திறந்து வைக்கப்படுகின்றது.

திறப்பு விழாவை முன்னிட்டு இன்று தொடக்கம் எதிர்வரும் 30.10.2015 திகதி வரை விசேட கழிவு 10% வழங்கப்படும்.

இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட அசல் தோல் (PURE LATHER) சப்பாத்துக்களும் (6 மாத உத்தரவாதத்துடன்), தோல் பொருள்களும் பெற்றுக்கொள்ளலாம். மேலும் இந்தியாவில் இருந்து சட்டபூர்வமாக எந்தப் பொருள்களும் விமானம் மூலம் 10 நாள்களில் பெற்றுத் தரப்படும். (நிபந்தனைக்கு உட்பட்டது)

713, HOSPITAL ROAD, JAFFNA

T.P 021 221 7070, 0777474111


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.